

# தில்லைச்சிவன் கவிதைகள்

தில்லைச்சிவன்

'தில்லைச் சிவன்'
கவிதைகள்

# படையல்

எழுத்தணிசொல் பொருள்யாப்பு
இன்னவென அறியாயான்
பழுத்த பெரும் புலவர்களின்
பாடல்களைச் சுவைத்ததனால்
தொடுத்த இவை 'கவிகளென'த்
தோன்றாத துணையாகி
எடுத்தெடுத்துத் தந்தவளை
எண்ணியிந்நூற் படையலிட்டேன்.

செந்தமிழ்ச் செல்வி வெளியீடு
வேலணை.

கிடைக்குமிடம்
161 B, கனல்பாங்வீதி,
கொழும்பு 6.

தில்லைச் சிவன் கவிதைகள்.
தொகுப்பு நூல்:


| | | |
|---|---|---|
| ஆசிரியர் | :- | தி. சிவசாமி (தில்லைச்சிவன்) |
| முதலாம் பதிப்பு | :- | 1998. |
| அச்சுப் பதிப்பு | :- | அட்மிரல் கிரபிக்ஸ்<br>வெள்ளவத்தை, கொழும்பு - 06. |
| விலை | :- | ரூபா 100/= |
| வெளியீடு | :- | செந்தமிழ்ச் செல்வி வெளியீடு<br>'கூடல்' வேலணை. |


## THILLAISIVAN KAVITHAIKAL
## (AN ANTHOLOGY OF SELECTED POEMS)


| | | |
|---|---|---|
| **Outher** | :- | **Sivasamy (Thillaisivan).** |
| **First Edition** | :- | **1998.** |
| **Printed by** | :- | **Admiral Griphics, Wellawatta, Colombo - 06.** |
| **Price** | :- | **Rs. 100/=** |
| **Publishers** | :- | **Senthamil Chelvi Veliyeedu.<br>"Koodal" Velanai.** |

MR. N. SRISABESAN.

தில்லைச்சிவன்

# என் உரை

தற்போது, சபைகளிலும் ஆய்வரங்குகளிலும் பேசுவதையும், இதழ்களில் எழுதுவதையும் பார்க்க 1950 பதுக்கு முன் யாழ்ப்பாணம் இலக்கியப் பாலைவனமாக இருந்ததுவோ என எண்ணத் தோன்றுகின்றது. அக்காலப் பகுதியில்தான் சோமசுந்தரப் புலவர் முதல் வேலணை பேரம்பலப் புலவர், தில்லைநாப் புலவர், இளமுருகனார் சோ.நடராசா, பண்டிதர் நல்லதம்பி, அல்வாயூர் செல்லையா, நவநீதகிருஷ்ன பாரதியார், யாழ்ப்பாணன், சு.நடேசபிள்ளை, ஆனந்தத்தேன் பண்டிதர் கா.சச்சிதானந்தன், க.வேந்தனார், மதுரகவி நாகராசன், கவிஞர் பசுபதி முதலிய பலரின் கவிதை நூல்கள் வெளிவந்திருந்தன என்பது மறக்கப் பெற்றோ அல்லது மறைக்கப்பட்டோ போனது, மகாகவியின் 'வள்ளி' கவிதைநூல் வரதர் வெளியீடாக வந்திருந்தது.

இன உணர்வும், சாதி சமூகக் கொடுமைகளும் அடக்கி வாசிக்கப் பெற்ற அந்தக் காலத்தில்;

> எந்திரம் போல் உழைப்பவனோ பசியால்வாடி
> ஏங்கியழும் குழந்தைமுகம் கண்டுநைந்து
> சிந்தித்துச் சுரண்டும்முத லாளிமீது
> சினங்கொண்டு சிரமறுக்கத் துணிவானன்றி
> வந்தித்து அடிதொட்டு வயிறு காட்டி
> வாழவழி பார்த்திடான் மானம் காத்த
> செந்தமிழான் செருவென்றால் வாளைத்தொட்டு
> சீறிஎழும் சிங்கமடா சிந்தித்தாயா,

என்றும் இதுபோல வேறும் பல எனது பாடல்கள் இராவணனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'புயல்' இதழிலும், நடேசையரின் 'வீரனி' லும் ஈழகேசரியிலும், சுதந்திரன் ஏடுகளிலும் வெளிவரக் கண்டு மகிழ்ந்தேன்.

அக்கால இலக்கிய முயற்சிகளாக 'தமிழன்' கலைச்செல்வி ஆகிய இலக்கிய ஏடுகளைத் திங்கள் தோறும் இடைவிட்டு இரண்டு ஆண்டுகளாக வெளிக்கொண்டு வந்தேன், என்பதை அறியாதாருக்கு அறிமுகம் செய்து வைப்பது தற்புகழ்ச்சி ஆகாது.

**கவிதைகள்**

இதன் தொடர்பாக 1961, 1969, 1985, 1986, 1993, 1994 ஆம் ஆண்டுகளில் ஆறு கவிதைத் தொகுதிகளையும், வேலணைத் தீவுப்புலவர் வரலாறு, அந்தக்காலக் கதைகள் என்னும் நூல்களையும் நாவலர் வெண்பாவினையும் வெளியிட்டேன். இவ்வாண்டு "பூஞ்சிட்டு" என்ற பாப்பாப்பாட்டு தொகுதி ஒன்றும் வெளிவந்தது. இப்போது எனது கவிதைகள் சில, வேறு பெயர்களுடன் சில இதழ்களில் வெளிவருவதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். இப்படியே போனால் எனது கவிதைகள் சுவீகரிக்கப்பட்டுவிடலாம் என்பதும், நான் உயிருடன் இருக்கும்போதே மீண்டும் பதிப்பிக்க வேண்டும் என்ற ஆவலும் மீதூர, எனது முன்னைய கவிதைகள் சிலவற்றை "திருத்தியும் புதுக்கியும்" இந்தத் பதிப்பை வெளியிடுகின்றேன்.

"நான்" சுய புராணத்தை, முதலில் மல்லிகைப் பந்தல் வெளியீடாகச் கொணர்ந்த ஜீவாவுக்கும் கனவுக் கன்னியை வெளியிட்ட வேலணை பாரதி இளைஞர் கழகத்தினருக்கும் "தாய்" வெளியிட்ட அன்பு வெளியீட்டு அதிபர் புதுமை லோலனுக்கும் எனது நன்றிகள். இந்நூல் அச்சுப்பெற உதவிய வெள்ளவத்தை அட்மிரல் கிரபிக்ஸ் தாபனத்தாருக்கும் வெளியிட்டுதவிய எனது துணைவி செந்தமிழ்ச் செல்விக்கும் எனது அன்பும் நன்றியும் வாழ்த்தும்.

------- தி. சிவசாமி (தில்லைச்சிவன்) ---

## உள்ளுறை


1. என்னுரை
2. தாழம்பூ
3. வீரசக்தி விநாயகர்
4. தடுத்தாளத் தந்தை
5. உந்து சக்தி.
6. தஞ்ஞனானேன்.
7. பெருங்குள நாச்சி.
8. நல்லூரின் நாயகன்
9. முருகனின் பக்கம்
10. இரக்கம் இல்லா இதயம்.
11. அனுபவத்தாற்றுப்படுத்தல்
12. பக்தி பிறக்கவில்லை
13. வேல்வாழ்க
14. வேலவன் ஆட்சியில்
15. வாழ்ந்து போவீர்
16. தொண்டன்
17. முருகன் எங்களின் தலைவன்
18. வேண்டுதல்
19. நேர்த்தி
20. முரண்
21. நல்லூர் திருக்கோவிலாய்
22. அபயம் தந்தாளுதியே
23. அருள் தருக.
24. உரைக்கல்
25. முன்னுரை
26. ஆசிரியரைப்பற்றி
27. ஆதரவாளன்
28. தமிழ் வாழ்த்து
29. அற்புதஞ் செய்
30. கற்றே வாழ்வீர் கன்னித் தமிழை.
31. நாடில்லாத் தமிழர்

கவிதைகள்

32. விதி செய்த வினை.
33. அவள் முடிவு
34. பாவி உயிர் போம் வரையும் பாடு
35. தெய்வ வாழ்வு
36. பயமே உண்டு
37. பாட்டெதற்கு
38. இன்பப் பொங்கல்
39. ஈயும் சிலந்தியும்
40. துயிலும் கவியும்
41. துயர் மருந்து
42. மூடுதிரை எதற்கு
43. துன்பத்தில் இன்பம்
44. சென்றுவிட்டாள்
45. இரவுக்கொரு செய்தி
46. மோர்க்காரி
47. ஏனிந்தக் கண்ணீர்
48. பாரியின் காதல்
49. பட்டணத்து மச்சினி
50. புதுமோகம்
51. நெஞ்சின் மலர்
52. ஆவல்
53. கனவுக் கன்னி
54. அணிந்துரை
55. கடவுளும் தாயும்
56. தாய் நாடு
57. காலைக் கதிர்
58. வாடை
59. நர்த்தனம்
60. மகாவலி
61. தை பிறந்தது
62. தைப் பொங்கல்
63. வசந்தம்

64. கவிதைத் தெய்வம்
65. பாரதி நினைவு
66. நாட்டுக்கொரு நாவலன்
67. வன்னியசிங்கம்
68. காலா உனக்கு ஐயோ
69. எமது நாடு
70. புகழ் பாடல் எந்நாள்
71. ஆரியம்
72. ஐயோ தமிழ்ச் சாதியே
73. இளைஞர் பாட்டு
74. அந்தநாள்
75. சதிர்
76. என்னூர்
77. கதை சொன்ன கவிதை
78. தாபம்
79. ஏதோ உன் உள்ளம்
80. கட்டியொரு முத்தமளியே
81. முடிவு என்ன
82. பொன்விலங்கு
83. அத்தானைக் காத்திருப்பேன்
84. நெடுவழி
85. வாழ்வரசி வந்தாள்
86. மச்சான்
87. புலவர் மணி தில்லை நாதப் புலவர்
88. வேந்தனார்.
89. பொன் குமாரவேற்பிள்ளை
90. தருமயுத்தம்
91. என்றுமுள தென்தமிழ்
92. நான் (சுயபுராணம்)



## தாழம் பூ

பசிய மென்மையும் பட்டொளி வண்ணமும்
பன்னீருறை நறு மணமும்
பொசிய நின்றென்ன பொய்க்கரி புகன்றதால்
பூசைக்கு உதவாதென
வசியும் வாழ்வும் நீத்த மடற்றாழை
மலரும் என்வாழ்வும்; ஒன்றே
கசியும் அன்பிலாப் பொய்யனேன் கவி
கட்டிடும் ஆசை யென்னெ!

பாடடி னாலிறை வான்புகழ் பாடிப்
பரவிய மெய் அடியார்
காட்டிய செந்நெறி யிற்சில பாடவும்
காதல் கொண்டேன் அதனால்
ஈட்டும்பழிபாவம் இகழ்சிசகள் யாவையும்
எடுத்த பொருட் சிறப்பு
ஒட்டும் எனத் துணிந்தே, கலைத்தேவீ
உனதருள் வேண்டினனே!

## 3. வீரசக்தி வினாயகர்

அல்லல் நீக்குவார் ஆனை முகத்துவேள்
வெள்ளைப் புற்றடி வீரசக்கதி வினாயகர்
தொல்லை வல்வினைத் துன்பங்கள் நீக்குசீா
வல்லபை துணைக் கொண்டவர் வாழ்கவே.

வழித்துணை ஆகி வருமிவர் நினைத்திட
விழித்துணை யாக வீற்றிருந் தாள்பவர்
அனைத்தெலும் பும்நெக அரற்றும் பொழுதுஎம்
வினைத் தழும்பற வீடும் விநாயகர்.

சந்தனக் காப்பு மேனியன், சந்நிதி
வந்து நெஞ்சில் வழுத்திநின் றேதொழ
சிந்து கண்ணீர் துடைத்து அருள்செயும்
விந்து வேழம் விநாயகக் கடவுளே.

புற்றிடங் கொண்டு விட்டக லாதுமண்
பற்றி நின்று பாலிக்கும் ஆரியன்
அற்புதங் கள்செய் அந்தணன் மணக்கும்பான்
உற்றெ மைப்புரந் தாள்உமை பாலனே.

சீத வேலிசூழ் வேலணைத் தீவினோர்
ஓத முன்வந் துதவுந் தயாபரன்
போத ஞானப் புண்ணியன், திருமணக்
காத லார்தொழச் சேர்க்குங் கருணையான்

பந்து மெல்விரல் உமைஅவள் பங்கனும்
சிந்து வீரச் சிறுவன் முருகனும்
வந்து நின்று வணங்கும் பிரணவ
மந்திரப் பிள்ளை யாரெம தப்பனே.

மாடு கல்வி தருமொளி மாணிக்கம்
கோடுஎலாந் தவிர்த் தோட்டுமங் குசத்தினார்
வாடுஞ் செய்க்குறு வான்மழை ஆகிவெண்
கோடு கொண்டெழு தாமறை நாயகன்.

தொழுத கையின் துன்பம் துடைப்பவர்
அழுத கண்ணீர் அழித்து அணைப்பவர்
எழுது மென்கவிப் பொருளாய் புகுந்துஓர்
பழுது மின்றிப் பாலிக்கும் பிள்ளையார்.

வேண்டுவார் வினை நீக்கி அருளுவார்
தூண்டு மன்பர் நெஞ்சிற் சிறுதுயர்
காண்டல் தாளா தருளுங் கயமுகன்
நீண்ட பாதம்என் நெஞ்சில் நிமிருமே.

அண்டம் யாவையும் பானை வயிற்றினுள்
மிண்டி உள்வைத்து மேலும்அப் பாலுமாய்
வீண் டெழுந்த விநாயகன் எம்முளோர்
குன்றி மாமணி போலக் குலவுவார்.

மண்கும் பான்பிள்ளை யாரை மனத்துளே
எண்ண உள்ளம் இரங்கி இமைமடற்
கண்ணின் நீர்வரக் கைகள் சிரங்கொளும்
விம்மும் எம்முயிர், வினைகள் ஒடுங்குமே.

## ௬. தடுத்தாளாத் தந்தை

பச்சிலையுந் தண்ணிரும் பாலறுகும் நாண்மலரும்
வைச்சுஎன்றன் திருவடியை வணங்குவார் கண்டிருந்தும்
மெச்சுமுயர் சிரத்தையினால் மேவரிய சிவனடிக்கே
அர்ச்சனைசெய் துய்நெறிக்கே ஆளாகா தலைக்கழிந்தேன்

திருக்கோயில் சென்றிறைஞ்சித் தீபமிட்டுத் திருவலகால்
பெருக்கிமெழுக்கிட் டடியார் பேணுதலைக் கண்டிருந்தும்
ஒருக்காலும் சிவப்பணியின் உயர்வைமனத் தெண்ணாது
செருக்கோடு இருந்துவிட்டேன் சிவனேயெனைக் காத்தருள்வாய்

கண்கள்அழக் கைகள்தொழக் காதலொடு திருமுறைநற்
பண்பயில்வார் பலராகப் பார்த்தவரைப் பரிகசித்த
என்செயலை நினைந்தின்று இரங்கியென்ன எல்லாமும்
உன்செயலே என்றொதுங்கி ஓய்வேனே பாராபரமே.

தாடிமுடி காவியுடை தரித்தடியார் கோலமொடு
வாடிவரு வோர்க்கன்னம் வழங்காது வாசல்வரை
ஓடியவர் களைத்துரத்தி உள்வந்து உண்டுமகிழ்
கேடிஎனக் கருள்கவெனக் கேட்கமனம் நாணுவனே.

திருவிழாக் காட்சியினைத் தரிசித்து நின்னடியார்
உருகுமனத் தோராய்மிகு உன்மத்தர் ஆதல்கண்டும்
அருகுஇள மங்கைமயல் ஆய்திரிந்த நாயேற்கு
தருதிஅருள் எனச்சிரிப்பீர் தாமோ தாயாபரனே?

கொலைகளவு பொய்சூது கூடாத கள்காமக்
கலைபலவும், பயின்றிழிந்து "காவலி" எனப்பட்டம்
குலவுமெனைத் தடுத்தாண்டு கொள்ளாத குற்றமருள்
நிலவுமெந்தைக் காகாதே ஆதலினாற் காத்தருள்க.

## 5. உந்து சக்தி

நெஞ்சத் தாமரை வெண்மலர் அலர்த்தி
நித்தமும் அன்புத் தேனதிற் பிலிற்றி
வஞ்சம் அற்றென் மனம் புதிதாக்கி
வாசிக்கப் பல நூல்சேர்த்து, நாவில்
தஞ்சமாகும் கடுஞ்சொல் தவிர்த்து
கனிச்சுவை மொழி பேசப் பழக்கி
கெஞ்சினே னுன்றன் திருவருள் வேண்டி
கிளருஞ் செஞ்சொற் கவிதரு வாயே!

கவிதை கேட்கும் அரங்குகள் சென்றுன்
கருணை பெற்றவர் கவிகளைக் கேட்டேன்
புவி புகழ்ந்துகை தட்டிக் களிக்க
புதிய சொற்சிலம் பாடினர் என்னே
துணிவும் வீரமும் தொலைந்தது, பெண்மை
துகிலுரிந்தது, அடிமையின் மோகப்
பிணியும் நோயும் சூழ்ந்தன,வஞ்சப்
பேய்கள் வெற்றிகொண் டாடினர் அம்மா.

அச்சம் அற்ற மனத்தினை அருள்க
அடிமை வாழ்வின் மிடியினை ஓட்டி
இச்சகத்து மனிதர்கள் இன்போ
டிணங்கி வாழும் வழியினைக் காட்டும்
மெச்சு வான்புகழ் கவியொன்றே கட்ட
வேண்டி நின்பாதம் தொழுது நிற்கின்றேன்
உச்சப் பேறளித் துயர்கல்வி ஞானத்
துந்து சக்தியாய் உளத்துதிப் பாயே.

## 6. தஞ்ஞனானேன்

செந்தீயின் தளிர்மேனி, ஒளிகொள் வண்ணம்
சேர்ந்தாரைப் பசுமைசெயும் தெய்வம், பூவில்
வந்தாளும் திருமாது, மாயன் பாதம்
வருடும்பூ, உலகைவாழ் விக்கும்பொன்னி
பந்தேர்ஈர் தனச் செல்வி, உயிர்கட்கன்பு
பாலிக்கும் அன்னை, உளப் பளிங்கில் தோன்றி
தந்தாள்நற் றொழில் அருள்செய் நயன நோக்கில்
தஞ்ஞனா னேன்அடிகள் சரண்பெற்றேனே.

## 7. பெருங்குள நாச்சி

மறப்பித்து, ஊட்ட மறுத்திடு வாயேல்,
மற்று என்செயல் ஆவதொன் றுண்டோ!
துறந்து முற்றத்துப் பூதூளி அள்ளி
தூற்றி நிற்கநீ பார்த்துற்பாயோ!
நினைத்து, விம்மி விறுவிறுத்தூறி,
நிமிருங் கொங்கையின் வேம்பைத் துடைத்து
அணைத்து ஊட்டு வாயன்றோ? என்னை,
ஆளும் நாச்சி பெருங்குளத் தம்மா

சப்பிக் சப்பிக குதப்பும்பல் தைக்க,
தள்ளிவிட் டாங்கண் தரியாது ஒளித்து
எட்டி நின்றெனைப் பார்த்துள் இரங்கி
எழில்கொள்பூவிழி அருள்பெய மென்கை
தட்டி வாடா எனத்தூக்கிக் கொஞ்சி
தலையைக் கோதி மோந்துபால் ஊட்டும்
அத்தாய் நீயலால் வேறெவர் என்னை,
அணைப்பர் பெருங்குளம் மேவுமம்மாளே!

நீலி, ஆலிலை போல்வயிற் றாளே,
நித்தில ஒளிச் சிரிப்புதிர்ப் பாயே
மாலின் கூடப் பிறந்தநற் றங்காய்,
மறை முதல்வன் கட்டிய தங்கத்
தாலிப் பொட்டுச் சுடர்கழுத் தாளே,
தரிக்கிலேன் துயர் தாங்கிலேன், நீரார்
வேலி சூழும் பெருங்குளம் மேய
விமலிவேண்டும் விடுதலை தாவேன்.

## 8. நல்லூரின் நாயகன்

வானங் கடலைத் தொடு மிடத்தில் - ஒளி
வர்ண ஜாலத்துளோர் பொன்முகத்தை - கண்டு
மோகங் கிறுக்க முருகா வேன்றேன் - அங்கு
முத்தொளி சிந்த நகை புரிந்தார் - அந்த
ஞானக் கதிர்ப்பரி வட்டத் துள்ளே - இளம்
ஞாயிறு போன்றே, சுடர்கள் மிக்க - நீல
வானமயில் ஏறி வந்தார் என்றே - கண்டு
வாயடைத்துக் கைகள் கூப்பி நின்றேன்.

இல்லாது இருளை எரித் தொழித்து - பொருள்
எல்லாமாய் தோன்றி எதிர்ஒளித்து - அருள்
வல்லமை காட்டியிவ் வையகத்தை - நன்று
வாழவைக்கும் சக்தி வேலெடுத்து - எமைக்

கொல்ல வரும்பகைக் கூற்றொழித்து - உயர்
கோவிற் கொடிமதிற் சூழல்புக்கு - செல்வ
நல்லூர் படைவீடு பாடி கொண்டார் - தொண்டர்
நாதர் எம் நாயகன் நாமடியோம்.

## 9. முருகனின் பக்கம்

"முப்பொருட்கும் முதலான மூல மூர்த்தி
முருகனே" என்பார்கள் பக்கம்சார்ந்து
எப்பொழுதுந் தொழுவேன்பொன், மலர்ப் பாதங்கள்
ஏத்துவேன், எனையாள்சற் குருவேயாவாய்!
இப்பதிவந் தெழில்ஞானச் செல்வந் தந்து,
இருவினையுஞ் சாராத பேரின்பத்து,
வைப்பதெப்போ? எனக்கேட்டு மயங்கு கின்றேன்
வளஞ்சேர்நல் லூர்க்கோவில் கொண்டவேளே!

## 10. இரக்கம் இல்லா இதயம்

முருகா! முருகா நல்லூரின்
முதல்வா என்றே வாய்குளற
உருகா நிற்பர் நெஞ்சார
உள்ளி விம்மி உன்மத்தத்
திருவார் நிலையிற் றலைப்பட்டுத்
திரிவார் இவர்க்கோர் பொருட்டோநான்
அருள்சேர்த் தெனைநீ அணைத்தாலும்
அதற்குந் தரமாம் வாறறியேன்.

அன்பும் இல்லை நின்மாட்டு
அருளும் வரவு அற்றநிலை
முன்புச் செய்த பவ வினையே
முதலாய் கொண்டேன் முருகாவோ!
என்செய்வேன் "பொற் பாதமலர்,
எண்ணி அழுதால் அருள் பெறலாம்"
என்றாற்போலென், அழுதற்கும்
ஈரம் இல்லா இதயத்தேன்.

அடுத்து அடுத்துத் துயரங்கள்
அடையப் பெற்றுத் திருவடியைத்
தொடுத்துத் தொழுது ஆசையெலாந்
துறக்க மறுக்கு மென்மனசு

படுத்தும் பாட்டைக் கெடுத்தருளிப்
பற்றார் வத்தைத் திருவடிக்கே
எடுத்தால் நானும் உய்வேனோ
எழில்சேர் நல்லூர்ப் பெருமானே!

## 11. அனுபவத் தாற்றுப் படுத்தல்

கண் கண்ட காட்சிகளில் - முருகனை
காணும் உளத்தைப் பெற்றால்
பண் கொண்ட பாடல்களால் - அன்புப்
பக்தி வளர்த்து விட்டால்
திண்திறற் வீரர் முன்னே - முருகனை
சேனாதி பதியாய் கண்டால்
மண் கொண்ட வாழ்வினையே - நேர்ந்து
மனிதத்தை வேண்டி நிற்போம்.

ஊண் உடை ஓய்தலின்றி - வாழும்
உயிரெலாம் ஒன்றி ஒன்றாய்
தேனடை வண்டுகள் போல் - முருகனின்
தேஜசைச் சுவைத்து நிற்போம்
கூனுடைக் குணங் குறிகள் - பந்த
பாசங்கள் விட்டு உண்மை
ஞானன் திருவடி சேர்ந் - தின்பம்
நண்ணலாம் வம்மின் நல்லூர்.

போற்றுதல் எமது வேலை - அருள்
பொழியுங்காண் பீரே நல்லூர்
தோத்தரித் தன்பு செய்வார் - அடித்
தொண்டிற் சிறந்து நிற்பார்
கூற்றினை வெற்றி கொண்டே - என்றும்
குறைவிலா வாழ்வு கொண்டார்
போற்றிநல் லூரின் கந்தா - ஓம்
போற்றி "ஓம் நமச்சிவாய".

## 12 .பக்தி பிறக்கவில்லை

பக்தி பிறக்க வில்லை - முருகனைப்
பாட நினைத்து விட்டேன்
சக்தி அருளுமில்லை - தாள்களின்
தண்டை ஒலிக்கவில்லை
செக்கச் சிவந்த முகம் - என்றன்
சிந்தைக்கும் எட்டவில்லை
பக்கத்துச் சக்திகளும் - ஒழித்தென்
பார்வைக்குத் தப்பிவிட்டார்.

வேலும் மயிலும் கண்டேன் - வெறும்
வேடிக்கை என்று கொண்டேன்
பாலும் மலரும் வைத்து - பல
பக்தர்கள் தொழுது நின்றார்

நாலுந் தெரிந்த நல்லோர் - சிலர்
நடுங்கி தொழு தழுது
மாலுறக் கண் டிவர்கென்
வந்தது என் றதிர்ந்தேன்.

பெண்கள் கண் சிந்தி நின்றார் - இறை
பித்தருங் கண் கழுன்றார்
திங்கள் முகம் வாட - நின்று
செல்வருஞ் சிலர் அழுதார்
இங்கிவர் இவ்வாறழ - முருகன்
என்மனத்தைப் பிசைந்தான்
கண்கள் உகுந்தன நீர் மறைத்துக்
கையால் அழித்து விட்டேன்.

## 13. *வேல் வாழ்க!*

முன்னைச் செய்த பாவ வினைகெட,
முருகன் நாம பசனைகள் பண்ணுவோம்
அன்னை,அப்பன்,ஆருயிர் நாயகன்
அன்பன் பிள்ளை ஆகநல் லூருறை
பொன்னின் வேலன் பூவடி நெஞ்சிடம்
புனைந்து போற்றுதல் நம்கடன் அவரருள்
தன்னைச் சேர்த்து தவத்தின் முயல்தலால்
தலைப்பட் டீசன் தாள்சர ணாகுமே.

சமரசூரபன் மாவைத் தடிந்தவேல்!
சாகரம் வற்றிச் சுவற வடித்தவேல்!
அமரர் வெஞ்சிறை மீட்டவேல்,அவுணர்தம்
அசலக் கோட்டை நொறுங்க வெடித்தவேல்
விமல நாதன் கையில் விளக்கும் வேல்
வீரவேல் வெற்றி வாகைவேல் ஈழவர்
அவலந் தீர்க்கும் வேல் நல்லைத் திருக்கோவில்
அமர்ந்தருள் செய்யுந் தங்கவேல் வாழ்கவே!

கானவள்ளியி னொளிமிகு மருள்தரும்
கண்ணின்வேல், எம்மைக் காத்திடும் காந்தவேல்
மானின் கூர்விழி பொய்கைத் தடம்பயில
மாயவேல் புலித்தோல் ஒளிப் புள்ளிவேல்

வானின் றொல்கிச் சுடர்தரும் வைரவேல்
வளருஞ் சூரியக் கதிர்கள்வேல் கல்விமெய்
ஞானவேல்மன மாயயை இருள்கெட
நம்மைஆளுடை நல்லைவேல் வாழ்கவே!

## 14. வேலவன் ஆட்சியில்

அச்சம் இல்லை அச்சம் இல்லை என்று பாடு - வேலன்
ஆட்சியிலே வீழ்ச்சி இல்லை என்று பாடு
இச்சகத்தெல் லாருங்கூடி எதிர்த்த போதும் - வேலன்
இலட்சியத்தை வென்றெடுப்பான் என்று பாடு.

உண்மை வெல்லும் உண்மை வெல்லும் என்று பாடு - நெஞ்சில்
உறுதியும்நல் லூருமுண்டு என்றுபாடு
துன்பஞ் செய்யும் பகை அடக்கும் என்று பாடு - வேல்
துள்ளி வரும் வெம் பகையே தூர ஓடு.

பச்சை மயில் வாகனத்தான் என்று பாடு - அவுணர்
பயங்கரத்தைப் பங்கஞ் செய்வான் பக்தி கூடு
அச்சம் இல்லை அச்சம் இல்லை என்று பாடு - வேலன்
ஆட்சியிலே மாட்சியுண்டு அதனைத் தேடு.

## 15. வாழ்ந்து போதீர்

கண்களாற் காண வில்லை கதைத்தும் பழக்கமில்லை:
எங்களில் ஒருவனாக இல்லங்கள் தோறும் வந்து
கண்கள்போற் காக்கும் அன்புக் கடவுள் முருகன் என்றார்
கண்களாற் காணாமலே காதல் வளர்த்து விட்டேன்.

திங்களின் குளிரும் ஒளித் தேஜசும் பூமுகமும்
செங்கையில் வேலுங்கூவும் சேவற் கொடியும் கொண்டு
மஞ்ஞையில் ஏறிவரும் மாவெழில் காண நின்றேன்
அங்கெவர் காணாதுமென் அகத்துட் புகுந்து விட்டீர்.

மைச்சுடர்க் கண்ணிவள்ளி மானைக் கவர்ந் தொழித்துக்
கற்பனையாகி என்னுள் கவர்த்து இருந்து விட்டீர்
எப்படி இனி மறப்பேன் இதயத்தில் மற்றோர் தெய்வம்
வைப்பனோ உள்ளவரை வாழ்ந்து போதீர் ஐயா!

## 16. தொண்டன்

பாட வேண்டும்: நான் பாடி உன்புகழ்
        பரவ வேண்டும்: நான் பரவி அன்பினை
தேட வேண்டும், நான் தேட நல்லருள்
        சேர வேண்டும், நான் சேர்ந்து பற்றினை
வீட வேண்டும். நான் விடவே முன்வினை
        ஓட வேண்டும், நான் உனது பூவடி
சூட வேண்டும். நான் சூடி உன்னடித்
        தொண்டனே யெனச் சொல்லிப் பாடுவேன்.

## 17. முருகன் எங்களின் தலைவன்

முருகன் எங்களின் தலைவன் அழகன்
        அருவாம் உருவில் வருவான் முருகன்
அருளுந் தருவான் பொருளுந் தருவான்
        அணைவார் தமையே அணைவான் முருகன்.

ஆனால் அவனைக் காணார் காணார்
        தேனார் சுவையை உண்பார் தெளிவார்
வானா டாளும் வள்ளல் எம்மைக்
        காணா தெண்ணி வருவான் அருள்வான்.
அன்பைத் தேடி அலைவான் எங்கும்
        அன்பர் நெஞ்சில் அமர்வான் என்றும்
துன்பத் துள்ளோர் சுகமாய் வருவான்
        இன்பத் துள்ளே இனிப்பான் முருகன்.

மாயன் ஆசைப் பட்ட வீரன்
        ஆயன் தெளியத் தெருட்டும் ஞானன்
சூரப் பகைக்கும் இரங்கும் வேலன்
        தாதை மகிழும் ஞானக் குமரன்.

கண்ணுள் உள்ளான் விழிக்கிற் காணான்
        பண்ணுட் குழைந்து வருவான் இசைபோல்
எண்ணார் நெஞ்சில் நண்ணான், எண்ணில்,
        விண்ணார் சுடராய் விரிவான் அருள்வான்.

## 18. வேண்டுதல்

"அழகனே முருகா" வென அவலத்து அலற
        "அதார்" எனா திருந்த தழகோ!
பழகுதமிழ் வசை கேட்கும் ஆசையோ
        பழசு அலட்டுமே என்ற பயமோ

குலவி மகிழ் நேரமோ, குறத்தி செங்கை
கொண்டுனது குமுதவாய் பொத்தினாளோ
நிலவுதிகழ் கோபுர நல்லையு மென்நெஞ்சும்
நிலைபெற்ற முத்துக் குமரா.

கலவி மகிழ்ந் துற்ற களைப்போ
மயக்கமோ கார்குழல் கோதினாயோ
பழவடியார் நேர் காணும் பேட்டியோ
எனைப் பார்த்திடா திருந்த தேனோ
மழவிடை யார் தேவியுமை பாலனே
அவள்நிற்க, மங்கை அறுவர் செய்ய
முலையுண்ட கந்த, வேளே! நல்லூரா,
என்வினை முடிக்கவருள் வேலை விடுக.

பன்னிரு கரங்களோ டெழுமிள ஞாயிறாய்
பார்விசும் புலக மெல்லாம்
எண்ணிலாக் கதிர்சொரிந் தியாவையுங் காட்டு நீ
என்னுள்ளே இருந்து கொண்டாய்
தண்ணிலா மேனியாய் தயாபர! எனக்கு நீ
தந்ததுயர் தரிக்க மாட்டேன்
பன்னிரு விழிகளுள் ஒரு விழியால் அரைநொடி
பார்த்தருள்க நல்லை வேந்தே!

## 19. நேர்த்தி

பஞ்சின் மென்பூ வடிவள்ளி பங்கா, அன்பு செயு மேழை
நெஞ்சின் துயரம் நீக்கவென நினைக்க மாட்டீர். நேர்ந்தழுது
அஞ்சி அஞ்சிச் சாவது தான்; அடிமைக் கிரங்கா எஜமானை
எங்குகாண்போம், எங்கட்கு இதுவும்வேண்டும் இனும்வேண்டும்.

பிழைக்க ஒருநல் இடந்தேடிப் பிரிந்த மகனுக் கொருநல்ல
உழைப்பைக் காட்ட மாட்டாது ஒடுக்க நின்ற நின்கருணை
விழைத்த வாறும் வெஞ்சிறையில் வீழ்ந்த வாறும் அறியீரோ
மழைக்கை வேலுங் குக்குடமும் மயிலும் கொண்ட தென்னாச்சு

நினைக்க நின்றாய் கண் இமைப்பின் நீங்கிவிட்டாய்,கேட்பதற்கு
நனைத்த நாவும் சொல்வாரா(து) நடுங்கிக் குழறும் என்நெஞ்சு
நினைத்த தெண்ணி அருளாயேல் நிமலா நல்லூர்ப் பெருமானே
அனைத்து எலும்பும் நெகஅழுவேன் அறிந்தார் நின்னை ஏசாரோ?

## 20. முரண்

முருகனே முத்துக் குமரனே உள்ள
ஒருவனே உண்மைப் பொருளே!
திருவளர் நல்லைத் தெய்வமே நின்னைத்
தேடுமா றென்னுளே தேடி
உருகுமா றுருகி ஓதுமா றோதி
உணருமா றறிகிலேன் மருள் தீர்த்து
அருளுமா றருளின் அடிமையென் தளைகள்
அகலவுன் அன்பினிற் களிப்பேன்.

இன்பமும் அதனை எய்து விப்பதுவும்,
இழப்பதும் துன்பமு மாகி
புன்புலால் ஆக்கை புகுவதும் புகுந்து
புலம்பவும் சிரிக்கவும் செய்வாய்
என்பெலாம் நெகக்கண் சோர்வதும்,
அழித்து எழுவதும் தொழுவதுமான
அன்பிலா முரணில் படுத்தினை,
நல்லை அழகனே அழகிதுன் அருளே!

எண்ணிலாப் பிறப்பு இருக்கவும் மனிதன்
என்றெனைப் படைத்தனை எதற்கோ
புண்ணியம் மனிதப் பிறவியிற் செலவாய்
போகமீந் துள்ளபொல் லாப்பே
நண்ணலால் நலிந்தேன் நாய்ப்பிறப் பளித்து
நன்மையை இருப்பிலிட் டிரேல்
தெண்ணிலாத் தவழ்பூஞ் சோலைசூழ் நல்லூர்த்
தேரடிக் காவல்செய் வேனே.

## 21. நல்லூர்த் திருக் கோவிலாய்

என் உயிர்க்குள் இருக்கிறாய்,
என்மனம் எய்தும் இன்பதுன்ப மிவற்றினை
முன்வினைப் பயன் எனில் நீசெயும்
முயற்சியாது? அவ்வினை அணுக்களாய்
என்னைநன்கு வருத்திடக் காண்பது
என்றால் இரக்க உணர்விலி ஆயவோர்
கன்மனத்தர் கடவுள் என்றாகுமே!
அக்கருத்திற்றானோ நினைக் கல்லில் செய்தனர்.

எம்முடன் வாழும் மக்கள் மற்றுயிர்களின்
இடர்கள் கண்டு இரங்கும் எமதுயிர்
உம்மனம் உருக்கானதா அன்றிய..துண்டோ?
இல்லையா உண்டெனில் எம்மிடம்
அன்பு இல்லையா? அடகெடுவாய் உயிரில்
அமர்ந்தநீ அதை வருத்துதல் நன்றியா
வன்மை மாக்களும் பழகிய பேர்களின்
வருத்தந் தீர்க்க வருவரே நீரென்ன?

ஆட்டம் பார்த்து அனுபவித் திடவென
அமர்ந்துள்ளாய் போலும் "ஐயனே எம்முயிர்
வாட்டம் நீக்கி இன்பதுன் பமெனும்
வருத்தம் இன்றிச் சும்மா இருந்திடப்
பார்க்க வேண்டும்" என்றுனைக் கெஞ்சுவேன்,
பக்தனாகப் பாடவும் ஆடவும்
நோக்கம் உண்டுஉன் கருத்தும் இ..தாக
நோக்குவாய் நல்லை ஊர்த்திருக் கோயிலாய்.

## 22. அபயந்தந் தாளுதியே

சிந்தையிலே குடியிருந்து, தினந்தொழுது உய்தி எனத்
தந்தமனம் பணித லின்றித் தறிகெட்டு முயன்றதெல்லாம்
ஒன்றும்நட வாதொழித்து உன்நினைவே முடிப்பித்தாய்
வென்றுவிட்டாய், அடிமையொடோ விளையாட்டு வேலவரே!

உள்ளத்தைத் தந்ததனுள் உறைந்திருந்தும் அம்மனத்தின்
கள்ளத்தைக் காணார்போல் கட்டவிழ்த்து மூவாசை
வெள்ளத்துள் புரண்டுருள விட்டதென்ன சிற்றுயிர்பால்
உள்ளபெருங் கருணையெனல் ஒவ்வாதே வேலவரே!

நெஞ்சிலே நீஇருக்க நினைத் துணையென் றுயிர் இருக்க
வஞ்சகன்போல் பாராது வாளா விருந் தீரால்
விஞ்சுமிரு வினைகள் செய்யும் வேதனைகள் தாங்கரிதாய்
துஞ்சுவதோ அருள்வேறு துணையாமோ வேலவரே!

நினைப்பதுவும் முடிப்பதுவும் நீயானாய் உயிரையொரு
துணைக் கருவியாயெடுத்துத் தொடுத்தெய்து விட்டவன்நீ
இருக்க வினை வருத்துவதென் இயலாமை கருதி யன்றோ
அருட்குமர திருவடிக்கீழ் அபயந்தந் தாளுதியே

## 23. அருள் தருக

செய்யுந் தொழில்கள் யாவினும் ஒன்று
சேர்ந்து செய்து காவாய் முருகா!
வெய்யிற் கேற்ற நிழலு மாவாய்
வீசுந் தென்றற் காற்று மாவாய்
பெய்யும் மழையாய் மண்ணிற் குளிர்வாய்
பெரிய கடல்வான் தீயாய் ஒளிர்வாய்
மையல் கொண்டேன் ஐயா முருகா!
மயில்மீ தேறி வருவாய் அருள்வாய்.

உருகா நெஞ்சில் உணர்வாய் வருவாய்
உடலா கியதுள் உயிராய் நிறைவாய்
இருவே றெணாதென் எண்ணம் செயல்கள்
எல்லாம் நினதாய் எடுத்தாள்குவையே
முருகா முருகா முவா முக்கண்
முன்னோன் தானாம் முதல்வா நல்லூர்
குருமா தவனே அரியாய் எளியாய்.
குலவும் மயில்வா கனனே அருள்வாய்.




## ௨௪. உரை கல்

பண்டிதர் க. இராசையா B.A. அவர்கள்
*(வேலணை அரசினர் மத்தியகல்லூரித் தமிழ் விரிவுரையாளர்)*

கன்னிக் கவிதை இதுபார் -- நல்ல
கனவுக்கன்னி இவள்பார்
வண்ணக்கற்பனை அழகார் -- உயர்
எண்ணக் குவியல் இதுபார்.

"பட்டணத்து மச்சினி"யைப் பார்ப்பீர் - புதுப்
"பயமேயுண்டு" உணர்ந்து சுவைப்பீர்
சொட்டுந் "துயிலுங் கவியும்" அழகு - சில
சொற்றொடர்கள் புதுமை அழகு,

பிள்ளை மழலையைப் போலே - இன்பம்
பேசு தடாஇவள் பாலே
அள்ளிப் படைத்தவன் தில்லைச் - சிவன்
அணைத்து மகிழ்கால எல்லை.

## ௨௫. முன்னுரை

திரு தி.ச.வரதராசன்.
(*ஆசிரியர்:* "மறுமலர்ச்சி" யாழ்ப்பாணம்.)

கவிதை என்றால் எனக்கு இனிக்கும். ஆனால் அது "கவிதை"யாக இருக்கவேண்டும். அப்படியில்லாமல் கவிதை எழுதவேண்டுமென்ற ஆசையினாலே சிலர் அறையலுற்ற - நொருக்கித்தள்ளுகின்ற - சொற்குவியல்களைப் படித்தால் கசக்கும்; எரிச்சல் வரும். கோபம் கூட உண்டாகும். நல்ல வேளையாக அந்தக் கவிதைகளை நேரில் கொண்டுவராமல் அஞ்சலில் அனுப்பிவைப்பதனால் அவற்றின் ஆசிரியர்கள் பிழைத்துப் போகிறார்கள்.

"கனவுக்கன்னி" என்ற இந்நூலின் பெயரைப் பார்த்தவுடனேயே இது ஒரு கவிதை நூல்தான் என்பது எனக்குத் தெரிந்துவிட்டது, அதன் பிறகு உள்ளே திறந்து பார்க்கலாமா என்று யோசித்துத் தயங்குவதற்குள் எழுதியவர் பெயர் "தில்லைச் சிவன்" என்றிருப்பதைக் கண்டேன் "ஓகோ கோ! தில்லைச்சிவனா!" என்று ஆவலோடு திறந்து படித்தேன், ஏனென்றால் தில்லைச்சிவனை எனக்குத் தெரியும். அவருக்குள்ளே நிறையக் கவிதைகள் இருக்கின்றன; அவ்வளவும் உயிருள்ள நல்ல கவிதைகள். அவற்றில், கற்பனைகள் இனிக்கும்; காதல் துள்ளும்; உணர்ச்சி கிளுகிளுக்கும் தமிழ் மணக்கும். இவருடைய கவிதைகளை நீங்கள் வாசிக்கும் நேரம் வீணாகிவிடாது.

*226, காங்கேசன்துறை வீதி,* தி. ச. வரதராசன்.
*யாழ்ப்பாணம்:*

## ௨௬. ஆசிரியரைப் பற்றி

"ஈழகேசரி" யில் ... ... ... "இளவரசு"

"..... நம் இளங்கவிஞர்களின் தமிழ்ப் பணி குறித்து ஆராய்ந்து பார்க்கையில், அவர்களிற் பெரும்பாலோர் சந்தர்ப்ப நிலைபரங்களை வைத்துக்கொண்டு உதிரிக் கவிதைகள் பாடுவதிலேயே தம்கற்பனையை அவமாக்கி வருகின்றார்கள், என்பது வாசகர்களின் பொதுப்படையான கருத்தாகும். இக் கருத்துக்கு விதிவிலக்காக நின்று உருப்படியான சிருட்டிகளிலும் தம் சிந்தையைச் செலுத்திவரும் சிலரில், திரு. சிவசாமியும் ஒருவர் என்பதை அவரது "கனவுக்கன்னி" நிலைநாட்டியுள்ளது ............ ..........1956 ல் "

"சுதந்திரனி" ல் ... .... .... .... "கீரன்"

காட்டுப்புறத்திலே வீடு பொழுது மறைந்ததும் காரிருள். பால்ச் சோறோடு தாய் தந்தையர் ஊட்டிய பயம் வேறு. இரவிலே வீடுசெல்ல நேரும் போது பயத்தை மறக்க உரத்த சத்தத்தில் பாட்டு, "பேய்ப் புலவன்" என்று பட்டம் சூட்டினர். அவரே இன்று "தில்லைச்சிவன்" என்ற பெயருடன் திகழும் ஈழத்துத் தமிழ்க்கவிஞர் ஆவார். அவரது சொந்தப் பெயர் சிவசாமி .... "யாழ்ப்பாணத்தில் சிலகாலம் தோன்றி மறைந்த "மறுமலர்ச்சி"யில் "பழக்கம்" என்ற முதல் ஒற்றையங்க நாடகம் வெளிவந்தது. பின்னர் "பட்டணத்து மச்சினி" என்ற பாடலும் வெளியிடப்பட்டது .........

"சுதந்திரனில்" பல கவிதைகளும், சில கட்டுரைகளும் வெளிவந்தன. அதையொட்டி தினகரன், வீரகேசரி, ஆனந்தன், அணிகலன், வசந்தம், ஈழகேசரி, பாப்பாமலர், உதயம், திராவிடன் ஆகிய பல இதழ்களிலெல்லாம் கவிதைகள் வெளிவந்தன ........ ................ 1955-ல்

## ௨7. ஆதரவாளன்

முருகன் முருகன் என்போம் - அவன்
முக்கண்ணன் மைந்தனடி!
திருவின் மருகனடி - எங்கள்
செல்வக் குமரனடி!

குங்கும வண்ணனடி - நல்லைக்
குமரப் பெருமானடி
எங்கும் நிறைந்தானடி - அவன்
எங்கும் பொலிந்தானடி

மலைதரும் காட்சியிலும் - ஓடும்
மாநதி வீழ்ச்சியிலும்
அலையெறி மாட்சியிலும் - தோகை
ஆடிடும் காட்சியிலும்

போதவிழ்ந் தேகமழும் - பூவின்
புன்னகைப் பொலிவினிலும்
தாதழைந் தாடிவரும் - வண்டின்
தண்ணிசைப் பாட்டினிலும்

மின்னல் ஒளியினிலும் - இருண்ட
மேகத்தின் கோலத்திலும்
கன்னல் சுவையினிலும் - குழந்தை
காட்டும் குறும்பினிலும்

பெண்ணின் பெருமையிலும் - அவனை
பேசிப் பணிவோமடி
அன்னவ னேயெமக்கு - என்றும்
ஆதர வாளனடி!

*அணிகலன் புதுவை*
*1947*

*க.க. 1961*

## ௨௧. தமிழ் வாழ்த்து

"அம்மா வென" வந் தென்நாவில்
அமர்ந்த அகர முதல் ஒலியே!
அந்நாள் முதலா யென்னாவி
ஆகிஉ யிர்த்தாய்! உலகமுதற்
பெம்மான் பக்தி வளர்த்த தமிழ்ப்
பேறே! பேசும் பழைய மொழிகளிலே
இம்மா நிலத்தில் இளமையொடு
இருக்கும் நின்சீர் போற்றுவமே.

ஆய கலைகள் பலவு முன்
அகத்தே கொண்டுமுத் தமிழானாய்
தோயும் புலமை சேர்அறிஞர்
தொண்டால் மேலைப் புதுக்கலைகள்
ஆயும் படிக்கே சொல் வளமும்
அழகும் நுண்மாண் பொருட் புலமும்
ஏயவுணர்த்தும் எமதுயிரே!
இன்பத் தமிழே வாழியவே!

காதல் செய்ய உறவாட
கவிதை சொல்ல திருமுறைகள்
ஓத உணர உன்னொளியாய்
உலவி உலகப் பொதுமறையின்

போதம் அளித்து; எமைச் சேரும்
பொல்லாப் பெல்லாம் கெடுத்தருளும்
தாதை முதல்வன் தந்ததனித்
தமிழே வாழி! வாழியவே!

## ௨௯. அற்புதம் செய்!

பரிதி எழுந்தனன் விண்ணில் மணிச்சுடர்
பட்டு ஒளிக்குளம் ஆனதுபார்
முரசு அதிர்ந்தது செந்தமிழர் புலிக்
கூட்டம் விரையுது பேரணிக்கே
உரிமை உணர்வொடு சுதந்திரச் சங்கொலி
உள்ளம் கிறங்க ஊதுதடா!
அருமை மகனேஉன் ஆண்மை உணர்த்திஎம்
அன்னை தளைஅறத் துயிலெழடா!

முன்னர் மறத்தமிழ் மன்னர்கள் வாழ்ந்ததும்
முடிபுனைந்தின்நிலம் ஆண்டதும் மெய்
அன்னிய ருக்குஇடம் தந்து அடிமையாய்
ஆண்டுகள் பற்பல வாழ்ந்ததும்மெய்
கண்களை விற்றுச் சித்திரம் வாங்கிய
கபோதிக ளாகநாம் வீழ்ந்துவிட்டோம்
மண்ணைப் பிறர்கொள வாய்பொத்தி ஊமைபோல்
வாழுவதோ! துயில் எழுந்திடடா!!

நெறியை இழந்தவராட்சியில் நின்றிடும்
நெடுமரம் ஆகின னோதமிழன்?
கடிதினிற் சென்றறப் பேரணிநண்ணிடாக்
காளைஉடல் காவல்ஏன் எதற்கு?
அடிமையாய் பற்பலகாலங் கழித்ததால்
ஆண்மை யொழிந்ததோ வீரரெங்கள்
உரிமையும் இல்லையென்றாவதை நாமிங்கு
ஒப்புவதோ போர்புரி மகனே!

அன்னை எழுப்பவும் துயிலுவாயோ! முலை
அருந்திட்ட பாசம் மறந்தனையோ!
முன்னரே பாசறை நண்ணினள் உன்னிளம்
மோகக் கருவிழியா ளறிதி!
இன்னுந் துயில்வதேன் என்மகனே தமிழ்
இன்பம் பயில்வதை மறந்தனையோ?
பின்னர் வருவதை எண்ணிஎம் இன்தமிட்
பெட்பினை வாழ்த்திஉன் அற்புதம் செய்!

## 30. கற்றேவாழ்வீர் கன்னித்தமிழை!

காதல! உங்கள் கடிதங் கண்டு
வேதனை யாலிதை விள்கிறேன் கொள்வீர;
"கற்பது எல்லாம் காசெனும் ஒன்றைப்"
பெற்று வாழ்தற் கென்றால் ஏனோ
கற்றோம்? அன்புக் காதல ஒன்று;
அன்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
சுற்றம் சூழ்ந்து 'சுகம் பெற'வென எமை
நற்றமிழால்நா நலிவுற வாழ்த்தி
விட்டது எல்லாம் வீணே கேண்மின்
"இங்கெம் வாழ்க்கை இதம்பெற வேண்டில்
சிங்களம் கற்றுச் சீர்பெறுவோம்" என
எங்கோ கேட்டு எழுதினீர் நன்றே!
நானோர் தமிழ் மகள் நம்மணத்தன்று
வானோர் தமிழில் வாழ்த்துதல் கேட்டோம்
"மானே விழியே மயிலே" என்று
நீரே அன்று நிறை தமிழ் சொன்னீர்
பாட்டும் கூத்தும் பயனெலாம் தமிழில்
கேட்டுக் களித்துக் கிடந்தோம்; இன்றோ
"மாட்டேன் தமிழை மறந்தேன் சிங்கள
நாட்டங் கொண்டேன் நான்" என்கின்றீர்
கேட்பீர்! நண்ப கிள்ளை என்னை
மாற்றான் வந்து மானங் கெடுக்கின்
பார்த்தே ஏங்கிப் பயத்தால் விட்டு
'சீச்சீ இனி இவள் ஆகாள்' என்று
தெருவில் விட்டு மயல் பல பேசும்
வேற்றாளோடு செல்குவீர்! இது தான்
ஏற்றம் என்றால் ஏகுக! இன் தமிழ்
மானங்காக்க மைந்தர்கள் கோடி
தானமாகத் தருகிறார் உயிர் எனில்
என்னுயிர் ஏனோ? இன்றே தமிழுக்கு
இன்னுயிர் ஈந்து இன்தமிழாட்சி
பெற்றே தருவேன் பேடி போன்றுளீர்
கற்றேவாழ்வீர் கன்னித்தமிழை!!

## 30. நாடில்லாத் தமிழர்

வீட்டருகே சுவர்க்கரையில் ஒரு புற்றுவைத்து
விதம்விதமாய் உணவுபல சேர்த்தங்கு இன்ப
ஊட்டமுடன் தன்னினத்தின் கூட்டமுடன் வாழும்
உருவத்தில் மிகச்சிறிய சிற்றெறும்பைக் கண்டு

வாட்டமுற்றேன் ஐயையோ நாமிங்கு வாழ!
வழியற்று விட்டோம்எம் மானந்தான் எங்கே?
நாட்டமுடன் சுதந்திரராய் வாழ்தற்குஎன்றோர்
நாடில்லை எறும்புக்கும் வீடுண்டு காண்பீர்!!

விண்ணேறித் திசை பலவும் சென்று இசைபாடி
விருப்புடனே காய்பலவும் கனிபலவும் உண்டு
மண் மேடும் மதில் பலவும் மலைபலவுந் தாண்டி
மகிழ்ந்தாடித் திரிந்ததின்பின் விரைந்தோடிக் கூட்டில்
தன்பேடோ டிரவெல்லாம் களிக்கின்ற சிட்டைத்
தான்கண்டோம் ஆயின்இத்தமிழர் எனும்கூட்டம்
எண்ணியதைச் செய்து மிக ஏற்றமுடன் வாழ
எமக்கென்றோர் நாடில்லை எண்ணத்தில் கொள்வீர்!

கொலைசெய்து வனமுற்றும் உறுமிமிகத் திரியும்
கொடுபுலியும் சுதந்திரமாய் வாழுந்தன் புதரில்
வளையினிலே மூஞ்சூற்றின் வாழ்வதனைக் கண்டும்
வகையறியாதுழல் கின்றோம் வாழ நாடில்லை.

உலையினிலே இட்ட மெழுகுதனைப் போல
உருகுகிறார் தமிழனது பழம்பெருமை பேசி,
தலைநிமிர்ந்து தமிழனெனத் தருக்குடனே செல்ல,
தரணிக்கு முதற்பிள்ளை வாழ நாடில்லை.

## ௩௨. விதி செய்த வினை

வானுண்டு மழைபெய்ய, மண்ணுண்டு பயிர்செய்ய, மரங்கள் மிக்க,
கானுண்டு, வளமுள்ள கடலுண்டு, அதில் எங்கள் கலம்விட்டிட,
ஏருண்டு திணவுதோள் இரண்டுண்டு வாழ்தற்கு இருந்தும் ஒன்றே,
பேருண்டு "தமிழ்ச்சாதி அடிமை அடிமை" என்ற பெரியபேரே!

அறமுண்டுநெஞ்சத்தில், அமைதியுண்டெப்பொருளும் ஆய்ந்து
- நோக்கும்
திறமுண்டு, கவிதைகள் செயவல்ல உளமுண்டு, தேஜஸ்உண்டு
மறமுண்டு பகைவெல்ல, மதியுண்டு புவிமீதில் மக்கட்கெல்லாம்
உறவுண்டு, ஆயின்எம் உரிமை கேட்டிழிகின்ற நிலையும் உண்டு.

கலையுண்டு, அதில்நல்ல கருத்துண்டு, தமிழர்நற் சால்பும்உண்டு
மலையுண்டு கொடிநாட்ட, மாண்புண்டு, பண்டுநம் மக்கள் எல்லாம்
கொலையுண்டு தமிழ்காத்த குணமுண்டு, ஆயினின்றுலக மன்றில்,
விலையில்லைத் தமிழர்சொல்;விதியென்று சோம்பிவீண்
- கழித்ததாலே.

## 33. அவள் முடிவு

தோழி! எந்தை "எனக்கோர் கணவன்
வந்தனன்" என்று வாஞ்சையோடுரைத்தார்.
செல்வம் மேவிய சீமான் பெருமிடம்
எல்லா அழகும் இளமையும் உடையோன்
ஆங்கிலம் படித்தோன் அரசமர் எழுத்தோன்
நொந்தஎம் குடும்பத் திழிநிலை அறிந்து
சிந்தை வருந்தித் தெய்வமென எமை
ஆள வந்தனன்" என்றதும், எந்தை
உள்ளம் உணர்ந்து உவக்குந் தன்மை
இழந்தேன் தோழி!
என்நிலை எந்தைக் குரைதியோ?
அன்னவர், அதரச் சாயம் பூசி
அலங்கரித்தெனக்கு அணிகலன் பூட்டி
கொலுவிற் பொம்மையாய் கூடிக்களித்திட
விழைகுவர் அதனை வெறுக்கிறேன் நானோ
உப்பில் உணவை ஒன்றுவிட்டொருபொழு
துண்டே வாழினும் நன்றே இத்தமிழ்
நாட்டினோர் பால்முலையிற் கிடந்து
செந்நெல் விளைத்துச் செழுங்கிளை ஓம்பும்
திண்டோள் உழவன் தன்தோள் தாங்கி!
உழுபடையோடு வயலதற்கேகி
உச்சிவேர்வை நிலத்தில்வீழ
கச்சையுடன் நின்று கமஞ்செய் அவர்க்கு
கஞ்சிகொண்டு களித்துச் செல்வேன்
இதுவே உன்றன் இன்மகள்
முடிபென, உரைத்திடு! விரைந்திடு தோழி!

## 34. பாவி உயிர் போம்வரையும் பாடு!

கண்ணேவா! செவ்வதனம் கன்றிக் கறுத்ததுமேன்?
என்னேயுன் கண்ணீர்! எதற்கழுதாய்? ... பின்னே
எட்டிநில்! தொற்றுநோய்: இன்னும் சிறிதில் உடல்
விட்டுவிடும் உயிரை வெறிது.

அஞ்சாதே! பிள்ளைகளை அழைத்து அருகிருத்து!
செஞ்சாந்துத் திலகமிடு சிறுநுதலில் ... கொஞ்சம்
சிரித்துக்கொள்! செந்தமிழின் தேறல்மது மாந்தத்
துடித்தேன் உரத்துப் படி!

உள்ளத்தில் ஊறி, உணர்ச்சிகளை மேலூக்கிக்
கள்ளின்வெறி கொடுக்கும் கலிபாடு ... வல்லிடையுன்
கன்னற்குரல் திருத்திக் கம்பனருட் காவியத்தைப்
பண்ணிற் குழைத்தினிக்கப் பாடு!

தொட்டிலிட்டுத் தாலாட்டித் தூங்கவைத்த தெங்கள்தமிழ்
கட்டிலிருந் தின்பசுகம் கண்ட தமிழ் ... கட்டுக்
கரும்பைப் பிழிந்தூற்றிக் காய்ச்சி இறுத்தசுவை
தருந்தமிழிற் பாடிநற் பா!

பாடியென் கோமளமே! பண்சேர்த்துப் பாரதிதன்
பாடலகம் புறஞ்சிலம் பென்றத்தனையும் - பாடிநீ
தேவியின் கீர்த்தனமும், திருக்குறளும், வாசகமும்
பாவியுயிர் போம்வரையும் பாடு!

## 35. தெய்வ வாழ்வு

சனங்களுக்குச் சேவைசெய்ய வழியொன்றிந்த
ஜகமீதில்காண நினைந்திட்டால், அங்கு
பிணங்களையே காணநிதம் கூடும், போரால்
பிதற்றலால் பொறாமையினால் சூதால் நைந்து
மனங்கெடுத்த உலகத்தில் 'பொதுமை வாழ்வு'
வாழவென நினைத்தவனை மடையன் என்பேன்,
தினந்தனது சுயநலத்தைப் பேணி எந்தத்
தீவினையும் செய்யானைத் தெய்வம் என்பேன்!

கடவுளது பெயராலும் உலக மீதில்
கண்ணியமாய் உயர்ந்தோரின் பெயரும் சொல்லி
மடையர்களாய் மற்றவரை மதித்துத்தாமே
மன்னர்என வாழ்கின்ற மனிதர்சேவை
புவியினிலே உள்ளமட்டும் பொதுநலத்தின்
புகலிடமாய் விளங்குமிடம் எதுவுமில்லை
தடபுடல்கள் பலசெய்து பறையுங் கொட்டித்
தர்மம்செய் கின்றது இவ் வுலகமையா!

வலக்கையால் கொடுப்பதனை இடக்கைநோக்கா
வண்ணஞ்செய் திருக்கின்ற வாழ்வு இன்று
புழக்கடையிற் போயிற்று புகழிற்காகப்
பொதுநலத்தின் பெயர்சொல்லி இழிவுசெய்வார்
மழைக்காளான் போல்மல்கிப் பெருகும் நாட்டில்
மக்களுக்குச் சேவைசெய மனிதன் வந்தால்
உழக்குண்டு சாவதலால் வேறொன்றில்லை
உண்மைச் சேவகனானால் தனக்காய் வாழ்க!

## 36. பயமே உண்டு

அலைகொண்டு லகைத் தாலாட்டி
ஆர்த்தார்ப் பரிக்கும் ஆழ்கடலே!
நிலைநன் கறிதெம் சுவைதேர்ந்தாய்
'நினது' நோக்கம் நாமறியோம்?
நிலைநன் கறிந்தாய் சுவைதேர்ந்தாய்
நினது நோக்கம் நாமறியின்
'கலைகொள் தமிழர் நாடுபல
கரைத்துக் குடித்த களியாட்டே!'

கலைகொள் தமிழர் நாடுபல
கரைத்தே குடித்தா யாமாயின்,
தலைகொள் தமிழர் அறமுணராத்
தன்மை யேனோ யாமறியோம்?
தலைகொள் தமிழர் அறமுணரும்
தன்மை பெற்றா யாமாயின்!
அலைவாய் கொண்டு வெறியாடும்
அவலச் செயலேன் கூறாயோ?

அலைவாய் கொண்டு வெறியாடும்
அவலக்கடலே இன்தமிழர்
பலியாய் மீண்டும் உனக்கீயப்
'பயமே' உண்டு கொள்வாயோ?
பலியாய் மீண்டும் உனக்கீயப்
பயமேயுண்டு கொள்வாயேல்,
தொலைவில் காலம் உனைஏத்தித்
தொழுவார் தமிழர் தொல்கடலே!!

## 37. பாட்டெதற்கு?

ஆடும் குரங்கினைக்கண் டானந்தம் கொண்டுகவி
பாடும் மனிதர்கட்குப் பாட்டாளி படுந்துயரை
ஏட்டில் எழுதிஅவர் இன்னும் மகிழ்ந்து களி
கூட்டவிட மாட்டேன் கொள்கையெனக் கில்லையது

பச்சைக்கிளி பிடித்துப் பாலூட்டிச் சீராட்டி
இச்சையுடன் கூண்டிலிட்டு இன்பமுறும் மனிதர்கட்குக்
கச்சணிந்து மென்முலைசேர் கன்னியர் தம்காதல்தனை
வைத்துக் கவிதைசெய்து மகிழவழி வைப்பேனோ?

துள்ளிவரும் மானினத்தைத் துரத்திக் கொலைக்களத்தே
தள்ளி அவைதின்றுஉடல் தடித்த மனிதர்கட்குப்,
பள்ளிகளில் அல்லிமுகப் பாலகர்கள் தரும் மழலைச்
சொல்லின்திறம் கவியாற் சொல்லித் தருவேனோ?

பெண்மைநலம் எண்ணிப் பேணாதவருடலை
மண்ணிற் றுவைத்துமகிழ் மாந்தும் மனிதர்கட்கு
மண்ணை மயக்குமெழில் மாதரசி தாமரையாள்
தன்னை அறிமுகஞ்செய் தவர்வெறிக்கா ளாக்குவனோ?

பட்டொன்று கேட்டுப் மடலெழுதி எனைச்சேர்த்தாய்!
பாட்டெதற்கு வண்ணான் படித்துறையிற் பெருமூச்சாய்
கேட்கும் செக்கிழுத்துவரும் கிழடுதட்டிப் பல்விழுந்த,
மாட்டின்பின் னாற்கீதம் மண்டி வரும்கேட்பீரே!

## 38. இன்பப் பொங்கல்

செங்கதிரோன் ஒளிபரப்பி விண்முகட்டிற்கிவர,
செழுந்தாது அழைந்தாடித் தேறல்வாய் மடுத்துப்
பங்கயங்கள் அலர்பொய்கைத் தடந்தோறும் வண்டு
பாடும்இன் இசையோடு தென்றல் இசைசேர,
மங்கையர்கள் நீராடிப் புதியஉடை புனைந்து
மதலையரின் இனியஒலி யோடுகளி கூரப்
பொங்கிவரு மகிழ்ச்சியினால் உழவர்திண் தோள்கள்
பூரிக்க வருமின்பப் பொங்கலே வருக!

கொழுக் கொண்டு நிலமுழுது உரமிட்டுக் காத்து,
குறித்தநாள் வந்ததும்நல் விதையிட்டு நெஞ்சில்
பழுக்கொண்டு மழைபார்த்து ஏங்கிமனம் நொந்து,
பாதாளம் போன்றாழக் கிணற்று நீர் பாய்ச்சி,
உழைத் துழைத்து உரம்கெட்ட உழவனது நெஞ்சில்
உரம் ஏற்றி வளங்கூட்டி உவகைமிகக் கொள்ள,
மழைத்தூற்றல் கண்டறியாப் பாலைவனப் பரப்பில்
மழைபோல வருமின்பப் பொங்கலே வருக!

நீலநிறக் கடற்பரப்பில் தங்கமுலாம் பூசி,
நிலவுலகம் களிதுளும்ப நேயமுடன் புட்கள்
காலைவர வேற்பிசைப்பக் கமலங்கள் மலர,
கற்பனைசெய் புலவருளம் கவிதைநயம் ஊறக்
கோலமணிக் கதிரொளியை வானமெலாம்வீசிக்
குலவுமலைத் தொடரெல்லாம் புதிய எழில்காட்டி,
காலை எழுஞாயிறுதன் கருணை பெற வேண்டிக்
காராளர் கருத்து வந்து காணுமின்பப் பொங்கல்.

செந்தமிழர் ஆட்சிநெறி சிறந்தோங்கு நாளில்,
திசையெல்லாம் வெற்றியுடன் இசைபரப்பும் திறத்தால்
வந்தலரும் இன்பவெறி வழிவழியாய் மலர
வளம்பெருக்கி அறஞ்சுரக்கும் வாய்மையொளி தன்னால்
சிந்தைமகிழ் நிலக்கிழவர் செந்தமிழ்ப் பண்பாடிச்
செங்கதிரின் அருட்கொடையை நெஞ்சினிலே வாழ்த்தி,
கொங்கலரும் மலர்தூவிக் கொழுங்கரும்பைத் தின்று
குதூகலிக்கும் தைப்பொங்கற் கொண்டாட்டம் இன்றே,

கரும்பிடித்துச் சாறாக்கிக் கனிப்பிழிவிற் கலந்து,
கருக்கண்டும் பசும்பாலும் காய்ச்சியதில் ஊற்றித்
திருந்து கொடி முந்திரிகைச் செழும்பழமும் சேர்த்து
தெளிதேனில் அழைந்தெடுத்த தீஞ்சுவைகொள் பாகை
விருந்தருந்தக் கொடுத்துவகை விருந்துகொளும் மகளிர்
மெல்லியபூங் கைகளிலே விளங்கு வளையோடிப்
பொருந்துமெழிற் புதுப்பானை பூச்சூட ஒலிக்கும்
பொங்கல்திரு நாளின்பம் புகழ்ந்துகவி புனைவோம்.

முடியுடைய மூவேந்தர் மக்கள் மனம் மகிழ
முயன்று பலவிழாவெடுத்துத் தமிழ்க்காதல் செய்தார்
அடிபணிந்து தமிழரினம் அழிந்தொழிந்த பின்னும்
அழிவுறாவகை பெற்ற தைத்திருநாள் பாடி,
கடிமலர்கைத் தலமெடுத்துக் கதிரவனைத் தொழுது
"கடமை எனும் திருவுடையார் கண்டபயன்" என்றே
வடிவுடைநல் மங்கையர்கள் அருகணைய அன்பால்,
வளங்காணும் இன்பநறும் பொங்கலிடுகின்றார்.

குவிந்தன செந் நெற்போர்கள் உலகெங்கும் இன்பம்
கொண்டாடுகின்றார்கள் தைத்திருநாள்கூடி,
அவிந்தன வஞ்சகம் சூது அத்தனையும் ஒன்றாய்
அறங்காதல் அருள் வெற்றி அடைந்தன காண் வாழ்க
ஒழிந்தனபஞ் சமும்கொள்ளை பட்டினியும் மக்கள்
உழுபடையால் வெருண்டோடி அழிந்த தனைக்காண,
எழுந்துவரும் இரவியினைக் கரங்கூப்பித் தொழுது
இனியநறும் பொங்கலிடு கின்றார்கள் காணீர்!

தென்றலிலே ஊறுகின்ற திருந்துபுல நுகர்வும்,
செங்காந்தட் பூவிதழிற் சேர்ந்துவள ரெழிலும்,
குன்றினிலே குதித்துவரும் குளிர்ந்தபுனல் நலமும்,
· குயிற்குரலிற் கவிதையினிற் கூடிவரு மிசையும்,
என்றுமுள இன்பமென இறுமாக்கும் தமிழன்
ஈகையுடன் வாகை பெற இயற்றுமின்பப் பொங்கல்;
அன்றுமுதல் இன்றளவும் ஆட்சியிலே மலர்ந்து
அளிசுரந்தே எமைவளர்க்கும் ஆனந்தப் பொங்கல்,

வானெல்லாம் ஒளி வெள்ளக் காடாக இன்ப,
வயல் எல்லாம் விளைசெந்நெல் மேடாகி விம்ம,
கானெல்லாம் மலர் பூக்கள் அழகொளிர ஆற்றங்
கரையெல்லாம் அலைபுரள அலமலர அன்பால்,
தூனிலா மதியொளியில் நீள்கடலின் நுரைபோல்
தூயபுதுப் பானைவழி வழிந்தோடிப் பொங்க,
ஊரெல்லாம் கேட்கும் ஒலி "பொங்கலோ பொங்கல்"
உலகெலாம் வாழ்க நிதம் பொங்கலோ பொங்கல்!
(இலங்கை வானொலியில் பாடப்பெற்றது. தை 1954)

## 39. ஈயும் சிலந்தியும்

"அடி சிறுக்கி என்ன செய்தாய்!
அழகெல்லாம் ஒன்றாக்கி ஜாலம் செய்தாய்"
கொடிதவழும் நெடுங்குவட்டில்
கோலமிட்டாய்! ஏன் செய்தாய் கொலைக்கா செய்தாய்?
படிகநிறம், பவளநிறம், பசுமைக்கோலம்
பலகாட்டி எழில் தீற்றிப் பார்ப்போர் நெஞ்சில்
கடிதூட்டினாய் இன்பம் எதற்கு? உன்றன்
கருத்துக்கு அழகுமொரு கருவியாச்சா?

ஆணிப் பொன் னிழைபூட்டி
அங்குமிங்கு மழகோவியங்கள் தீட்டி
வானத்தில் எழிலூஞ்சலமைத்தாய் 'சீச்சீ
வகையறியாதழகுவக்கும் எனக்கும் வேண்டும்'
நாணத்தைக் காட்டினாய் நல்லாய என்று
நாடினேன்; அடிஅம்மா! நீயோ உன்றன்
கோணிப்பை உதரத்தில் என்னைக் கொள்ள
கொடுவாயைப் பிளக்கின்றாய் ஐயோ ஐயோ!

மானிடத்தில் தான் அழகால் மயக்கி
உயிர் குடிக்குமியல் வழக்குண் டென்றால்
ஏனுனக்குமப்பாதை? சீச்சீ வெட்கம்!
எழில்சுவைக்கும் கலைவாழ்வில் கொலையா அந்தோ!
ஊனிருக்குமிடந் தேடிச் செல்லச் சோர்வேன்?
உழைப்பதற்கு அலுப்புறு வோர்க்கிது வோபாதை?
"நானிலத்தில் அழகிருக்கும் அதனோடென்றும்
நஞ்சிருக்கும்" என்றுரைத்த தந்தத்தேனீ!

## ५०. துயிலும் கவியும்

கஷ்டமெலாம் மறந்து மனச்சாந்தி நாடிக்
காதலியாள் தனைத்தேடிப் படுக்கை சென்றேன்,
நட்டநிசியாடிச்சு அவளங்கில்லை
நாணிணளோ! எனைக்காண, அன்றி என்னை
விட்டனளோ! துன்பமிடிச் சுமையிறக்கி
விஞ்சையுலகேற்றி யெழிலூஞ்சலாட்டிக்
கட்டிலிலே வைத்துலகம் அனைத்தும் காட்டிக்
கண்களிலே முத்தமிட்டு அணைக்கும் பெண்ணாள்!

எங்குறினும் அங்கெல்லாம் என்னைச் சேர்ந்து
இரவென்றும் பகலென்றும் பாராதன்பு
பொங்கிடத்தன் பொற்கரங்கள் கொண்டு நீவி
பூங்காற்றுப் போலாவாள் எனைநான் விட்டு
சங்கமமா வேனவள்பால்; பழம்பாய் கட்டில்
சரிசெய்து விசிறி கொண்டு தென்றல் ஊக்கி
செந்தளிர் மென்மடமகளின் வருகைக்கு ஏங்கிச்
சென்றபல மணிபார்த்தேன் வந்தாளில்லை.

எங்கவளென்றறியேன் யான் சற்றுப்போது
எழுந்துலவி வருவேனால் வருவாள் என்றன்
மங்கையிளந் துயிலரசி, எனைநினைந்து
மனைநீங்கிச் சிறுதூரம் சென்றே னாங்கோர்
கொங்கலரும் சரக்கொன்றைக் காடு; என்முன்
'கும்' மென்ற பேரிருட்டு, மின்னற் பூப்போல்
எங்கிருந்தோ வந்தாளோர் புதுமைக்கன்னி
எழில்குலுங்க இளநகைசெய் திதயந்தொட்டாள்.

வேறு

வாவென்றிடவோ! மன்னர் பலர்
வளர்த்த மகளை வறியேன்யான்
போவென்றிடவோ மடநெஞ்சே
பொழுதில் கிடைத்த பெருநிதியை
நானொன் றெண்ணா முன்நாவில்
நடந்தாள் உரத்த குரலினிலே
வானின் றொழுகும் தேனாற்று
வரிகள் பாட வைத்தாளே!

கன்னம் குழியக் கயல்விழிகள்
காதல் வளர்க்க காந்தளெனும்
மென்பூங் கரங்கள் தாமசைய
மேனி தவழும் மென்காற்றில்

கொன்றை மலரின் நெடிபரப்பி
கொடி யென்றசைதல் போல்அசைந்து
கொஞ்சிக் கொஞ்சிக் கற்பனையாய்
குதித்தாள் கவிதைக் கோமகளே!

வண்ணக் குழம்பில் ஒளிவெள்ளம்
வார்த்துக் குழைத்து வான்திரையில்
மின்னல் தீட்டி மீன்தீட்டி
மேலாம் உலக வழிநோக்கி

என்னை அழைக்க வான்வில்லாம்
ஏணி அமைத்து தாரகைபோல்
மின்னும் சுடர்கண் கவிக்குமரி
மீளா இன்பம் தந்தாளே!

## ೪௧. துயர் மருந்து

கற்பனைப் பெட்டகத் தற்புதக் காவியம்
கண்டு மனம்விண் டெழுவதென்னே - அன்பு
மண்டு மிருவிழி கொண்ட தென்னே! செய்ய
பொற்புறு மேனியள் விற்புரு வத்தினள்
பொங்குமவள் எனைத் தொடர்வ தென்னே - அவள்
செங்கனி வாய்முத் துதிர் வதென்னே!

தெய்வச் சிலையெனத் தேஜுஸ் உடையவள்
பைய எனைவந் தணைவ தென்னே! - மென்
கையாலடித்து அழைவதென்னே! - கண்டால்
முத்து முத்தாகப்பல் முத்தந் தந்தென்விழி
பொத்துந் திருவிளை யாடல்என்னே - தோளிற்
தொத்தியாடுங் கழைக் கூத்துமென்னே!

கஞ்சமலர்க்கையும் பிஞ்சிளம் மேனியும்
காதலுடன்எனை மோதல்என்னே! - அச்
சாதனையால் மனம் தேறல்என்னே! - கற்
கண்டின் நறுஞ்சுவை கொண்ட குறும்புகள்
கண்ணிற் பெருவிருந் தாவதென்னே - துயர்ப்
புண்ணிற் குறுமருந் தாவதென்னே!

## ௰௨. முத்திரை எதற்கு?

பள்ளிப் பருவத்திலே -- பாவானிஎன்
பாங்கில் ஒரு குழந்தை
கிள்ளை என வளர்ந்தாள் -- அவள் எழில்
கண்டு களித்திருந்தேன்

"அத்தான்" என அழைப்பாள் -- ஆடிவந்
தன்பு மொழி யுரைப்பாள்
பத்தரை மாற்றுத் தங்கம் -- அதைப்போல்
பளபளப் பாயிருப்பாள்

குத்துவாள் குளறிடுவாள் -- இன்னும் பல
குறும்புகள் செய்திடுவாள்
"மெத்தவும் நோகு"தென்றால் -- முகத்தினில்
முத்தங்கள் பல தருவாள்.

வருஷங்கள் ஓடிச் சென்று -- கால
வாரியில் மூழ்கியதும்
பருவங்கள் சிலகழிந்து -- இப்போ
பக்குவப் பட்டுவிட்டாள்.

காணத்துடித்து நின்றேன் -- என்றன்
காவியப்பெண்ணெழிலை
மோனக் கிறுக்கேற -- ஒருநாள்
முன்னுகுச் சென்று விட்டேன்

திங்கள் நிகர்த்த முகம் -- சுழித்து
செந்நிறம் பெற்றது மேன்?
பொங்கு மிரு விழிகள் -- கவித்துப்
பூவை யுரைத்த தென்ன?

'கொல்' லென்ற வான் சிரிப்பு -- குறுகி
குமிழ்நகை யாவது மேன்
துள்ளும்நடை விடுத்தோ -- அன்னம்
தோற்கும் நடை பயின்றாள்!

நெஞ்சத்தின் ஆசைகளை -- மறைத்து
நின்று நிமிர்ந்த தனக்
குன்றினை மென்று கிலால் -- மூடிக்
கொண்டு ஒதுங்கி நின்றாள்!

நிலவுபொழியும் முகம் -- என்றன்
நெஞ்சை அளக்கும் விழி
அழகின் முழு உருவோ -- என்னை
ஆட்கொள்ளும் தேவதையோ?

என்ன புதுமையிது -- இவளேன்
இப்படி மாறியது?
முன்னை முறையிருக்க -- நமக்குள்
மூடுதிரை எதற்கு?

## 43. துன்பத்தில் இன்பம்

புயலடித்திடக் கடல் பொங்கி இரைந்தது,
வயல்நிலங்களில் வெள்ளம் வந்து நிறைந்தது,
உயர் மரங்களில் மேகம் ஊர்ந்து படிந்திட,
மயல் வளர்ந்தது உளம் மண்டு மகிழ்ச்சியால்,

ஆறு பெருகியங் கோடிச் சுழித்தது,
வீறுகொண்ட காற்று வீசி அலைத்திட,
பாறி விழுந்தன பலமரம் அக்கணம்,
பேரொளி யோடிடி கேட்க மகிழ்வுற்றேன்.

பருத்த மரங்களிற் பழங்கள் சிதறின,
பட்சிகள் கூடிக் கொம்பில் குறாவின,
தெருக்கள் தோறும் வெள்ளம் தேங்கி வழிந்திட,
செருக்குடன் நானதைச் சீந்தி நடந்திட்டேன்.

மானினம் மேடுபார்த் தோடிச் சென்றன,
மந்திகள் கொம்பில் குந்தி வருந்தின,
ஆனினம் அங்கெல்லாம் அம்மா என்றலறிட,
அச்சம் துறந்துமிக் காடிக்களித்த நான்.

சீறியஓர் கரும் நாகபாம்பு கண்டு,
செய்வதறியாது சேரிடம் ஓடினேன்,
ஓடியநான் எங்கள் ஓலைக்குடிசைகள்,
ஒன்றையும் காணாது நின்று தவிக்கையில்,

மச்சுவீட்டு மணி மன்னன்போல் நின்றவன்,
கச்சையுடன் நான் நிற்பதைக் கண்டதும்,
மச்சான் எனக்கூறி உன்வீட்டு முகடதோ,
அச்சா! அச்சா! என்று ஆரவாரஞ் செய்தான்.

தில்லைச்சிவன்

## பூடி. சென்றுவிட்டாள்

வானத்தின் கீழே
வரண்ட மணற் பரப்பில்
தேனொத்த மென் காற்றுத்
தீண்ட மகிழ்ந் திருந்தேன்,

எண்ணக் குகையில்
இருந்த பெருங் காதல்
சன்னத்த மாகிச்
சதிராட வண்ணத்தின்
பூச்சு முகம் பொலிய
புன்முறுவல் காட்டி அந்தப்
'பீச்' சிலே வந்தாள் அப்பெண்,

சொருக்கவிழ்ந்த கூந்தலினைத்
தொங்கவிட்டு முல்லை யொடு
மருக்கொழுந்து சூடி
மணங்கமழச் செருக்குடனே
அன்ன நடை தோற்கும்
அழகு நடை ஒன்றுடனே
என்னிடத்தை நாடி னாளே!

உன்னிதயம் கொண்ட
ஒருத்தியுடன் பேச்சாட
என்ன தயக்கம்?
எனும் எண்ணம் கன்னியிடம்
நன்று சில கூற
நடத்திடவும் 'ஒன்று கதை'
என்றேன்; இருந்தாள் அவள்!

அடுத்த தெருவில் உனை
அன்று கண்டேன்; அன்றுதொட்டுப்
படுத்துகிறாய் காதற்
பழிகாரி! உடுத்தழகு
காட்டுகிறாய்! காட்டாயோ
கடைத்தேற ஒருவழி? என்
வீட்டுக்கு வந்து விளக்கேற்று!'

என்றேன்; சிரித்தோம்!
இனிப்பாகப் பேசுகிறீர்'
என்ன தொழில்?' என்றாள்; நான்
ஏங்கினேன்! ஏங்கிப்பின்

பண்ணு தொழில் தமிழிற்
பாட்டெழுதல் ஆனாலும் ......
என்றுரைக்கா முன்னம்
எழுந்துவிட்டாள்! மெய்யாக
'மன்றலினாலே காதல்
மாய்வதுண் டென்றே" நடந்தாள்
சென்றுவிட்டாள் அச்சிவப்பு மாது!

## ५௯. இரவுக் கொரு செய்தி

முல்லை மணத்தென்றலிலே முயங்கி இன்ப
முறுக்கேறி அவள் நினைவில் மூழ்கி அந்தக்
கிள்ளைமொழி யாளுயிர்ப்புக் கேங்கும் என்னைக்
கிண்டல் செய்வான் போல்வானில் நிலவைப்பெய்து
கள்ளி அவள் சுடர்விழியும் கும்ப மார்பும்
கருங்கூந்தல் செறிந்தஇருட் காடும் காட்டி
எள்ளிநகை யாடுகிறாய் இரவே! நீதான்
இனியொருகால் வந்தென்னை இம்சிக்காதே!

'காதல்' எனுங் கொடுந்தீயால் வெந்து இன்பக்
கடல்மூழ்க அவளின்றிக் கலங்கும் என்னை
வேதனையே தருங் கொடிய மதியங் காட்டி
விறகிட்டுத் தூண்டுகிறாய் இரவே இந்தப்
பேதைமதி யேன்உனக்கு? களவுஞ் சூதும்
பிறப்பதுமுன் இடத்தன்றோ அதனால் இந்தச்
சாதனையில் நீ விண்ணன் ஒப்புக் கொண்டேன்
சண்டையில்லை சரனடைந்தேன் பொறுத்தி கொஞ்சம்.

காலையிலே அரும்பாகிப் பகலிற் போதாய்
காதல்மணப் பூங்கொடியின் கண் அலாரில்
மாலையிலே மலர்கின்ற மையல் நோயை
வளர்விக்கும் இரவேயுன் வஞ்சந்தீர்க்க
வேளையிது என்றறிந்தாய்! வென்றாய்! இந்த
வெற்றிநிச மானதல்ல இன்னுங் கொஞ்ச
நாளையிலே என்னிதயம் தழுவுமந்த
நளினமுகை மலர்வாள்பின் நீண்டுபாரேன்!

## ५௬. மோர்க்காரி

சிற்றிடை நோகப் பொற்கலசத்தே சிறிதே மோர்
விற்க நடந்தாள்; 'அற்புதம்' என்றே விழிக்கின்றார்!
பற்றினை விட்டோரும் உற்றது உண்டே படுதுன்பம்!
சுற்றிலும் பார்த்துளம் விட்டதையெண்ணித் துவள்வாரே!

ஆடையுடுத்த முழுமதி வந்துமண் குடமேந்தி
கோடை தவிர்க்கமோர் கொடுப்பது முண்டோ! உலகிற்கென்
கேடு முளைத்தது யாரிவள்; முல்லைக்கொடி; பச்சைக்,
காடிருந் திங்குவந் தாடிடுமஞ்சை; கனிக்கொம்பு?

ஆடிடும் முல்லை; அவள்பாதம் செய்ய அலரிப்பூ!
வாடிட ஒன்றினை ஒன்றன்பின் வைத்து வருகின்றாள்
பாடிடக் காற்சிலம் பதில்உளம் விட்டார், பலர்;பின்னால்
ஓடினர், சிலர்தம் மனைவியர் வரக்கண்டு ஒழித்திட்டார்,

அடுத்த தெருவில் எடுத்தடிவைத்தாள் அவ்வளவே
தொடுத்தனனோ கணை மாரன் எனப்பலர்; துடித்திட்டார்
'வெடுக்'கென் றிடப்பல கதவுகள்மூடிய வேகத்தில்;
துடுக்குநடைப்பிடி மோர் விற்ற லின்றிச் சோர்வுற்றாள்,

பேதையவள் எழிற்கோதையிழிந்த மலர்க்கொத்து
வாதையளித்திட ஏகின மைந்தன் வண்டாகிப்
போதைபெறத் துடித் தானவள்பூவல்லப் புதுமொட்டு
ஏதிவள்எழிலுரு என்றவன் அயிர்த்து இருந்திட்டான்?

(கலியிலோர் காட்சி)

## ͷ7. ஏன் இந்தக் கண்ணீர்?

கனியென்றான் தேன்னென்றான் கண்ணே! என்றன்
கரும்பென்றான்; இனியபல பேசிப் பின்னர்
இனியெனக்கு நீயன்றோ நானுனக்கே
எழுதரிய ஓவியமே! இன்பே! என்று
பனியன்ன இனியசொற்கள் பகர்ந்தவீரன்,
பாவையவள் கடைவிழிநீர் ஓடிப்புல்லின்
நுனிஒழுகும் பனிகளெனப் 'பொல பொலெ'ன்று
நுணங்கிடைமார், பணைதுகிலை நனைத்ததோரான்.

படித்தவன் நான் பண்பறிவேன் உன்றன் உள்ளப்
பளிங்கதனை உடைத்துவக்கும் படிறனோயான்?
சிரித்தொருகால் பேசு! நெடு வானத்தூடே
சிந்துமொளி வெள்ளத்தில் நிலவுநீந்தி
நடிப்பதைப்பார்! இராமுற்றும் பேசித்தீர்க்க
நனியுண்டு பொருள் என்று சொன்ன மண்ணன்,
துடித்திட்டான் தோகைமுகம், புதைத்து விம்மிச்
சொரிந்தகண் ணீர்எதற்கு? 'சொல் சொல்' என்றான்.

'என்றுவரும் இந்தமுதல் இர'வென்றெண்ணி
இருந்தேங்கித், தாபமுற்று நெட்டுயிர்த்து
இன்றுவந்த, இரவினையும் அவமே பேச்சில்
இழுத்துவிடத் துணிந்தசெயல், ஒறுத்துச் சொல்லால்
கொன்றுவிட வகையறியாத் தலைவி நெஞ்சின்
குறிப்புணர்த்து வாள்வேண்டி இதழசைத்து,
"வண்டுமலர் தனைப்புகழ்ந்த பின்போதேனை
வாரியள்ளிச் செல்கிறது" என்றாள் என்னே!

## 48. பாரியின் காதல்

தேரினிற் பாரி வருகையில் -- மலர்த்
தென்றல் அழைந்துடல் வருடையில்
பாரினில் முல்லை கிடந்தது -- பற்றிப்
படரக் கொழுகொம்பு இன்றியே

வானத்து வெள்ளிச் சிதறலோ -- இந்த
வையமகள் சிந்தும் முறுவலோ
தேனைப் பொதிந்துள எழில்முல்லை -- கொடி
தேங்கி கிடந்தது நிலத்தினில்

இயற்கை உயிர்த்திடும் மூச்சென -- மணம்
எட்டிப் பரந்துளம் ஊக்கவே
கயற்கண் மனைவியை நோக்கினான் -- அந்தக்
காரிகை கண்ணோடிக் காட்டினாள்.

மன்னவன் தேர்விட் டிறங்கினான் -- தன்
மனைவியுடன் கொடி தூக்கியே
பின்னிப் படரத்தேர் விட்டனன் -- இதைப்
'பித்தர் செய'லென்பர் அன்பிலார்.

காதலர் பித்தர்க ளாவதும் -- அவர்
கருணையால் உலகம் வாழ்வதும்
சாதலும் காதலால் என்பதால் -- பாரி
தன்மையில் காதல் தளிர்க்குதே

காதல்தெரிந்த வேள் பாரிதான் -- அவன்
கைவிர லொன்று அசைந்திடில்
வேருடன் முல்லைக் கொடிஅவன் -- பெரு
வீட்டில்படர வெறுக்குமோ?

காதல் புரியத் தெரிந்தவர் -- தங்கக்
கம்பிக்குள் கிளிகளைப் பூட்டிடார்
பூவைப் பறித்து முகர்ந்திடார் -- அது
புன்மைச் செயலாகும் என்பதால்

அவையவை யங்கங் கிருந்திட - அதன்
அழகை நுகர்தல் மெய்க் காதலாம்
இவையெலாம் தனக்கெனச் சிறைசெய்யும் - சுய
இச்சைதான் காமம்என் பார்களே?

## ५९. பட்டணத்து மச்சினி

பாத்துப் பாத்துக் காத்திருந்த
பட்டணத்து மச்சினி
நேத்து வந்தா அவவைப் பாக்க
ஆத்திரந்தான் வருகுது,

'சலசலெ'ன்ற சரிகை காற்றில்
அலையெடுத்து வீசுது
'பளபளெ'ன்று மின்னிக் கண்ணைப்
பறித்துக் கொண்டு போகுது,

கையிலிருக்கும் வண்ணக் குடையும்
கர்ணம் போட்டுச் சுழலுது
மெய்யிலிருந்து 'அத்தர் சென்ரு'
மேலும் மணம் வீசுது,

கையில் லேஞ்சி வைத்துக் கொண்டு
கண்ணை மூக்கைத் துடைக்கிறா,
பையில் 'பவுடர்' கொண்டுசென்று
பகட்டி மினிக்கித் திரிகிறா;

கையைக் கையைத் தூக்கிச் சின்னக்
கடிகாரத்தைப் பார்க்கிறா
காரைக் காணேன் எனன்று சொல்லிக்
கடுமையாகப் பேசுறா,

கார் இரைந்து 'ஹோர்ண்' அடித்துக்
காலத்தோடு வந்ததும்
காற்செருப்புக் 'கடகடென்'னக்
காரில் ஏறிச் செல்கிறா,

பொழுது பட்டுப் பன்னிரண்டு
மணியளவில் வருகிறா
பொழுதுபோக்குக் கேற்றபடம்
என்று சொல்லிப் புளுகிறா,

பட்டணத்து மச்சினியைப்
பார்க்கப்பய மாகுது,
கட்டிக்கொண்டால் வேறுசனியன்
வேண்டா மென்று தோணுது.

## ௫௦. புது மோகம்

குறுகுறுத்த விழியிருக்கு; குறும்பதில் இல்லை,
கொவ்வைக்கனி இதழிருக்கு; சிவப்பதில் இல்லை,
நறவுசுவை மொழியிருக்கு; நளினம தில்லை,
நடனமிடுங் காலிருக்கு, துடிதுடிப் பில்லை.

இடையிருக்கு துடியெனவே; இயைவதில் இல்லை,
என்வரவை நோக்கிவழி; பார்ப்பது மில்லை,
பழகுதமிழ்ச் சுவையிருக்கு; பாடுவதில்லை,
பாலிருக்கு பழமிருக்கு, தேடுவதில்லை.

ஊறிவரும் காதல் அணை, உடைப்பது மில்லை,
உள்ளமுண்டு என்னுறவை; நினைப்பது மில்லை,
சோறு தின்ன என்வரவைப், பார்ப்பது மில்லை,
சுகமடைய அருகணைந்தாற் சேர்ப்பது மில்லை.

சித்திரம் எழுதியவெண் சுவரிருந்து மை,
சிதைந்தழிந்து போனதெனச் செம்மை யழிந்தாள்
முத்தமிடச் சென்றால் உடன் மகனை அணைப்பாள்
முன்னிருத்தி 'அப்பாவைப்பார்' என்று சிரிப்பாள்.

## ௫௧. நெஞ்சின் மலர்

சின்ன நல்ல பூவே! - நீ
சிரிக்கும் முல்லைக் காடே!
முன்னர் செய்த தவமாய் - வந்து
முகிழ்த்த எங்கள் மகளே!

ஆடிவரும்போது - நெஞ்சில்
அள்ளி இன்பம் வார்ப்பாய்
பாடும் கிள்ளைப்பேச்சு - எங்கள்
பாவம் போக்கும் அம்மா!

பளிங்கு போன்ற உள்ளம் - செய்ய
பவளம் போன்ற மேனி,
சலங்கை கொஞ்சும் கால்கள் - நோகத்
தாவிவந் தணைத்தாய்.

விண்ணின் சுவை அமுதே! - தூய
வீணைதரும் இசையே!
வண்ணத் தமிழ் மொழியே! - இன்பம்
வார்க்கும் எங்கள் மகளே

கன்னல் சாற்றின் ஊற்று - பிஞ்சுக்
கையசைத்தால் ஆச்சு,
மண்ணில் உள்ள தெல்லாம் - உன்றன்
மடியில் வைத்துப் பார்ப்போம்.

காலைக் கதி ரொளியே! - தமிழ்
காவியத்தின் பொருளே!
சோலை தவழ் வளியே! - இன்பம்
தோய்ந்த பழம் நீயே!

தெய்வச் சிலை நீயே! - கலைச்
செல்வக் களஞ் சியமே!
உய்வளிக்க வந்தாய் - உள்ளம்
உவந்து களி கொண்டோம்.

புத்தம் புது மலர் நீ - என்றும்
புன்னகை செய்மலர் நீ
நித்தம் மணம் கூட்டி - எம்
நெஞ்சிலாடும் மலர் நீ

## ௫௨. ஆவல்

தோரணப் பூப்பந்தர் வாயிலிலே - நான்
தோளனுடன் உள் நுழைகையிலே,
ஆராத்தி எடுப்போர் முன்னே வந்து எனை
ஆவலுடன் அவள் பார்த்ததுமேன்?

மஞ்சம் மீதிருந்தென் மனைவியுடன் சில
மனம் விட்டுப் பேசி மகிழ்கையிலே,
பிஞ்சுக் குழந்தையைப் பிடித்திழுத்தேயவள்
பின்னாற் றிரும்பி யொழித்ததுமேன்?

தித்திப்புப் பண்டங்கள் செய்துவைத்து - நான்
தின்னும் மட்டும் மறைவாயிருந்து,
மெத்த மகிழ்ந்த அத்தை முகத்தினில்
மின்னிடும் புன்னகை சொல்வதென்ன?

மங்கை கரத்தினைப் பற்றிக்கொண்டு - இந்த
மணவாளன் வீதியிற் போகையிலே,
பொங்கும் விழிகளில் புத்தொளிக் கதிரெழ
பூரிக்கும் உள்ளம் புகல்வதென்னே?

*நெடும்பா*

## 53 கனவுக் கன்னி

ஓங்கி வளர்ந்த நற்றென்னைகளும்; பல
ஓடைகளும் மணல் மேடுகளும்,
பாங்கிலநேக நிறங்களொடு மணம்
பறிக்கும் நறுமணக் காவுகளும்,

வட்டவடிவாகச் செய்து வைத்துப் பல
வாசமலர்ச்செடி பூத்துநிற்கும்,
தொட்டிகளாயிர மாயிரமாய்ப் பல
தோரணப் பூப்பந்தர்ச் சாலைகளும்,

புன்னை மரங்களின் தண்ணிழ லோடங்கு
பூவரசு பல நேர்நிரையாய்
கண்ணைக்கவரு மெழிலுடைய அந்தக்
கடற்கரை கந்தர்வ லோகமென்பேன்

பொங்கு திரைகளினூடே மிதந்தெங்கோ
போவனவாய் இங்கு மீழ்வனவாய்
வங்கங்களாயிர விதத்தனவாய் வரும்
வண்ணத்தை என்னென்று சொல்லிடுவேன்.

தூரத்தே தோன்றுமோர் புள்ளியுரு சற்றுத்
தேர்ந்தபின் தோன்றுமோர் வில்லினுரு
வாரத்தே தோன்றுமோர் வெண்முகில் போற்சீலை
வாங்கி வருமந்த வங்கங் கண்டாய்

**தில்லைச்சிவன்**

விண்ணில் உலாவிடும் புள்ளினங்கள் மேலே
மேவி எழுந்திடும் பருந்தினங்கள்,
கண்ணிற்கே அற்புதக் காட்சியடா அந்தக்
கடற்கரை நான்கண்ட சொற்கமடா!

மாலைப் பொழுதான போதொருநாள் எங்கும்
மஞ்சள் நிறம் எனச் செய்கையிலே,
வேலைக்கரைக்கு நான் போயிருந்தேன்; அந்த
விண்ணின் கதை ஒன்று சொல்லுகிறேன்.

வானம் கடலைத் தொடுமிடத்தில், இந்த
வையமிருந்து தொலையிடத்தில்
ஞானகுருவெனப் பொன்மயமாய் ஒளி
ஞாயிறு போயங் கரசிருந்தான்.

நீலக் கடலெல்லாம் தங்கநிறம் சோலை
நீங்காதிருந்தது பொன்னின் நிறம்,
மேகமெலாம் ஒரே வர்ணக் களஞ்சியம்
விந்தையடா தெய்வ சௌந்தரியம்,

வானொலி நின்றங்கு இன்பகீதம் பெய்ய,
வண்டுகள் ஓர்புறம் பாட்டிசைக்க,
தேன்மொழி மாதர்கள் ஆடல் நடைகண்டு
'தெத்தித்தோ' மென்றலை தாளமிடும்

வான்நிறச் சிறுமணல் சேர்ந்த இடமது
மற்றொருவரில் லாத இடம்
நான் சரிந்தேன் சூர்யன் போய் மறைந்தான் விண்ணில்
நட்சத்திரங்களின் மத்தியிலே.

கூனற் பிறைவந்து ஜோதிதரத் தென்றல்
குளிர்மையை அள்ளி என்மேற் சொரிய,
வானத்து நிலவு போல் வந்து நின்றாள் அவள்
வண்ணத்தை என்னஎன் பேன்அழகே,

வட்டக் கருவிழி மோகத்தினாள் அன்பு
வார்க்கும் இதழ்கனிப் பாகத்தினாள்,
பட்டுப் படிகமென் மேனியினாள் முத்து
பற்கள் வரிசைசெய் கோர்வையினாள்

தத்தித் திரிகின்ற கிள்ளைமொழி, விண்ணில்
தாவிப் பறந்திடும் சிட்டின் உள்ளம்,
தித்திக்கும் தீஞ்சுவைத் தேன்பொதிவாய் இவள்
தெய்வப் பிறப்பெனும் நல்ல குணம்,

மின்னித் தெறித்திடும் பொன் எழிலாள் அன்பு
மேவும் உள்ளத்தில் நற்பண்புடையாள்,
கன்னியவள் ஒரு தெய்வப் பிறப்பெனில்,
கண்ணிற்கு எட்டாத் திருவல்லவே!

நிலவைத் துகிலென்று டுத்தனளோ அவள்
நெஞ்சிற் கடைவிழி வேல் எறிந்தாள்,
உலையிட் டுருகும் மெழுகெனவே உள்ளம்
உருகி உயிர்வழி ஓடவும் நான்,

'கம்'மென்று சும்மா இருந்து விட்டேன் ஏதும்
கதைகொடுத்தால் அனர்த்தம் நேர்ந்திடுமோ?
பெண்ணென்று என்மனம் நாணியதால் ஒன்றும்
பேசலின்றி மனம் பேதலித்தேன்,

நெற்றியிற் சுருளாக நின்ற குழலங்கு
நீண்டுநீண்டு சுருண்டாடல் கண்டு,
பற்றி யெரிந்ததே என் மனது அதைப்
பாவை யறிந்தாளோ நானறியேன்,

முல்லை யிள நகை காட்டி நின்றாள் மனதில்
மோகவெறியினை மூட்டி நின்றாள்
நல்ல தமிழிலே பெண்ணணங்கே! யார்நீ
நாடினதேனோ? நவிலுமென்றேன்.

"தன்னந்தனியாக நீ இருந்தாய் நானும்
யாருமிலாமலே இங்கு வந்தேன்
பின்னர் இருவரும் நாட்டு நடப்புகள்
பேசிக் கதைத்தலும் தீதோ" என்றாள்

நன்று நன்றென்று மனஞ் சொல்லிற்றுக் கண்கள்
நாரிஅவள் அழ கைக்குடிக்க,
நின்று கதைப்பது மேனோ என்றேன் அவள்
நிலத்தினிற் சித்திரம் போலமர்ந்தாள்.

ஓதக்கடல் அலை காட்டி நின்றேன், அவள்
உள்ளத்தைப் பொருளாகக் காட்டிநின்றாள்
வேதப் பொருள்பல விளக்கி நின்றாள் கேட்டு
வியந்து அவள்வாயைப் பார்த்துநின்றேன்.

"உள்ளத்தடியில் பராசக்தியை நினைந்
தூறிடும் அன்புப் பிராத்தனையில்
கள்ளமிலாதிருந், தாலவள் நேர்பட்டு
கடிதினில் எம்குறை போக்கிடுவாள்.

ஆழக்கடலினுள் மேலும் மேலும் புக
அங்கு நல் முத்துக்கள் பெற்றிடல்போல்,
உள்ளத் தடியினைக் கண்டுவிட்டால் உண்மை
கண்டுவிட்டாய் தெய்வம் கண்டாய்" என்றாள்

பெண்கள் அறிவிலார் பெண்மை இழிவென்று
பேசினர் யாரோ மிலேச்சர் என்றேன்
சங்கம் மருவிய காலம் முதற்கொண்டு
சான்று பலகாட்டிப் பின் உரைத்தாள்.

"பெண்மை அடிமை அடைந்ததுவும் அவர்
பேசும் உரிமை இழந்ததுவும்
பெண்மை பெரும்பாவம் என்றதுவும் அவர்
கூண்டுக் கிளிஎன நொந்ததுவும்

பாட்டுப் படித்தலும் பனுவல்கள் செய்தலும்
பாவையரால் செய்தல் ஆகாதென்றும்
ஏட்டைத் தொடுதலும் பாவம் என்றும் அது
இழிவு என்றும் பெண்கள் அடிமை என்றும்.

பெட்டைக் கோழி கூவி பொழுது விடியாது
பெண்புத்தி பின்புத்தி என்று எம்மைக்
குட்டிக் குனிய வைத்து அடிமை
கொண்டார் சரிநிகர் சமானம் இன்றி

பட்டங்கள் பெறுவதும் சட்டங்கள் செய்யவும்
பாவையர்க் கவைமுடி யாது என்று
திட்டம்போட் எம்முடற் சிறப்புகளைச் சொல்லி
சேமப் பொருளாகக் கொள்க என்றும்

நாட்டுக் குரைத்தவர் நாமல்ல ஆரிய
நயவஞ்சக மனப்பேய்க ளென்றும்
பாட்டு மொழியிலே பேசிநின்றாள் அந்தப்
பாவையென் னுள்ளம் பற்றி நின்றாள்.

கேட்டுக் களிப்புடன் மாதரசே பெண்மை
கெட்டழியாதின்று வெற்றி கண்டேன்.
நாட்டுக்கொருத்தி உன்போல இருந்திடில்
நாடும் விடுதலைப் பேறு என்றேன்.

"வெட்கம் எமக்கிது வெற்றி இப்போதில்லை
மக்கள் சுதந்திர மாண்பறியார்,
கோட்டை உடைந்தது வீட்டு மதிற்சுவர்
கொடிய இரும்பாலே செய்ததென்"றாள்

என்னேடிறத்துவம் ஏதோநீ சொல்கின்றாய்
எனக்கறிய அதைச் சொல்லு மென்றேன்
பொன்னுருவாள் முகம் புன்னகை மின்னிடப்
போதப்பொருள் எனக் கோதுகின்றாள்.

மக்கள் சுதந்திரம் மனைவியர் சுதந்திரம்
மற்று முள்ள பல பேறுகளும்
நக்கும் அதை நாம் நடத்துவோம் ஆயின்
நாட்டு மதைஎம், மிற்பிரித்து,

நிற்கிறதே பிறர் ஆட்சி இதையிப்போ
நீறாக்கி எம்மினம் வெற்றி கண்டால்,
கூட்டும் சுதந்திரப் பேறு" என்றாள் என்றன்
கொள்கை என்றேன் உளம் துள்ள நின்றேன்,

நன்று நன்றென்று நான் ஆர்ப்பரித்தேன் கைகள்
நாரி அவளுடல் மேவிடவே,
மின்சார மென்ன மேனி புளகுற,
மேவி நிறைந்தது இன்பவெள்ளம்

கொன்றிடுவாள் போல நோக்கி நின்றாள் அவள்
கூர்விழித் தடங்கலில் என்னுயிராம்,
வண்டு சிறகொடிந்தாடக் கண்டேன் அவள்
வண்ணங் கண்டேன் மனம் நொந்துநின்று,

காந்தம் வழி ஊசி செல்லுமன்றோ? பொய்கைக்
கமலம் கார்வண்டை அழைப்பதுண்டோ?
சேர்ந்த குணமொடு கொள்கையும் எண்ணமும்
சேர்ந்தவர் கூடுதல் இயற்கையென்றேன்.

"மாந்தர் இயற்கை ஆயின் இதற்கொரு
மாற்றமும் இல்லை இக்காதலினால்,
நேர்ந்த விபத்துக்க ளோசிலவோ மனிதர்
நேர்மையை என்றென்றும் நம்புவதோ!

காதலி என்றழைப்பார் இதழில் அன்புக்
கனியமுதே யென்று முத்திடுவார்,
சாவிலும் வாழ்விலும் நீயே என்று அப்போ
சத்தியம் செய்து கை தொடுவார்,"

ஓவியத் துருவேயென் றுவந்திடுவார் பெண்கள்
உயிர்ப் பொறையனைத்தும் கவர்ந்து பின்னர்
பாவியராய் விட்டுச்சென்று பிறர்தூற்றப்
பார்த்திடுவார் பெண்ணை ஏய்த்திடுவார்.

பெண்களுக்கே கற்பு என்றிடுவார் அதைப்
பிடுங்கும் விலங்குகள் ஆகிடுவார்
ஆண்களின் கற்பை உணர்ந்தறியார் பெண்ணை
அடிமைகள் போல நடத்திடுவார்,

இந்த உலகினில் சுதந்திர நல்லெண்ணம்
எய்துமட்டும் பெண்கள் உய்யுமட்டும்
சிந்தையிலும் "மணம்" என்ற நிகழ்வினைத்
தீண்டுவதில்லை நான்" என்றுரைத்தாள்.

மதியைப்பிரிந் தொளிமாறு கொண்டாலும் நல்
வாசம் மலரைவிட் டேகினாலும்
மதுவைவிட்டே வெறி யோடி ஒழிக்கினும்
மாதுன்னை நான் என்றும் பிரியேனடி!

சத்தியம் என்தாயின் மீதாணை பிறந்த
தாய்த்திரு நாட்டின் மேலாணை, சக்தி
அத்தனைக்கும் முதலானவள் பேரருள்
ஆதிபவானி அவளாணை.

என்றுகொண்டே அவள் செங்கரம் பற்றி என்
இதய பீடத்தின் உள்ளழுத்தி
துன்றுமுணர்வொடு முகமலர் நோக்கினேன்
தோகைய வளிவை கூறலுற்றாள்.

"சாதியில் நான் புலைப்பெண்ணறிவீர் இது
சாத்திரத் திற்கென்றும் உதவாது
வேதியர் வைத்த முறையெனினு மிப்போ
வேரற உயிரிற்கலந்த கொள்கை.

நீசக் குலத்துப் பெண்ணனை அன்புடன்
நீங்கள் மணந்து கொண்டாலும்
மோசம் புரியும் உலகின் கொடுமைகள்
முற்றும் தவிர்த்திட முடியாதென்றாள்.

நாலும் இரண்டும் அறிந்தவள் உன்னுரை
நன்று மிகநன்று என்னுரை கேள்,
வேலும் வில்லுங்கொண் டென்னுடல் வெட்டியெவ்
வேதனைத் தீயிலே இட்டாலும்

நானுன்னை விட்டிடப் போவதில்லை பெண்ணே!
நானறிவாய் இன் நீயறிவாய்,
ஈனப் புலச்சியை நான் மணந்தேன் என்று
எழுதிடுவார் காதல் பரவிடுவார்"

கன்னற் றமிழுண்டு கள்ளுண்டு கூழுண்டு
காதலுண்டீருடற் கோருயிர்போல்
பின்னிப் புணரின்பம் போலே சுவாக்கம்
பிறிதொன்று உண்டோ பெண்ணங்கே.

என்றேன் அவள்நெஞ்சு துள்ளும் நிலைகண்டு
இதயம் அறிந்தேன் அருகிழுத்து,
செந்தேன் ஒழுகும் இதழிடையே முத்தம்
சிந்தி நின்றேன் அவள் கண்புதைத்தாள்,

கட்டி அணைத்து என் மாதரசே எனக்
கைகளையக் கொளும் நேரத்திலே,
கொட்டும் பனியுடன் 'சில்' லென்ற மென்காற்றுக்
குலைத்திடவே கண்கள் விழித்துவிட்டேன்.




**இரசிகமணி, கனக. செந்திநாதன்**
**அவர்கள் வழங்கிய**
**அணிந்துரை**

*தாய் 1969*

கவிஞர் தில்லைச்சிவனின் இரண்டாவது கவிதைத் தொகுதி தாய. 1961 ஆம் ஆண்டில் கனவுக்கன்னி என்ற கவிதைத் தொகுதியை இவர் அளித்துள்ளார். எட்டு வருடங்களின் பின் 'கன்னி' 'தாய' ஆகத்தானே வேண்டும். எஸ்.எஸ்.ஸி. படித்துக்கொண்டிருக்கும் போதே பட்டணத்து மச்சினி என்ற அழியாப்புகழ் பெற்ற கவிதை மூலம் எழுத்துலகுக்கு வந்தவர் தில்லைச்சிவன். 'பட்டணத்து மச்சினி' யின் தரமறிந்து தமது மறுமலர்ச்சிப் பத்திரிகையில் பவனிவரச் செய்த தி.ச.வரதராசன், கவிதைக்கன்னிக்கு முகவுரை எழுதுகையில் தில்லைச்சிவன் கவிதைகள் அவ்வளவும் உயிருள்ள கவிதைகள். அவற்றில் கற்பனைகள் இனிக்கும்; காதல் துள்ளும்; உணர்ச்சி கிளுகிளுக்கும்; தமிழ் மணக்கும்" என எழுதியுள்ளார். 'தாய்' என்ற இத்தொகுதியில் மேற்படி அம்சங்கள் பண்பட்டு இன்னும் மெருகேறி ஒளிவீசுகின்றன என்பது உண்மை.

சிதறு பூப்போல் இத்தொகுதியில் பாடல்கள் - நாற்பதுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் - அமைந்திருந்தாலும்; தேசம், தமிழ், அழகு, காதலும் குடும்பமும், பெரியோர்கள், கதைப்பாடல் என்ற ஆறு பிரிவுகளில் இவற்றை அடக்கலாம். இந்த ஆறு பிரிவுகளில் காதலும் குடும்பமும் என்ற பகுதிதான் விஞ்சி நிற்கிறது. பதின்நான்கு தலைப்புகளில் - பல கோணங்களில் - அவர் அதைப் பாடியுள்ளார். தில்லைச்சிவனின் காதற் பாட்டுகள் 'வெறும்கொப்பி'க் கவிதைகள் அன்று. அவருக்கு உரித்தான 'பாணி' ஒன்று இருக்கிறது. அதைச் சுருக்கமாகச் சொன்னால் பட்டணத்துத் தெருவில், பட மாளிகையில் படிக்கும் கல்லூரிகளில் தோன்றும் காதலல்ல அவர்கள் காதல். சின்னஞ்சிறு கிராமத்தில் இயற்கையான சூழ்நிலையில் முறையான காரணத்தோடு தோன்றும் காதல்தான் அவருடையது. அதைச் சொல்லும்விதமும் ஆபாசம் கலவாதது. இதனால்தான் தில்லைச்சிவன் உயர்ந்துநிற்கிறார்.

தில்லைச்சிவனின் காதல் துள்ளலை, உணர்ச்சிக் கிளுகிளுப்பை இந்தப் பதினான்கு தலைப்புக்கள் கொண்ட பாடல்களில் பல இடங்களில் காணலாம். ஆனால் இரண்டு இடங்களை மட்டும் தொட்டுக்காட்ட விரும்புகிறேன். "சிறுமியாய் இருந்தபோது தன்னுடன் விளையாடிப் பொய்க் கோபங்கள் காட்டியவள் இன்று பெரியவளாகித் தன்னைக் கண்டதும் ஒளித்துக்கொள்வது ஏன்?" என்று கேட்கிறார் கவிஞர். ஏதோ உன் உள்ளம் என்ற கவிதையில் அவர் பாடுவதைப் பாருங்கள்:-

"தொட்டில் அசைத்திடத் தூளிகை கேட்டாய்
தோரண மாய்ஆலின் விழுதை அமைத்தேன்
பட்டுத் துணியினால் சுற்றிய கற்சேய்
பள்ளிகொள்ள எனப் பாட்டும் இசைத்தேன்
வட்டில் எனஆலின் இலையை எடுத்து
வார்த்தபொய்க் கூழினை உண்டு களித்தேன்
மெட்டி ஒலிக்க அணைகுவை இன்றோ
மெல்லெனப் போயங் கொழிக்குதல் நன்றோ"

ஆலம்விழுதால் தூளிகை கட்டுவதும், கற்சேய் பள்ளிகொள்ளப் பாட்டுப் பாடுவதும், வட்டில்என ஆலின் இலையை எடுத்து வார்த்த பொய்க் கூழினை உண்டுகளிப்பதும் அசற் கிராமத்துச் சிறுவர் விளையாட்டுகள், தில்லைச்சிவனின் ஆழ்ந்த அனுபவ உணர்ச்சி கவிதையாகப் பீறிடுகிறது. மனதைக் கிளுகிளுக்க வைக்கிறது.

அத்தானைக் காத்திருக்கும் கிராமத்து நங்கை தனக்கே உரித்தான 'கொச்சை' மொழியிலே பேசுகிறாள். கிராமத்து மொழி தில்லைச்சிவனின் பாடல்களில் உயிர்ப்போடு விழுகிறது.

"வெட்டிப் பிளவெடுத்து வெத்திலையும் காம்பு நுள்ளிக்
கட்டித்தூள் மணஞ்சேர்த்துக் கைநிறையக் கொண்டு வந்தேன்
செட்டிமகன் இவ்வளவும் செய்வதென்ன? கொடுகொடுக்கக்
கொட்டும் பனிக்கூதல் கொஞ்சமும் தெரியல்லையா"?

எளிமை, அழகு, ஆழம், உண்மை, உணர்ச்சி என்றெல்லாம் கவிதைகளுக்கு இலக்கணம் கூறுகிறார்களே. தில்லைச்சிவனின் இந்தப் பாடலில் எதுதான் இல்லை.

வெறும் காதற் கவிதைகள்தானே என்று முகம் சுளிக்கும் அன்பர்களுக்கு வீரம் காத்திருக்கிறது. தரும யுத்தம் என்ற ஒரேயொரு கதைப் பாடலில் வீரம் கொப்புளிக்கிறது. கைமுனு எல்லாளனை வென்ற கதைதான் தருமயுத்தம். எல்லோருக்கும் தெரிந்த கதைதான். ஆனால் தில்லைச்சிவனின் விருத்தங்கள் ஆற்றொழுக்காய் அமைந்து வாசிக்கத் தூண்டுகின்றன. இன்னொரு விசேடம் கைமுனுவையும் எல்லாளனையும் ஓரக்கண்பார்வை பாராமல் - தராசு முனையில் நிறுத்திப் பாடியுள்ளார். கைமுனு வீர சபதம் செய்வதைப் பாருங்கள்:-

"தாய்த்திரு நாட்டின் பூட்டைத்
தகர்த்துடைத் தெறியா தோய்ந்து
போய்த் துயில் கொள்ளேன்; இன்பம்
புல்லிடேன்; அமுதைச் செந்தேன்

தோய்த்தெடுத் தடினும் உண்ணேன்
தோழரே! இவைசெய் வேனால்
நாய்ப்பிறப் பெடுத்துச் சூழும்
நரகெல்லாம் அலைவே னாக"!

இந்தப் பாடல்களை எல்லாம் படித்துப் பாத்தபோது நமது பாடப் புத்தகங்களில் இவை பவனி வந்து மாணவர் வாயூற - மனங்குளிரப் படித்தால் என்ன? என்ற எண்ணம்தான் எனக்குத் தோன்றியது. தாம் பிறந்த தேசத்தைப் பாடாத கவிஞர்கள் இல்லை. தாய்நாடு மகாவலி, ஈழம் புகழ்பாடல் எந்நாள், என் ஊர் என்ற தலைப்புகளில் இக்கவிஞரும் பாடியுள்ளார். சில மனிதருக்கு - ஏன் சில எழுத்தாளருக்கே - நமது நாடு, நமது நாட்டு எழுத்தாளர்கள் - நமது கிராமங்கள் - நமது வாழ்க்கைமுறை ஒன்றுமே பிடிப்பதில்லை. கவிஞர் தில்லைச்சிவன் பாடியுள்ள 'என் ஊர்' நிச்சயம் இவர்கள் கண்களைத் திறக்கும் 'பட்டண வாசத்தில்' இருந்து கொண்டு 'கிராமத்து மண் வாசனை' தோன்ற எழுதுகிறோம் என்று நடிப்பவர்களின் கண்களை இது நிச்சயம் திறக்கும்.

"ஆடுதுலா மரம்மீது ஆணழகன் ஏறிநின்று
ஓடிமிதித் துதைத்த உடல்வாதை தான்மறக்கப்
பாடிக் களித்துவிசில் பண்ணிக்கும் மாளமிட்டும்
வேடிக்கை யோடுபயன் விளைக்கு மெங்கள் சரவணையூர்!

காதல் - வீரம் - சிற்றூர் இவைகளைப் பார்த்துவிட்டீர்களா? தில்லைச்சிவன் பாரதி, நாவலர், வன்னியசிங்கம், அறிஞர் அண்ணா முதலிய பெரியோர்களைக் காட்டியுள்ளதையும் படித்துப்பாருங்கள். ஆனால் அவர் தமது அயலைச் சார்ந்த வேந்தனார், தில்லைநாதப் புலவர், பொன் குமாரவேற்பிள்ளை முதலியோரைப் பாடியுள்ளதிலேதான் என்மனம் குளிர்கிறது. வேந்தனாரைப் பற்றிய பாடலில் அவரது ஆற்றலைச் சரியாகத் தொட்டுக் காட்டியுள்ளார் கவிஞர்.

"சொந்தவொரு முயற்சியினால் தமிழைக் கற்று "
துலங்குமருட் பெருங்குணத்தால் உலகிற் கெல்லாம்
தந்தகவி 'அம்மா' இந் நாட்டின் செல்வத்
தமிழ்ச்சிறுவர் மழலையெலாந் தவழ வைத்தாய்"

என்ற பாடல்தான் உண்மையான வேந்தனாரைக் காட்டுகிறது. ஆனால் 1930 - 1940 - க்கு இடையில் புகழ்பெற்ற எழுத்தாளராகி, அமரரான பொன் குமாரவேற்பிள்ளை அமுதசுரபி என்ற அழகான மாதப் பத்திரிகையை அக்காலத்தில் நடாத்தியதையும் அவர் பாடலில் தொட்டுக்காட்டியிருத்தலைக் கண்டு வியந்தேன்.

தில்லைச்சிவனின் தமிழ்ப் பற்றுப்பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. 'ஆரியத்தைக்' கொஞ்சம் கடுமையாகத் தாக்கி எழுதியிருக்கும் பாடலில் இருந்தே நீங்கள் அதை அறிந்துகொள்ளலாம். அந்தநாள் - சதிர் என்ற பாடல்கள் கவிஞரின் வெற்றிகரமான பாடல்கள் அந்தநாள் என்ற கவிதை முதுகவிஞராய் இருந்து மறைந்த யாழ்ப்பாணனின் 'மாங்காய்க்குக் கல்லெறிந்து' என்ற பாடல்களை நினைவூட்டினாலும்

பல பாடல்களில் தனித்த முத்திரையைப் பொறித்திருக்கிறார் தில்லைச்சிவன்.

செம்மணற்றிக் காட்டில் செவ்விளநீர் பறித்தருந்திப்
பொம்மன் கிணற்றிலதைப் போட்டுவிட்டு அவன் வளவில்
வெள்ளரியின் பிஞ்சையெலாம் வேண்டுமட்டும் நாம்பிடுங்கிப்
பள்ளிவரப் பட்ட அடி பாடின் அந்நாள் வாராதோ?

தில்லைச்சிவனின் பாடல்களைப்பற்றி இன்னும் எவ்வளவோ சொல்ல ஆசைதான், ஆனால் அவர் "ஐந்து பக்கங்கள்தான் உமக்கு" என்று சொல்லிவிட்டாரே. சிவனின் கட்டளையை மீற நம்மால் முடியுமா?
தில்லைச்சிவனின் பாடல்களிற் பல நின்று நிலைக்கும் என்பது உறுதி.

## ௫௫. கடவுளும் தாயும்

மலருள் நிறைந்து "மணம்" என்று புகழ்பரப்பி
நிலவில் ஒளியாகி நெருப்பிடையே வெம்மையதாய்
பழகு தமிழ் இசையில் பாய்ந்தினிமை பயந்தழகு
மழலை மொழியில் "இன்ப மயக்கம்" என்ற பேருடையான்

வீரர்திருத் தோளில் வேளாளர் ஏர்முனையில்
காரிற் றொழிலாளர் கரங்களிலும் குடியிருப்பான்
பாரு ளுயர்ந்தநல்ல பண்பாளர் உள்ளத்தில்
நேருக்கு நின்று அருள் நிர்மலனென் பாரவனை.

அறிந்தவர்க ளில்லை அனுபவியார் யாருமில்லை
தெரிந்தோம் என்பார் கண்டதில்லை சேர்நெறியொன் றில்லைநோய்
வருத்திடும்போ தின்மருந்தாய் வந்திடுவான் யான்தனித்து
இருந்திடும்போ தென்நெஞ்சில் இன்பவனு பவந்தருவான்.

கண்ணன் என்பர் 'கர்த்தர்' என்பர் கருணைமிகு அல்லா
விண்ணுலகையாளும் வேந்தன் என்பர் 'புத்தன்' என்பர்
எண்ணி லடங்காத எத்தனையா யிரம்பெயரால்
இன்னுமுரைத் தழைத்தும் எவரவனைக் கண்டார்கள்?

காணா திருந்தெனது கடுகுளத்தில் அணுமின்னாய்
வீணாகா னஞ்செய் வித்தகனே கண்கண்ட
தெய்வம்என் தாய்மேல் தீந்தமிழ்நற் கவியெழுதி
உய்ய நினைத்தேன் உன்னருளாம் கையளிப்பாய்

பாலிற் படுநெய்போல் பாவலர்தம் நெஞ்செழுந்த
நூலிற் பொருளாய் நுகர்வோர் பெறுபயனே!
ஆலித் துலையும் அலைசூழ் உலகிலருள்
பாலித் தெனதன்னைப் பாட்டுவரக் காத்தருள்வாய்!

"அன்னைதனி லினியை"யென ஆண்டாண்டு தோறும்
நின்னை வழுத்தி நினைந்துருகிப் பாடுமென
தன்னை தனதன்புக் காளாகி னேனதனைப்
பன்னிக் கவிதைசில பாடவருள் தாராயோ?

'உத்தமனுன் பிள்ளை' யென ஊரார் சொலக்கேட்டுப்
பெற்ற பொழுதின் பெரிதுவக்கு மன்னைதனை
வைத்துக் 'கவி'யென்றென் வாய்குளற அதன்நிறைந்த
சத்துப் பொருளாகித் தாங்குமிறை வாழியவே!

பெற்றெடுத்துப் 'பிள்ளை'யெனப் பெரிதுவந்து தலைமோந்து
மெத்தையிட்டு மலர்பரப்பி மெல்லணையிற் றான்வளர்த்தி
சித்தத் துணர்வையெல்லாஞ் சேர்த்துமுலைப் பாலூட்டி
சத்திதருந் தாயின் தண்ணளியைப் பாடேனோ!

கத்தும்போ தெழுந்து "கண்ணேறு பட்ட"தெனச்
சித்தம் துடித்துச் சிலஎடுத்துச் சிரசிலிட்டுப்
பத்தியந்தா னுண்டுமுலைப் பாலால் உயிர்வளர்த்த
உத்தமியெம் தாயாரை உயிர்த்தவிசில் ஏற்றேனோ!

குந்தவைத்துச் 'சப்பாணி கொட்டு' எனப் பாட்டிசைத்து
பந்தெடுத்துத் தந்து பம்பரத்தை ஆட்டிவிட்டு
எந்திரப் பொம்மைகளை எம்முன்னா லாடவிட்டு
சந்தத் தமிழ் இசைத்துத் தாலாட்டுச் சொன்னவள்தாய்

புத்தம் புதுஆடை பொன்னணிகள் பூட்டிமகிழ்
முத்தஞ் சொரிந்துதினம் முன்தூக்கிக் கண்ஒற்றி
முத்துச் சிரிப்புதிர்க்க மோகித் தணைத்துநெஞ்சில்
வைத் தூஞ்சல்ஆட்டி வாழ்த்திடுவாள் தாயவளே

வானத்து அம்புலியை வண்ணமயில் கிள்ளைமுயல்
கானத் தெழிலை எலாம் காட்டியெமை ஏய்த்தன்பால்
ஊணைத் தருந்தாயாம் உத்தமிதம் அன்பைவைத்து
ஞானக் கவிதைசெய்து யாம்பாட வேண்டாமோ

குத்திக் குளறிக் குறும்பு பலசெய்து
தத்தித் தளர்நடையால் தள்ளாடிப் பாவிவர
மெத்தமகிழ்ந் தெம்மை மேலெடுத்துத் தோள்மீது
வைத்தாடு மன்னையன்பை வாழ்கவெனப் பாடோமோ?

பத்துத் தனித்திங்கள் பாடுபட்டுப் பெற்றெடுத்து
கத்தும்போ தெல்லாம் கடவுளரைக் கைதொழுது
சொத்தை அளித்துச் சுகமளித்துப் பல்கலையாம்
வித்தை பெறவாழ்த்தி விரதம் இருந்தவள்தாய்

ஆடித் திரிந்தெங்கள் அழகுடலில் தூசுதொட்டு
வாடிவரக் கண்டோடி வந்தணைத்து முத்தமிட்டு
ஆசையுடன் நீராட்டி அழுக்ககற்றி அழகுசெய்யும்
தாயைப் புகழ்ந்தேத்தித் தமிழ்செய்து பாடுவமே!

வீரன் அருச்சுனனும் வில்லாளன் கன்னனுஞ்செய்
போரின் திறங்கூறிப் பொன்றிடினும் நன்றிகொல்லாத்
தீரம் வியந்து 'செயற்கரிய செய்தமனுச்
சோழன்' எனஎம்மைச் சொல்லிமகிழ் வாளன்னை.

பள்ளிக்கு வைத்தங்கு படித்த 'அம்மா'ப் பாட்டதனைச்
சொல்லக்கேட் டோடிவந்து துரத்திப் பிடித்திதமாய்
மெல்ல அணைத்தமுத முத்தமழை சொரிந்து
உள்ளம் களித்து உவந்திடுதாய் வாழியவே!

## 56. தாய் நாடு

என்னாடு ஈழ மணித்திருநாடு
என்றிடில் உள்ளத்தில் இன்பத்தே னாறு
பண்ணோடு இசைபாடிப் பாயுமப் போது
பாவினிற் போற்றிப் பரவல்தான் தோது
விண்ணாட்டுத் தேவரும் விரும்புமிந் நாடு
விருந்தளித் தேதினம் உவந்திடும் நாடு
பொன்னாடு மாவலி யோடுபல் ஆறு
புரந்து வளந்தரும் ஈழநன் நாடு.

சிங்களஞ் செந்தமி ழாமிரு மொழிகள்
சேர்ந்து ஒளிதரத் திக்கெட்டும் வாழ்த்த
கொங்கலர் இன்மலர்ச் சோலைகள் தோறும்
குயில்க ளிசைத்திட மயில்கள் நடிக்க
பங்கயச் செவ்விதழ்ப் பாவையர் எங்கும்
பள்ளிசை யால்நெற் பயிரை வளர்க்கச்
சங்கீன்ற வெண்முத்துப் பொங்கு நலஞ்சேர்
சாகரஞ் சூழ்ஈழ நாடெங்கள் நாடே.

புத்தன் அருளாலும் முப்புரஞ் செற்ற
புனிதன் அருளாலும் புகழுற்ற நாடு
முத்தும் அரிசியும் மற்றவர்க் கீய்ந்து
முன்னீர்த் திரைவந்த பல்பொருள் கொண்டு
வித்தை பலகற்று வீரர்செந் நீரால்
விளைவுற்ற சுதந்திரப் பயிர்கொள்ளும் நாடு
அத்தனும் அம்மையும் வாழ்ந்தெமை ஈன்றே
ஆனந்தங் கொண்டொளிர் ஈழத்தாய் நாடே.

## 57. காலைக்கதிர்

மடல் விரித்து மலர்கள் இன்ப
மணம் பரப்பி ஆடுது
கடல் எழுந்து அலை யெறிந்து
காலை இசை பாடுது.

கொக் கரக்கோ என்று சேவல்
கூரை மேல கூவுது
தொக்கி நின்ற இருட்தி ரையைத்
தூக்கி வானம் வீசுது.

வெள்ளி யாறு ஒன்று வான
வீதி யெங்கும் ஓடுது
துள்ளிப் பாய்ந்து தங்கச் சேற்றுள்
தோய்ந்து சுளி போடுது.

ஆனை மாடு ஒட்டை சிங்கம்
அண்டம் மேலுலா விப்பின்
பூனை யாகித் தேய்ந்தி றுந்து
போகும் விந்தை காண் மினோ.

மேகப் பஞ்சுப் பொதியிற் பொன்னின்
மின்னற் கீற்றுப் பாயுது
காகம் கொம்பி லேறிக் குந்திக்
"காகா" வென்று கரையுது.

வானம் கடலைக் கூடு மிடத்தில்
வந்து செந்தீ மூளுது
கானம் பாடிப் பட்சி ஜாலம்
ககன மீது பறக்குது.

இருள் அரக்கன் உடல்கிழித்து
இருதயத்தைக் கொண்டுமேல்
வருதல் போல வானமுலை
வந்து பரிதி தோன்றினான்.

நீல வண்ணன் கையிற் சுற்றும்
நித்தில வெண் சக்கரக்
கோல மன்ன பரிதி விண்ணைக்
குலவி மேலே வந்தனன்.

வர்ண ஜாலம் புரிந்த தூய
வானம் அந்த மருங்கெலாம்.
மர்ம ஜாலம் புரிந்து அன்பில்
மலர்ந்த திந்த உலகெலாம்.

## 58. வாடை

வடதிசை நின்று 'ஓய்' யென வாடை
வந்திங்கு வீசாதோ
கடல் எழுந்தலை "ஓம்ஓம்" என்று
கரைந்திடிற் கேளாதோ?

பரியலை யாயிரம் பாய்ந்து வரக்கடல்
பம்பி எழும்பாதோ
கரியென ஓட்டையென் றேமேகம் வானத்தைக்
காடாக்கிக் காட்டாதோ

"கட்டக் கடபுட" மேகம் குமுறிக்
கர்ச்சிக்கக் கூடாதோ
வெட்டி யிருளைப் பிளந்தொளி மின்னல்
வீசி யடிக்காதோ

"கொடுகொடு" வென்று கூத லடிக்கக்
கூசி நடுங்கேனோ
"சடசட" வென்ன மரங்கள் முறிந்திடும்
சத்தமா ராட்டாதோ

திகில்மி குத்த பயமகிழ் வொன்று
தேக்கிட வென்னுளத்தில்
அகில்ம ணத்துடன் வாடை தருமந்த
ஆவணி வாராதோ

'கூ' வெனச் சோலை எங்ஙணும் வாடை
கூவிக் களியாதோ
'வா' வென் றழைக்க மாமழை யிங்கு
வந்து பொழியாதோ

"கதக்க கததக்க" தவளைகள் சொல்லும்
கதைகளைக் கேட்கேனோ
மதம தப்பொடு அன்னை மடிக்குள்நான்
மண்டிக் கிடக்கேனோ.

## 59. நர்த்தனம்

குளிர்ந்த காற்று முட்டி மோதிச்
சுழன்ற டிக்குது - கோடைக்
கொடுமை நீக்கி உலகம் முற்றும்
குதூக லிக்குது - காட்டில்
இருந்து மந்தைக் கூட்ட மோடி
இல்லஞ் சேருது - வானம்
எங்கும் வெள்ளிக் கீற்றில் சென்று
மின்னல் பாயுது.

கறுத்த மேகம் வானம் முற்றும்
மறைத்து மூடுது - கதிர்
கான்ற ஒளியி னிழைக ளெங்கும்
இங்குந் தேயுது - நன்கு
பருத்த மரத்தின் கிளைகள் தம்மைப்
பட்சி சேதுரு - மலர்
பரவிச் சோலை மழையை ஒல்லை
வரவ ழைக்குது.

வயிர வாள்சு முற்றி வான
வீதி வந்தனள் - அருள்
வாணி யிடிமு ழக்கி வெற்றி
வாகை சூட்டினள் - புவிக்கு
உயிர ளித்துச் 'சளச ளென்று'
உதிர்ந்த நித்திலம் - இந்த
உலகம் வாழ இயற்கைத் தேவி
புரிந்த நர்த்தனம்.

## ௬0. மகாவலி

பாதபங்க யத்திலூறிப் பாயுந்தே னருவிகள்
வேதமந்திரம் பாடிவிளை யாடும்விந்தை காண்மினோ
மலைவளர்ந்த வேயின்முத்தும் மணியுங்கொண் டெறிந்துமே
கலைகள்தேரும் புலவன்நெஞ்சில் கவிதைவீற ஓடுதே

திமுதிமென்று அலையெறிந்து திசைகள்தோறும் ஓடுது
குமுதமூறுந் தேறல்அள்ளிக் குடித்துத்தேரை பாடுது
காவுளோடிக் கழனியாடிக் கடுகதிவெண் புரவிபோல்
வாவலைகள் வீங்கிப்பாயும் வளமைவந்து காண்மினோ

பொன்விரித்த அலைக்கரத்தில் பூக்கள்கொண்டு நல்லெழில்
பெண்கள்சூட வைத்தகங்கை பெருமைபாடி யாடுவோம்
பூந்துகிலுடுத்த கங்கை பொன்னிலங்கை யெங்ஙணும்
பாய்ந்து நல்ல வளமை ஆற்றும் பான்மைகாண எழுமினோ

காடும்மேடும் மகாவலி கங்கைமேவி ஓடவே
வாடல்இன்றி ஈழம்எங்கும் வாழ்த்துப்பாடி ஆடுமே
பொங்கரின் நுழைந்து குளங்கள் புகுந்துதழைந்து ஈழநல்
மங்கையுள்ளம் பொங்கஓடும் மகாவலியும் வாழ்கவே.

## ௬௧.தை பிறந்தது

பொங்கும் இருட்திரை நீக்கியே - அருட்
புத்தொளி எங்கும் தேக்கியே
செங்கதிர் வானினைச் சேர்ந்தனன் - கவி
செய்து பலரதைப் பாடினர்.

பொன்னின் ஒளிக்கீற்றுப் பொலிந்தது - கடல்
பொங்கி ஒலித்தலை எறிந்தது
"தண்"ணெனத் தென்றல் தவழ்ந்தது - பொய்கைத்
தடங்களிற் றாமரை மலர்ந்தது.

வண்டுகள் கின்னர வாழ்த்தொடு - புது
மலர்களில் மதுவினைச் சேர்த்தன
எண்ணிற் பலப்பல அழகினை - வானில்
ஏற்றி இரவி எழுந்தனன்.

செந்நெற் கதிர்க்குலை சிரித்திட - அதைச்
சென்று சிலபட்சி கொறித்தன
மண்ணின் மணமுணர் மறவர்தோள் - மகிழ்
மண்டிப் புடைத்து மலைத்தன.

கன்னியர் கைவளை கலங்கிட - செய்ய
காலினிற் கிண்கிணி அலம்பிட
பண்ணிய கூத்தினைப் பார்த்துமே - விண்ணிற்
பருதி எழுந்துலா வந்தனன்.

மாயம் புரிந்தது வானகம் - அன்பின்
மர்மம் புரிந்தது மண்ணகம்
தோயும் ஒளிவெள்ளம் உலகெலம் - தமிழ்
தொன்மை விளக்கத்தை பிறந்தது.

## ௬௨. தைப்பொங்கல்

புத்தம் புதுமலர் புன்னகை செய்திடப்
பொங்கும் கடல்அலை சங்கம் முழங்கிடச்
சித்தம் மகிழ்ந்த உழவர்கள் நாவெலாம்
செங்கதி ரோன் வாழ்கவாழ்கென வாழ்த்திட
தென்றல் பனித்துளி சிந்தி நடந்திட
செந்தமிழ்ப் பாட்டுடன் மங்கையர் ஆடிடக்
குன்றிற் குதித்த நதியோடி ஓடையில்
குமிழிட்டுச் சுழிபட்டுக் குலாவிக் களித்திட.

உந்தி யெழுந்துவான் ஒளிக்குளத் தாடியிவ்
உலகினைத் தங்க முலாமிட்டுக் கூடியெம்
செங்கதிர் வானத்தில் ஏறினன் தைவரச்
சிலிர்த்தது நெற்கதிர் விழித்த துலகெலாம்
வானம் பொழிந்தது பூமி விளைந்தது
மக்கள் உழைப்பின் மகிழ்ச்சி பொலிந்தது
தானம் சிறந்தது வெய்யோன் வடதிசை
தாவி நடந்தனன் தையும் பிறந்தது.

பட்டுப் புனைந்தவர் தம்மொடு ஆயிரம்
பொட்டல்க ளோடாடை பூண்டவர் தாமுமாய்
ஒட்டி யுறவாடிப் பொங்கலிட் டேநறும்
மட்டவிழ் புதுமலர் தூவி வணங்கினர்

செங்கதிர் தந்தநல் நெல்லெடுத் துச்சுவைத்
தேன்பழம் பால்கொண்டு படைய லிட்டு
மங்கையர் சூழ்தரப் பொங்க லிட்டேதமிழ்ச்
சிங்கங்கள் வாழ்த்தினர் வாழ்க பொங்கல்!

## 63. வசந்த விழா

கரும்பனைக் காலின்மேல் மேகத்திரை போர்த்த
கந்தர்வப் பந்தலிலே - எம்
மருங்கும் கமுகும் கதலிகளும் நட்டு
மாண்பெழில் பெய்தாச்சு.

மின்னற் சரட்டினைப் பின்னியே தோரணம்
மேலேஅமைத் தாச்சு - எழில்
துன்னிடுந் தூவியும் தோகையுமே கொண்டு
சோடனை செய்தாச்சு.

புத்தம் புதுமணல் பரப்பி வசந்தனைப்
போற்றி அழைத்தாச்சு - வானில்
எத்திசை யும்ஒளி ஏற்றிடக் கோடி
எழில்மீன் விளக்காச்சு.

மங்கலப் பொற்கும்பம் வானில் அமைத்திட
மதியை அழைத்தாச்சு - செய்தி
எங்கும் உரைத்திடப் பூங்குயிற் றூதினை
ஏவி விடலாச்சு.

வெண்மலர்க் கிண்ணியில் மதுரசம் வார்த்து
விருந்து மகிழ்ந்திடவே - வண்டுக்
கன்னியர் சேர்ந்திசை பாடினர் ஆடினர்
களிப்பில் அயர்ந்தனரே.

மாம்பழம் கொத்தி மகிழ்ந்திடும் கிள்ளையில்
மாரன் இவர்ந்து வந்தான் - நல்ல
வேம்பின் மலர்மண மாலை அணிந்திங்கு
வேனிலோன் வந்துவிட்டான்.

வள்ளைக் கொடியென மெல்ல அசைந்தன்ன
வசந்தி மலர்ச்சிரிப்பால் - அவன்
உள்ளம் பறித்தந்தக் கொள்ளையி லேயின்பம்
அள்ளி நடந்துவந்தாள்.

வசந்த சேனையை வேனிலோன் கூடி
வந்தபூம் பந்தலிலே - நின்று
அசந்த துலகெலாம் இன்பக் களிப்பினில்
ஆனந்த மாடியவே.

## ௬டு. கவிதைத் தெய்வம்

பூவில் காவில் தேனில் - தீ
பொறியில் பொய்யில் புலவன்
நாவில் கவிதைத் தேவி - நின்று
நடன மாடி மகிழ்வாள்.

அன்பு கொண்ட நல்லோர் - நெஞ்சை
அணைத்துக் காதல் புரிவாள்
வன்பு கண்ட போது - ஊழித்
தீயைப் போல எழுவாள்.

தெள்ளத் தெளிந்த நூலில் - ஒளி
திரண்ட முத்து மணிகள்
அள்ளிக் கொண்டு வருவாள் - வந்து
அன்பருக்கு அருள்வாள்.

தீயில் இட்டபோதும் - கொடிய
திருடர் கொண்ட போதும்
பாயும் வெள்ளத் தோடு - ஏட்டைப்
படர விட்ட போதும்.

தோயும் உள்ளம் எல்லாம் - கவிதை
துளிர்த்தெ ழுந்து விண்டு
வீறும் புதுமை இளமை - மிக்கு
விளங்கும் எங்கும் கண்டீர்.

வாழி கவிதைத் தேவி - இந்த
வையமுள்ள மட்டும்
ஊழி ஊழி எல்லாம் - நல்லோர்
உள்ளம் நின்று உலாவி.

நாத வின்ப மாவாள் - காற்றில்
நடந்து விண்ணில் ஏறி
ஓதுவோர் தம்நெஞ்சில் - ஊறும்
உணர்ச்சி ஆகி நிற்பாள்.

கவிதை எங்கள் தெய்வம் - அவள்
கருணை பெற்ற மனிதர்
புவியில் என்றும் பொன்றாப் - பெரும்
புகழினோடு வாழ்வார்.

## ௬௫. பாரதி நினைவு

தீயினை வான வெளியினை அமுதைத்
தேனினிற் குழைத்தெடுத் துலகத்
தாளினில் நிலவின் கதிரினைக் கொண்டு
தண்டமிழ்க் கவிதைகள் எழுதி
தாழ்வினை நீக்கி இறப்பினை வென்று
தமிழ்உள அளவுமிப் பூவில்
வாழிவினைக் கொண்ட பாரதி திருப்பேர்
வாழ்த்துதும் வாழ்வுநாம் உறவே.

சுவைபுதி தாளுஞ் சொல்நனி புதிதாய்
சோர்விலாக் கவித்தொழில் மேவி
நவபொருள் கண்டு நாட்டினுக் குழைத்து
நயமுறு தமிழினுக் குற்ற
வசையற வற்றா வளம்புதி தான
வான்கவி தந்தபா ரதிதன்
இசைதனைப் போற்றி ஏத்துவம் நாமிங்(கு)
ஏற்றமுற் றிருந்திடு தற்கே.

சுதந்திரம் அடிமைத் தொண்டிலா உலகம்
சோற்றினை யாவரும் பெறவும்
விதந்திடு கல்வி கேள்விவித் தைகளால்
விண்ணர்கள் ஆகவுஞ் சாந்தப்
பதந்தரு நெறியில் உலகினுக் கெல்லாம்
பாரதம் வாழ்வினை அளித்துச்
சுகந்தர உழைத்த பாரதி நினைவாய்
சுதந்திர பாரதம் எழுக.

## ௬௬. நாட்டுக்கொரு நாவலர்

நாவலர் இன்தமிழ் நலனுகர் தென்றல்
காவலர் சிவநெறிக் கருணையின் கொண்டல் - அவர்
வாதினில் ஏதிலர் கோளரி வஞ்சச்
சூதினர் முன்னர் சுடர்ப்பெருஞ் செந்தீ.

காதலி தமிழுடன் மோகம் விளைத்தார்
கோதையட் குவசன நடையைக் கொடுத்தார் - சைவம்
பேசிட வோர்பல மேடை யமைத்தார்
ஆசிடும் அஞ்ஞான மாயை யழித்தார்.

இன்பத் தமிழ்ஏடு தேடி எடுத்துமெய்(ப்)
பஞ்சால் துடைத்துப் படித்து அறிந்து - அவை
எங்கும் உலாவர எந்திரம் சேர்த்திசை
விஞ்சை தழுவிட விளங்கினன் நாவலன்.

நாட்டுக் கொருநல்லை நாவலன் இல்லையேல்
பாட்டுக்கும் சிவநெறிப் பண்பிற்கும் பிறப்பிலா - இன்ப
வீட்டுக்கும் ஒளிக்கல்வி விளக்கிற்கும் தமிழிக்கலைக்
காட்டுக்கும் ஏங்கிக் கலங்குமிவ் வுலகமே.

## 67. வன்னியசிங்கம்

நடையினில் மான உடையினில் பேச்சில்
நாயினுங் கடையராய் மெலிந்து
மிடையராய் அயலார் பழித்திட மானம்
அற்றுடல் வளர்த்தல் இலட்சியமாய்

படையெனில் ஒடுங்கிப் பசாசெனப் பயந்து
பசப்பலே வழித்துணையாக
மடையராய் இழிந்த தமிழர்தம் உணர்ச்சி
மந்திரம் வன்னிய சிங்கம்.

வஞ்சகம் புரிந்த தமிழரை மடக்கி
வாழ்வினில் தாம்வளங் காண
நெஞ்சிடங் கொண்ட கயவரை ஒதுக்கி
நீதியை முன்னிலை நிறுத்தி
"அஞ்சுதல் ஒழிமின் தோழரே இனிநாம்
ஆளுவோம் எம்திரு நாட்டைத்
துஞ்சினும் பெறுவோம் சுதந்திரம்"என்றே
சொன்னவன் வன்னியசிங்கம்.

கோட்டினைச் செல்லும் றோட்டினை மக்கள்
கூடிடும் இடங்களை மற்றும்
வீட்டினை எல்லாம் தமிழர்தம் வாழ்வு
விளக்கிடும் மேடைக ளாக்கிப்
பாட்டிலும் காசியப் பேச்சிலும் வீரப்
பணியிலும் சொல்லிலும் தமிழர்
ஆட்சிபெற றுய்யப் பாசறை அமைத்த
அமரன்எம் வன்னியசிங்கம்.

அச்சமிங் கொழித்து ஆண்மையை வளர்க்கும்
ஆற்றலிற் சிறந்தது அவர்சொல்
இச்சகம் முழுதும் தமிழர்வெம் குறைகள்
எடுத்துரை மொழிந்தது அவர்வாய்
கொச்சைகள் பேசி 'இங்கெமக் கின்னும்'
கொஞ்சமுந் தமிழ்வரா' தென்னும்
பச்சைநற் றமிழர் வாயெலாம் தமிழைப்
பாலென வார்த்தது அவர்சொல்.

வடக்கென ஈழக் கிழக்கென வேறு
வன்னியென் றின்னவேற் றுமைகள்
தமக்கித மாக ஆக்கியோர் செயலைத்
தாக்கி அந்நோக்கினை நீற்றி
இடக்கெனக் கிடந்த சாதிவேற் றுமைகள்
யாவுமிங் கிற்றொழிந் தழியத்
தொடக்கிய முதல்வன் வன்னிய சிங்கம்
தூயவன் நாமமே வாழ்க!

## 68. காலா! உனக்கு ஐயோ!

அண்ணா, அறிவின் சொத்து, பொழிவில்
அடுக்கு மொழிக்கோர் வைப்பு
வண்ணான் மடமை அழுக்கை உலகில்
மாற்றக் கண்டோம்; எங்கள்

அண்ணா! நாமும் தமிழும் உன்னால்
அடைந்தோம் உயர்வென் றிருந்தோம்
என்னே கொடுமை என்னே கொடுமை
எம்மை விட்டுச் சென்றாய்

சென்றாய் அண்ணா செயலொன் றின்றித்
திகைத்தோம் நேரிய கொள்கைக்
குன்றே அனையாய் சொல்லும் செயலும்
கூரிய ராயிப் புவிக்கு
ஒன்றே குலமும் தெய்வமும் என்று
ஓதி உணர்த்தி நின்றாய்
கண்டே மகிழ்ந்தோம் ஐயோ! ஐயோ!
கௌவ்விச் சென்றான் காலன்

காலா உனக்கு ஐயோ! தமிழின்
காவலன் இன்னுயிர் உண்டாய்
நாலாதிசையும் நல்லோர் அழிப்பில்
நாட்டங் கொண்டாய் போலும்

ஏலாதினியுன் கொடுமை தாங்க
எங்கோன் இளம்பிறை யாளன்
தாளால் மீண்டும் வேண்டும்ஆசை
தானேல் தவஞ்செய்! போவேன்.

## 69. ஈழம் எமது நாடு

வாழ வகைசெய்ய வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
ஆளும் உரிமையும் வேண்டும் - தமிழும்
ஆட்சி மொழியாக வேண்டும்.

ஈழம் எமதுயர் நாடு - எந்தை
இருந்து மகிழ்ந்து மடிந்தமண் மேடு
சூழுந் துயர்முடித் திங்கே - சுத்த
சுதந்திர ராக மகிழ்ந்திருப்போமே.

பிறந்தபொன் நாடிது கண்டீர் - காதல்
பேசி மகிழ்ந்து அணைந்ததும் இங்கே
இறந்தெம் உடல்எரு வாக்கி - இந்த
ஏர்பெற்ற நாட்டிற்கெம் ரத்தநீர் வார்த்தோம்.

அந்நியர் என்றிட லாமோ - எமக்கு
ஆளும் உரிமை மறுத்திடில் போமோ
பண்ணிண சூழ்ச்சிகள் எல்லாம் - தூள்
பண்ணிடக் கூடுமோர் நாள்வரு மன்றோ.

ஓலமிட் டாவதொன் றில்லை - நித்தம்
உதைபட்டு வாழ்வதுந் தொல்லை
காலம் வருமந்த வேளை - எதிர்
காத்திருந்தே தொடு போரை.

## 70. புகழ் பாடல் எந்நாள்

பாலாவி பாய்கின்ற நாடு - வீரர்
பலர்கல்லில் நிலைபெற்ற தேசம்
நூலோடு பயில்கின்ற மாதர் - நுண்
இடையோடு எழில்பெற்று லாவ
மேல்நாடு முழுதுமென் நாட்டின் - உயர்
விஞ்ஞானமே கண்டு வியக்க
சேலோடு பூவாடு குளங்கள் - மிக்கு
செழிப்போடு வளர்கின்ற தென்றும்,

"இல்லாமை என்பது மின்றி - மக்கள்
எல்லாரும் சரிசமம் என்றும்
எல்லாரும் எல்லாமும் பெற்று - மிக்க
ஏற்றம் அடைந்தார்கள்" என்றும்
நல்லார் உரை திருக்குறளும் - மிக்க
நவீனவிஞ் ஞாத்தின் முடிவும்
வல்லார் பயில் கல்விச்சாலை - நனி
வளர்கின்ற திங்கென்று கேட்டும்

பலர்கூடி வருகின்றார் கல்வி - இங்கு
பயில்தற்கு முறவாடு தற்கும்
நிலவூடு மிதக்கின்ற நாடும் - எம்
நிலைகாணத் தூதொன்ற னுப்பி
கலைஞானப் பரிவர்த்த னைக்கு - எம்மைக்
கைகூப்பிக் கேட்டதென் றோர்சொல்
செவிகேட்க உளம்பூத்து விம்மி - மிக்க
திறலோடெம் புகழ்பாட லெந்நாள்?

## 71. ஆரியம்

கல்லெடுத்துக் கோயில்கட்டிக் காலமெல்லாங் கடவுள்புகழ்
சொல்லவைத்து வையமெலாம் சோறளித்த செந்தமிழர்
இல்லையென்று வந்தோர்கு இல்லையென் னாதுவக்கும்
வள்ளல்களை யீன்று வளங்கொண்ட தமிழ்நாடு.

மார்புக் கவசமொடு மணிநெடுங்கை வேலேந்தி
போர்செய் விறல்மறவர் பொலிந்துயர்ந்த திருநாடு
ஆர்வலர்தம் மிடிதீர்க்கும் அருளாளர் தம்முயர்ந்த
சீர்பெருக வையமெலாஞ் சிறப்புடைய நாம்தமிழர்.

அல்லல் அடைந்தோம் அரசுரிமை தாம்இழந்தோம்
பன்னூறு ஆண்டு பாழடைந்து சீரழிந்தோம்
வெல்லமென நாங்கள் விரும்பிய கொள்கைசில
கொல்லவரும் நாகமெனக் குறிபார்த் தெழுந்ததனால்.

சாதிமத பேதச் சண்டைகளும் சஞ்சலமும்
வேதியன் என்றோர் வஞ்சன் விதைத்தான்எம் மத்தியிலே
வில்லெடுத்துக் காணாத வெற்றியையவ் வேதியனோர்
புல்லெடுத்து எம்மினத்தைப் பூழ்திப் படுத்திவிட்டான்.

அண்ணனுக்கும் தம்பிக்கும் அடிதடியை மூட்டிவிட்டான்
மண்ணாளும் வேந்தனையும் மக்களையும் பிரித்துவைத்தான்
இந்நாள் வரையமந்த இரக்கமற்ற வேதியனால்
எம்நாடும் நாமும் இயல்பழிந்து வாடுகின்றோம்.

இரும்பெடுத்த வேள்மறவர் என்னே புதுமையிது
துரும்பெடுத்த ஆரியர்க்குத் தொண்டடிமை யானார்கள்
கருங்கல்லிற் சிலைவடித்த கன்னித் தமிழ்ச்சிற்பி
சுருங்குமுகக் கண்களில்நீர் சுரக்க இரந்துநின்றான்.

காடழித்து நாடாக்கிக் கழனிகண்டு நெல்விளைத்து
மாடுபெற்ற வேள்மக்கள் மறையவனுக் கெளியவனாய்
பாடுபட்டும் பயனறியாப் பரதேசி யாயிழிந்து
ஓடுகொண்டு பிச்சையென ஊர்சுற்றி உலையவைத்தான்

எங்கள் தமிழும் இனியகவின் கலையும்
மங்கிடவே பார்ப்பானோர் மாயவலை விரித்தான்
திங்கள் முடியழகர் சிவனாரின் பெயர்சொல்லிப்
பங்கம் புரிந்துபல பலிகொண்டான் படுபாவி.

'கூத்தாடி' என்றிழிவாய்க் கூறினான் நடிப்பவனை
"ஏத்தாதே இசையிலின்பம் ஏத்தினால் நரகடைவாய்"
வேர்த்தார்கள் வேதியனின் வேண்டாத உரைகேட்டுத்
தூர்த்தார்கள் கலையார்வம் தொடர்ந்தார்கள் ஆரியன்பின்.

உக்கிமடிந் தோம்நாம் உடல்வளர்த்த பார்ப்பானின்
துப்பற் பணிக்கத்தைத் தூக்கிச் சுமந்துநின்றோம்
ஐந்தெழுத்தா லோர்பாடை ஆமோவென் றெந்தமிழை
நிந்தித்தான் வடமொழிக்கு நிகர்வேறு இல்லையென்றான்.

"தீட்டுமொழி தமிழ்" என்றான் தீண்டுதற்கு யாம்மறுத்து
வீட்டுப்படி வரைக்கும் வேண்டினோம் வடமொழியை
பாட்டினிலும் ஏட்டினிலும் பரவினோம் அதன்புகழை
நாட்டி னோம்'தேவ நாகரிக பாடை" யென

சொந்தக் கலையிழந்து சுகந்தருசெந் தமிழ்மறந்து
பந்த மறுத்துப் பரமபதம் அடைவதொன்றே
சிந்தையினிற் கொண்டு சிவனாரின் கோயில்புக
வந்தானே யங்கும் வாயிலுக்கப் பாலென்றான்.

வேதத்தில் ஏதோ விளக்கங்கள் சொல்லியெமைப்
பேதித் திடஇன்னும் பேயாய் உழைக்கின்றான்
மோதி மிதித்தவனின் முகத்தில் உமிழ்ந்து தமிழ்ச்
சாதிக்குள் ளேபிறிதோர் சாதியில்லை என்று செய்வோம்.

'தீண்டாதார்' என்றின்பத் திராவிடரை யேயந்த
வேண்டாதான் சொல்ல விட்டுவைத்துக் கேட்பதுவோ
ஆண்டாண்டு தோறுமிந்த வர்ச்சகனால் பட்டதுயர்
மீண்டொருகால் வாராமல் கோவிலெலாம் நாம்திறப்போம்.

## 72. ஐயோ தமிழ்ச் சாதியே!

ஐயோ தமிழ்ச் சாதியே!
உனக்கே னிந்த அவலம்?
உய்வே இல்லையோ இந்த
உலகினில் உனக்கிடம் உண்டோ?

நண்பனை அறிந்திட அறியாய் - உன்னை
நம்பின பேர்களுக் கின்னல்செய் திடுவாய்
பண்பினைத் துறந்தனை மாற்றார்
பாதங்கள் தாங்கியுன் உயிர்தனைக் காத்தாய்

சாதியில் நீஇழிந் தோனாய் - ஆளுஞ்
சதுரர்க ளடிதொழு தேதினம் வாழ்வாய்
தீதிலா உன்னயல் வீட்டான் தொட்டால்
தீட்டென்று வாதுகள் புரிவாய்.

கோயிலைப் பூட்டிவைக் கின்றாய் - உன்
கூடப் பிறந்தோரை யேயடிக்கின்றாய்
நாயினைப் போலுனை எண்ணி - மாற்றார்
நகைப்பதை அறிதியோ நானெதைச் சொல்வேன்?

வீட்டுக்குள் பேசுவை வீரம் - அண்டை
வீட்டார்க்குள் நீபெருஞ் சாதி
வாட்டிடும் அந்நியர் தமையே - தினம்
வழுத்திநீ வணங்குதல் வழக்கம்.

ஆங்கிலன் ஒருவன் வந்துற்றால் - உன்றன்
ஆலயந் திறந்துள் அழைப்பாய்
ஓங்குபேர் அரசின் அமைச்சன் - எவன்
ஒருவனோ அவனுக்குன் கோவில் திறப்பாய்.

தீங்கறியாத நம்தோழர் - நெஞ்சத்
திடங்கொண்ட மறவர் பறையர்
ஈங்கிவர் கோவிலுள் வந்தால் - எமக்கு
ஈனமென்றே பெருங் கதவடைக் கின்றாய்.

கோவில்கள் உன்னது சொத்தோ? - இந்தக்
கோபுரம் எழுப்பிட யார்உழைத் தார்கள்
பாவிகள் உங்கட்கு இங்கு - என்ன
பவிசுண்டு திறப்பினை எடடா!

ஆண்டவன் யாவர்க்கும் பொதுமை - நீ
அடைத்திடத் தானுண்டோ திறமை?
வேண்டுத லினுஞ்சில முறையே - இனி
விழைத்திடும் உன்னுடன் மறப்போர்.

## 73. இளைஞர் பாட்டு

காற்றிற் கடிய மனம்படைத்தோம் - பொய்மை
கண்டு கொதிக்கும் உளம்படைத்தோம்
கூற்றை எதிர்த்தறை கூவிடுவோம் - கொண்ட
கொள்கை வளர்த்திடப் போரிடுவோம்.

வாழ்வதற் கென்றிங்கே நாம்பிறந்தோம் - மாய
வாழ்க்கை யிதென்று வருந்திநில்லோம்
சூழ்துயர் ஒன்றினை நாமறியோம் - பிறர்
சொல்லுந் துயர்களை எள்ளிடுவோம்.

கற்பனைத் தேரினி லுலாவருவோம் - எதிர்
காலக் கனவுகள் கண்டிடுவோம்
அற்புதப் பண்ணிசை பாடிடுவோம் - கூடி
ஆடித்திரிந்து அகம் மகிழ்வோம்.

காலம் எல்லாம் காதல் பேசிடுவோம் - காதற்
கன்னிமேற் கண்ணின் கணைவிடுவோம்
கோலம் நவ நவமாய் வருவோம் - எங்கள்
கூட்டங் களிற்கொள்கை வாதிடுவோம்.

உலகம் எமக்கொரு நந்தவனம் - கைகள்
உண்டே ரண்டு எங்கள் மூலதனம்
பழகும் உயிரெல்லாம் அன்புமயம் - காதற்
பாவையிட மன்றோ எம்மிதயம்.

## 7ட. அந்தநாள்

தென்னங் குரும்பைத் தேர்கட்டிச் சாமிக்குப்
புன்னம் பூச்சூடி பொற்சரிகைக் கோலமிட்டு
அண்ணன் குழலூத அக்காள் தவிலடிக்க
சந்நத்த மாடிச் சதிர்செய்நாள் பாடேனோ?

முற்றத்து முல்லை முகையொலித்து மாலைகட்டிப்
பக்கத்து வீட்டுப் பரிமளத்தின் தோள்சேர்த்துக்
கொக்கட்டிச் சோலை கோயில்பனங் காடுனைத்
திக்கெட்டு முலாவருநாள் திரும்பிவரப் பாடேனோ?

வேப்ப மரத்தடியில் வீடுகட்டி என்மனையாள்
ஆப்பந் தருவாளென் றங்கிருக்க என்னையவள்
மாப்பொன்னாற் றாலிகட்ட மாட்டாதா னென்றேசி
ஆப்பையடி பட்டநாள் அதனைவரப் பாடேனோ?

அள்ளிக் கொளுத்தி அடங்காத வெய்யிலிலே
துள்ளிக் குதித்தென் தோழருடன் பள்ளிக்குச்
செல்ல வழியனுப்பித் திரும்பிவர அணைத்தமுது
அள்ளித் தருமன்னை அன்புவரப் பாடேனோ?

செம்மணற்றிக் காட்டில் செவ்விளநீர் பறித்தருந்திப்
பொம்மண் கிணற்றிலதைப் போட்டுவிட்டு அவன்வளவில்
வெள்ளரியின் பிஞ்சையெலாம் வேண்டுமட்டும் நாம்பிடுங்கிப்
பள்ளிவரப் பட்டஅடி பாடின் அந்நாள் மீளாதோ?

புற்றுவெட்டி எலிபிடிக்கப் போனதுவும் நாதாளிப்
பற்றைக்குள் ளேயிருந்து பாம்பொன்று சீறிஎழும்
சத்தத்தைக் கேட்டயலில் தடுக்கிவிழுந் தெழுந்தோடி
மெத்தக் களைத்த அந்நாள் மீண்டுவரப் பாடேனோ?

பள்ளியிற் சோதனையில் 'பாஸ்' செய்தே னென்றாசான்
சொல்லியது மென்னைவந்து தோழரெல்லாம் சூழவங்கோர்
கள்ளிவிழி யெறிந்து கருணைதவழ் ஒளிமுகத்தில்
மின்னலிட நின்றதனை மீண்டும்வரப் பாடேனோ?

## 75. சதிர்

குயிலைப் போலக் குரல்படைத்த
கோம ளாங்கி யாமவள்
மயிலைப் போல வந்து கோயில்
மண்டபத்தில் ஆடினாள்.

நெட்டைக் கழுத்தை முன்னும் பின்னும்
நீட்டி நீட்டிக் கண்களை
வெட்டி வெட்டிக் கைகளைமேல்
வீசி வீசி யாடினாள்.

குந்தி யெழுந்து குதித்து மிதித்துக்
குலுக்கி நடனம் ஆடினாள்
முந்தி நின்ற மனிதர் கண்ணில்
மண்ணைக் காலாற் றூவினாள்.

குறத்தி வேடம் போட்டு வந்து
குறிகள் சொல்லத் தேடினாள்
முறத்தினாலே புலியடித்தேன்
முன்னர் என்று பாடினாள்.

வண்ண வண்ணச் சேலைகட்டி
வந்து நடன மாடினாள்
பண்ணிற் சில பாட்டுக் கேற்ற
பதம்பிடித்து ஆடினாள்.

பம்பரம் போற்சுற்று வாள்தன்
பளபளக்கும் ஆடையில்
ஒன்றி ரண்டைச் சுண்டு நேரத்
துரிந் துரிந்து வீசுவாள்.

'மாலை சூட வந்தேன் இந்த
மாத விப்பெண் என்றனள்
பாளை சிந்தும் முறுவல் காட்டிப்
பரவசத்துள் ஆழ்த்தினாள்.

பக்கப் பாட்டு வேணு கோபால்
பாட்டுப் பாட மத்தளம்
கொட்டும் வேகத் தோடு அவளும்
குதித்துக் குதித்து ஆடினாள்.

காவிற் கெச்சை கலக லென்னக்
கையிற் றாளம் போட்டவள்
வேலன் கோயில் வீதி முற்றும்
விடிய விடிய ஆடினாள்.

காத்திருந்து களைத்துப் போன
கந்தன் கோவில் மூப்பனார்
பார்த்து அசையா மணியடிக்கப்
பாவை யோடிப் போயினாள்.

## 76. என் ஊர்

காரம் மணம்குணத்தால் கண்டோர்கள் கல்மனதை
சோரங்கொண் டன்னார் சொன்னவிலை கொண்டுமகிழ்
சாரம் மிகுத்ததரச் சரவணைப் புகையிலையென்(று)
ஈழம் முழுதும்பேர் இலங்குகின்ற என்னூரே!

ஏர்பெற்ற செல்வர் எழில்பெற்ற கம்மாளர்
சீர்பெற்ற கைவினைஞர் சீலைநெச வாளரெனப்
பேர்பெற்ற தொழில்களெலாம் பேணிவளர் சரவணையூர்
பார்உற்ற அன்றே பண்புற்ற பழம்ஊரே!

காகம் கரைந்தெழுப்பக் கண்விழித்துக் காப்பியின் மேல்
மோகம் கிறுக்க அவள் முன்னோடிக் குவளைதனை
வேகத் தொடுவிழுங்கி விட்டுத்தம் தொழில்மேவிப்
போகத் துடிப்போர்வாழ் பொற்பதியென் சரவணையே!

கார்கண்டு விண்டுமனக் களிப்போடு வயல்களுக்கு
ஏர்கொண்டு செல்இளைஞர் இட்டஅடி பின்தொடர்ந்து
வார்கொண்டு விம்முமுலை வண்ணஇடைப் பெண்மயிலார்
மோர்கொண்டு செல்காட்சி முந்துமெங்கள் சரவணையூர்

ஊரெல்லாங் கூவல் ஒன்றிரண் டேநன்னீரவ்
நீரள்ளுங் குடங்க ளிடை நீந்தஅசைந் தொசியக்
காரன்ன கூந்தல்தனைக் கைப்பிறையால் கோதிமயல்
ஓரக் கடைவிழியால் உலகளப்பார் வாழ் ஊரே.

ஆடுதுலா மரம்மீது ஆணழகன் ஏறிநின்று
ஓடிமிதித் துதைத்த உடல்வாதை தான்மறக்கப்
பாடிக் களித்துவிசில் பண்ணிக்கும் மாளமிட்டும்
வேடிக்கை யோடுபயன் விளைக்குமெங்கள் சரவணையூர்!

கல்விபயில் சாலைசில கடவுள்களின் கோயில்சில
எல்லைவரு நல்லூாகள் இயன்றபெரு வெளிவடக்கில்
நல்லவிளை யுள்உடனே நண்ணினர்க்கு வாழ்வளித்து
எல்லையிலாப் பெரும்புகழோ டிருப்பதுவும் எம்மூரே!

தாழை மணம்பரப்பத் தண்கடற்புள் தாலாட்ட
பாளை சிதறிப் பதனீர் குளிப்பாட்ட
ஆளை யடிமைகொளும் அரசபணி நாடாத
சீலத் திறல்மிகுந்த செந்தமிழர் வாழ்ஊரே!

## 77. கதை சொன்ன கவிதை

கன்னற் கவிதைக் கருவினைக்
காணக் கடலின் கரையொரு
புன்னை மரத்து நிழலிலே
பொழுது முற்றும் வாடினேன்.

வங்கம் நூறு வந்தது
வானும் மூடம் போட்டது
கங்குல் வந்த போதிலும்
கவிதை வரவில்லையே.

அந்தி மாலைச் செக்கரில்
அல்லிக் குளம்ஏகினேன்
"செந்தமிழுக் கென்பணி
செய்வ" தென்ற சிந்தையில்.

மந்தமாரு தந்தவழ்ந்து
மலரழைந்து வீசிட
அந்தரத் தேயம்புலி
அசைந் தசைந்து ஓடிட.

கந்தருவ கான மெங்கோ
காற்றில் வந்து மோதிடச்
சுந்தரக் கவிதை சொல்லத்
துடித்தேன் வரவில்லையே!

விண்ணும் மண்ணும் காரிருள்
வீங்கு கின்ற வேளையில்
என்னை நோக்கி நின்றிடும்
இல்லம் நோக்கிச் சென்றநான்.

கன்னற் கவிதை கண்டனே
கையுங் காலுங் கொண்டது
மின்னற் பூவெனும் முகம்
மிருதுவான பொன்னுடல்.

கையசைத்து என்னுடன்
கதையளந்த கவிதையே!
உய்க நீடு நீள்புவி
உள்ளமட்டும் வாழ்கநீ!

## 78. தாபம்

அழகிற்குத் 'தமிழ்' என்று
பெயர் வந்த தா? - இல்லை
அறிவுக்கு 'தமிழ் என்று
பெயர் வந்த தா?
இவளுக்குத் தமிழ் என்று
பெயர் சொன்னதேன் - இவள்
இசை விற்கு 'அசை' யென்று
எனைச் செய்த தேன்?

இருளுக்கு 'உற' வென்று
குழல் சொன்ன தேன்? - இவள்
இதழுக்குத் தாமரை
மலர் செய்த தென்?
'பொருதற்கு' என ரண்டு
மலை நின்றதா? - இவள்
புருவத்தில் இணை என்று
சிலை நின்ற தா?

மருட்டற்கு என இந்த
விழி நின்ற தா - என்
மனதிற்குள் நோய் தந்து
அகல் கின்ற தேன்?
தெரு வுற்று நடமாடுஞ்
சிலை யுள்ளதா? - அதன்
சிரிப்புக்குள் மருக்கொன்றை
கமழ் கின்றதோ?

அழகென்ப திவள் தன்னால்
நிறை வுற்ற தா? - இவள்
நிலலென்றால் அழகிங்கு
நிலையுற்ற தேன்?
'மழை' என்றும் இவளுக்குப்
பெயர் உள்ளதோ? - இவள்
மருங்குற்றாள் மனதிற்குள்
குளிர் கின்ற தேன்?

பயில் கின்ற கவி இன்பம்
இவள் உண்டதா? - இவள்
பயில்கின்ற மொழிநெஞ்சில்
குளிர்செய்ததே
அயிலுண்ட விழி ஒன்றே
'எனை வெல்லுமே - இவள்
அடிகொஞ்ச அயல் வந்து
துயர் செய்வதேன்?

நலிவுற்ற தென துள்ளம்
தளிர் கொள்ளுமோ? - இவள்
நகை மின்னும் முகம் என்றன்
அகல் தங்குமோ?
கலை பெற்ற வடிவின் பொன்
மலை உச்சியில் - கண்கள்
கருத்துற்றுப் பனிப் போர்க்கு
அறை கூவுதே?

## 79. ஏதோ உன் உள்ளம்

தென்றலிலே முல்லைமலர்ச் செழுந்தாது நாறத்
தேன்மொழியுன் மெல்லிதயச் செழுமைமனத் தூறும்
குன்றினிலே பிறந்தோடும் குளிர்புனலின் ஓதை
குறும்பொலியாய் என்னிதயத் தின்பவெறி யூட்டும்
மன்றினிடை ஒயிலாக மயிலாடும் போது
மானே என்நெஞ்சத்தில் நீயாடக் கண்டேன்
மன்றலிலே மாலையிட்டு என்னையுன தாக்க
மாதரசே தாமதமேன் ஏதோ உன்உள்ளம்?

அந்நாளில் எந்நாளும் அருகாக நின்று
'அத்தான்' எனக்கூவி ஆட்டங்கள் காட்டி
பின்னால் நின்றென்கண்கள் பொத்தியென் கன்னம்
பின்னாக முன்வந்தென் நெஞ்சில் புதைப்பாய்

'கல்யாணம்' எமக்கென்று பாட்டி சிரிப்பாள்
கண்ணேயவ் வெண்ணம்என் உள்ளந் தகிக்க
எந்நாளும் ஏங்குகிறேன் உன்னை அணைக்க
ஏனோடி தாமதம் ஏதோஉன் உள்ளம்?

படராலம் விழுததைத் தொடுத்துமே முடித்த
பந்தரில் நீதந்த விளையாட்டுச் சோற்றை
உதவாது என்றுநான் உதைத்தெழ நீயும்
"ஊதாரி" என்றெனை ஏசித் தொலைத்தும்
இதமாக என்னயல் வந்துநின் றிளித்தும்
இந்தாங்க கோபமா என்றல்லோ இரந்தாய்
மதமாநான் இன்றுன்னை எண்ணி இளைத்தேன்
மாதரசே தாமதமேன் ஏதோஉன் உள்ளம்

தொட்டில் அசைத்திடத் தூளிகை கேட்டாய்
தோரண மாய்ஆலின் விழுதை அமைத்தேன்
பட்டுத் துணியினால் சுற்றிய கற்சேய்
பள்ளி கொள்ளஎனப் பாட்டு மிசைத்தேன்
வட்டில் எனஆலின் இலையை எடுத்து
வார்த்தபொய்க் கூழினை உண்டு களித்தேன்
மெட்டி யொலிக்க அணைகுவை யின்றோ
மெல்லெனப் போயங்கு ஒழிக்குதல் நன்றோ?

## ௭௦. கட்டி யொரு முத்தமளியே!

சித்தி ரத்தில் அற்பு தத்தை
வைத் தமைத்த பொற் சுருவம்
பெற் றெடுத்தாள் அத்தை அவளே - "காமாட்சி"
முத் தெடுக்க நின்ற கடலே.

முல்லை சூடி மெல்ல வரும்
வள்ளை யிடைக் கிள்ளை மொழிக்
கள்ளி யேநீஎன் னுளத்தையே - காமாட்சி
கொள்ளை யிலே அள்ளிக் கொண்ட தேன்?

கஞ்ச முகம் பிஞ்சு உளம்,
விஞ்சு முகிற் குஞ்சி எழில்,
பஞ்சின் அடி கெஞ்ச நடந்தாய் - காமாட்சி!
நெஞ்சின் அலை கொஞ்ச வளர்ந்தாய்.

நெட்டைப் பனைக் காடு வேலி
ஒற்றை யடிப் பாதை தோட்டம்
அத்தனையும் காத்து நின்றேனே - காமாட்சி
சித்தரையும் கேட்டு வந்தேனே.

"குத்தி நிமிர் கொம் பழுத்தி
முட்ட வரும் காளை தன்னைக்
கட்டு வேன்நான்" என்றுரைத் தனர் - காமாட்சி
கிட்ட அந்த நாளும் என்றனர்.

பொன்னுருக்கிக் கண்ணிய மாய்
மன்ன வையிற் றாலி கட்டப்
புண்ணிய நாள் கேட்டு வந்தேனே - காமாட்சி
என்னை யுனக் காக்கி நின்றேனே.

பட்ட ணத்துக் குட்டி யைப்போல்
பகட்டுக் காட்டிக் குலுக்கி விழி
வெட்டி வரும் கட்ட ழகியே - காமாட்சி
கட்டி யொரு முத்தமளியே.

"தேனருவி" அட்டைப்பட கவிதை 1955

## 81. முடிவு என்ன?

பள்ளியிலே எதிர்ப்பட்டாய் கண்கள் நான்கும்
பழகியஅச் சிறு பொழுதில் முகத்திற் செம்மை
அள்ளியிட நாணுற்றாய் அகத்திற் பொங்கும்
ஆராத காதலினை அன்றே கண்டு
விள்ளிடற்கு இயலாவோர் உணர்வி லுன்றன்
விந்தையெழில் கண்டுவகை கொண்ட நெஞ்சை
கொள்ளையிட்ட வன்செயலை மறக்க வெண்ணி
மறப்பறியாத் தோற்றதனில் துணிவு பெற்றேன்.

நான்நோக்கா முன்என்னை நோக்கி நாணி
நகும் உனது எழில்புகல என்னா லாமோ
வான்நோக்கி மதிகொண்டு வந்து உற்ற
மறுநீக்கி இதுஅதெனில் வாடக் கண்டேன்
கான்நோக்கி மான்கொண்டு வந்து நின்றன்
கண்ணுக்கு உறவென்று சொல்ல மாட்டேன்
மான்நோக்கில் மருட்சியுண் டுன்நோக்கி லென்றன்
மயலுக்கு மருந்துண்டு என்று கண்டேன்.

பூங்காட்டு மென்தென்றல் வீசி நெஞ்சைப்
புண்ணாகச் செய்யுதடி அணைப்பை எண்ணி
பாங்கான தேன்சிட்டுச் சோடி காற்றில்
பறந்தேறிக் காதல்செயக் கண்டு நெஞ்சம்
ஏங்காத நாளில்லை இதயம் கௌவி
எப்போதோ! சென்றாயே! மறப்ப தற்கா?
தாங்கேனித் துயர்இனியும் உடலில் ஆவி
தரியாது உடன்வந்து தாங்க வேண்டும்.

கட்டிலிலே என்அருகில் இருந்தாய் செய்ய
கைசேர்த்து இழுத்தணைக்க எண்ணி னேனா?
தெற்றெனவெங் கேயோநீ சென்றாய் பின்னர்
திரும்பிடவந் 'தொருமுத்தம் தரவா' என்றாய்
வட்டிமிகக் கேட்பாயோ? என்றேன் நீயோ
வாயிதழால் இச்'சிட்டு நொள்ளை காட்டிச்
செட்டாகச் சென்றுமின் விளக்கைப் போட்டுச்
சென்றிட்டாய் கனவென்று தெரிந்து நொந்தேன்.

நீளாதோ இக்கனவு நீவந் தென்றன்
நெஞ்சோடு கதைசொல்லிக் கொஞ்ச அந்த
மீளாத இன்பத்தில் திளைத்துத் தேனார்
மெல்லியஇன் குமுத இதழ் சுவைத்து வாழ்த்திப்
பாடேனோ தமிழ்க்கவிதை என்னைப் போன்றார்
பார்மீதில் கொடுத்துவைத் தார்ரென்றுாரார்
நாவாட வாழேனோ என நினைந்து
நாளோட்டி நலிகின்றேன் முடிபு என்ன?

## ៩௨. பொன் விலங்கு

நிலவைப் பிடித்து எழிற்
றுகிலை உடுத்த வொரு
சிலையை நிகர்த்த வடிவாள் - அவள்
கயலைப் பிடித்துக் கயம்
பயில விடுத்த இரு
மயலை வளர்க்கும் விழியாள்.

வில்லை வளைத்து அவள்
கண்ணை தொடுத்து எனைக்
கொல்ல விடுத்த தெவனோ? - அவன்
பொன்னைப் படைத்த கையால்
மின்னைக் குழைத்து இந்தப்
பெண்ணைப் படைத்தான் சதியோ

வெண்ணெய் எடுத்துப் பூவின்
செம்மைப் குழம்பிற் றோய்த்துப்
பெண்ணின் இதழ் அமைத்ததேன் - அதை
உண்ண உண்ணத் துடிக்கும்
என்னை பிடித்து நாணாப்
பொன்னின் விலங்கு அளித்ததேன்?

## ௪௨. அத்தானைக் காத்திருப்பேன்

"கொக்குக் குருவி யினம்
கூட்டை யடையக் கடல்
முட்டுந் திரை யணைத்து
வெண்ணிலவு முந்தி யெழ
முற்றத்து முல்லை
முகிழ்த்து மணம் பரப்ப
பத்து மணி யடிக்கப்
பறந் தோடி வருவேன்" என்றார்.

கொக்கும் உறங்கிறது
குளிர் மதியும் எழுந்திடிச்சு
மொக்குள் அவிழ்ந்த முல்லை
முக்கைத் துளைச் சிடிச்சு
பத்து மணி யடிச்சு
பல நாழி சென்றிடிச்சு
அத்தை பெத்த ஆண் மகனார்
அங்கும் இன்னும் செய்வ தென்ன?

ஆட்காட்டிக் குருவி யூரை
அலட்டி எழுப்புகுது
மேற்கால் இருந்து நாய்கள்
மேல்மேலுங் குரைக்கிறது
ஊர்காவற் சேவகரும்
உறங்கும் இது நேரம்
பார்த்த கண் பூத் திடிச்சு
பட்ச மகன் இன்னு மெங்கே?

வெட்டிப் பிள வெடுத்து
வெத்தி லையும் காம்பு நுள்ளிக்
கட்டித் தூள் மணஞ் சேர்த்துக்
கை நிறையக் கொண்டு வந்தேன்

செட்டி மகன் இவ்வளவும்
செய்வ தென்ன கொடுகொடுக்கக்
கொட்டும் பனிக் கூதல்
கொஞ்சமும் தெரி யல்லையா?

பெற்றாள் விழித் தாளோ
பேய் பிசாசுக் கஞ்சி னானோ?
அத்தான் எனக்காண
அல்லல் என்ன அடைந்தானோ
பத்தென்ற மணி விடிஞ்சு
பகலாகிப் போனாலும்
செத்தாலும் இவ் விடத்தென்
அத்தானைக் காத் திருப்பேன்.

## கடி. நெடு வழி

செங்கனி போற்றிரள் கன்னத்தையும் - ஒளி
சிந்தும் முறுவலின் வண்ணத்தையும்
பொங்கு மிளமையின் பூரிப்பையும் - தாலி
பூட்டிய போதொளிர் நாணத்தையும்
கொங்கை மலைபொங்கும் வண்ணத்தையும் - உன்னைக்
கூடி மகிழ்ந்தநாள் எண்ணத்தையும்
இங்கிருந் தேகணம் நினைத்துவிட்டால் - மனம்
ஏறு ரயில்எனத் துள்ளுதடி!

முல்லைக் கொடிமலர் சிந்துதடி - அங்கு
முத்து நிலவென்னை முந்துதடி
கொல்லைப் புறத்துக் கிணற்றடியில் - குயில்
கூவினதும் உனைத் தேடியதும்
சொல்லிச் சிரித்திடக் கண்திறந்தேன் - வெகு
தூரத்தில் நீயிருந் தாயடியோ!!
எல்லையில் லாத்தாபம் மேவுதடி - இதோ
இன்றே றெயிலினில் ஏறிடுவேன்.

மாம்பிஞ்சு வெந்து மணம்பரப்ப - பனம்
மாவைக் கரைத்து உலையில் விட்டு
காம்பு ஒடித்த இலையினைக் கோலி - என்
மையினிற் றந்துநீ வார்த்த நற்கூழ்
போம்புகை மூக்கில் உலாவுதடி - இதோ
புகைவண்டி மீதில் ஏறிவிட்டேன்
தீம்பாலமுதேஇத் தேசமெலாஞ் சுற்றி
திரியுமிவ் வண்டியென் செய்யுமடி?

எண்ணங்கள் கோடி சுமந்து கொண்டு - காதல்
இதயத்தின் பெருமூச்சை கக்கிக் கொண்டு
தென்றலைக் கனலாக்கிச் சீறிக் கொண்டு - விண்ணின்
சீத மதியைத் தீ யாக்கிக் கொண்டு

தோளொடு தோள்கள் மருவிச் சமமெனத்
தோளர்க ளாகித் தூங்கிவிழ
நாளோ டிரவெல்லாம் ஓடுதடி - ரெயில்
நாளை வரும் அதில் நான்வருவேன்.

தட்டுங் கரங்களைப் பிடித்திழுத்து - நெஞ்சில்
தாங்கி அணைத்துநின் தங்கமுகம்
வெட்கிச் சிவப்புற முத்தமிட்டே - பதில்
வேண்டி யிரந்து விளக்கணைத்து
தொட்ட இடமெல்லாம் சுகந்தருமே அந்த
சொர்க்கத்தைக் காணத் துடித்துநின்றேன்
பட்ட பொழுதிர விவ்வளவும் - ரெயில்
பாழடித் தொடுது நெடுவழியே.

## 85. வாழ்வரசி வந்தாள்

தொங்கிடும் மின்னலில் என்னுயிர் பின்னினை
சூட மலர் கொணர்ந்தேன் - உடன்
கங்குலிற் சென்றனை கைவிள்க கின்றி நான்
காணாத் தவித்து நின்றேன்.

ஓடையில் உன்முகச் சாடை தெரிந்திட
ஓடி யருகில் வந்தேன் - நீ
வாடை தெளித்து மணமுறத் தாமரை
வான்மல ருட்புகுந் தாய்.

சிந்தூரப் பொட்டிட்டு நின்நுதற் செவ்வியைச்
சேவித்து வாழ்த்த நின்றேன் - நீ
அந்தரத் தேயோடிச் செம்பவ ளப்பிறை
அம்புலி ஆகி விட்டாய்.

மாமரச் சோலையில் ஆவலுடன் எனை
"வா" வெனக் கூவி நின்றாய் - "காதற்
பாமலர் சூடி மகிழ்ந் திடலா" மெனப்
பறந்த தேன் பூங்குயிலாய்?

கடலிற் குளித் துடல் காட்டிநின் றாயெழிற்
காவிய ஆடை யுடன் - நான்
நடையி லயல்வர மெல்ல அடி வானில்
நழுவி ஒழித்து விட்டாய்.

கிட்ட நெருங் கிடில் எட்ட நடக்குமுன்
கிறுக்கினை நானறி வேன் - இனி
வட்ட மிட வரேன் ஒட்டி உறவாட
வந்தாளென் வாழ் வரசி.

ஒருமனிதனின் கதை

## 86. மச்சான்

காணாத போது கண்துஞ்சாள் கண்டவுடன்
மானாக வோடி மறைவாள் தனியித்தே,
ஏனோதான்வந்தே'னென்றெண்ணுதற்கு முன்செவியில்
தேனாகவோர்சொல்உருத் தெரியாமல்வார்த்திடுவாள்.

கூடல் இழைப்பாள்நான் கூடும்நாள் பார்த்திடுவாள்
தேடும் பொழுதெல்லாம் தெருவேலிக்கண்ணொளிர்வாள்
வாடும் முகங்காணில் வந்துசுகம் கேட்குமத்தைக்(கு)
ஓதுஞ் சுகசேமம் ஒட்டிநின்று தானறிவாள்.

பூப்போல் பொலிவாள்இன் புன்னகையுட் கொப்புளிக்க
பார்ப்பாளோஎனைஇல்லைப் பாராள்போற்பார்த்திடுவாள்
வேர்ப்பால் தனித்திருந்தால் விதிர்விதிர்ப்பாள் அத்தைதனைக்
கூப்பிட வாய்உன்னிக் கூவாமற் கொந்தளிப்பாள்.

எண்ணந் துடிக்கும் இதயங்கள் கௌவிவிழும்
கன்னஞ் சிவக்கும் கண்கள் கவிழ்ந்தொளிரும்
சின்ன இடைதுவளுஞ் சிற்றடிகள் நீலங்கீறும்
"இன்னுஞ் சுணங்குவதேன்" என்றுமனஞ் சீறிடினும்.

தொட்டிடற்கு நாணித் தூரநின்றேன் அவ்விடத்தை
விட்டிடற்கு இன்றி விம்மியெழும் நெஞ்சகத்துள்
தட்டு மிதயத்தைத் தாங்கித் துடித்தபடி
இட்டம் அறியமனம் ஏங்கியது அந்நேரம்.

கொட்டியன குவளைநீர் குனிந்தபடி கண்டருகே
சிட்டாகச் சென்றேன் சேர்த்தணைத்து அழுவதுமேன்
கட்டுக் கரும்பேஎன் கற்பகமே கவியுலக
வட்டக் கலைமதியே வான்சுடரின் முழுஒளியே?

என்ன நினைத்தோ எதற்கோ ஆழுதாய்நீ
விண்ணில் நிலவெடுத்து விளையாட விரும்பினாயோ
பொன்னை மணியைப் பொலணியைக் கேட்டனையோ
அன்னை தடிந்தாளோ ஐயற்கு அஞ்சினாயோ?

என்றணைத்தேன் கைகள் இறுக்கஅவள் முகம் நிமிர்த்திக்
கன்றிச் சிவந்த கனியிதழை மெலத்திறந்து
"மன்றல் புரியமாட்டாயேல் இப்பொழுதே
கொன்றுவிடு" என்றாள் குயிலாள் திகைத்துவிட்டேன்.

கரும்பைச் சுவைப்பதற்கு கைக்கூலி கேட்பதுண்டோ?
விரும்பிநின்றேன் மயிலேயுன் விருப்பம் அறிய நின்றேன்
தரும்போதை வெறியடி நீ தந்தளிக்கும் கள்ளடிநான்
இரும்பேநான் காந்தம்நீ! ஈருடற்கு மோருயிரே!

கண்டால் உயிர்தளிக்கும் கனிமொழியால்மெய்சிலிர்க்கும்
கொண்டால் விடுவேனோ கோகிலமே சத்தியமாய்
சென்டே மணப்பேன்என் செந்திருவை எனத்தேற்றி
வண்டாடு கூந்தல் வார்குழலைத் தொட்டிழுத்து.

பக்கத் திருந்தவொரு பாயெடுத்துப் போட்டிருத்தி
செக்கச் சிவந்த அவள் செவ்விதழில் முத்தமிட்டேன்
வெட்கத்துடனெழுந்து " வேண்டாமிப்போதுஇது
பக்கத்துளார் எவரும் பார்த்து விடுவார்கள்" என்றாள்.

கானத் தெழில் மலரைக் கையிற் பறித்ததன்பின்
மோனச் சுவைமணத்தை முகராமல் எறிவதுண்டோ?
வானத் தமுதேவா வந்துவிடு நான்தரியேன்
ஈனமுமுண் டோநாங்கள் இருவருமொன் றாகியபின்

என்றெழுந்தே சென்றேன் இன்பச்சுனை விழுந்தேன்
குன்றெழுந்த வாறு குமுறி எழுந்தவண்ணம்
கண்டுவக்க நெஞ்சம் கைகள்பூம் பந்தாடக்
கெண்டைவிழி நீலம் கிளர்ந்துசிவப் பேறியதே

ஆருயிரே நாங்கள் அரியஉயிர் ஒன்றானோம்
ஏது வரினும் இடர்கள்பல சூழ்ந்திடினும்
மாது எனக்கே மாலையிட வேற்றவொரு
தேதி குறித்துத் தெரிவிப்பீர் என்றுரைத்தாள்.

'ஆம்' என்று சொல்லி அகன்றேனவ் விடத்தைவிட்டு
'போய்வாரும்' என்று போகவிட்டுப் பார்த்துநின்றாள்
தேனுண்ட வண்டு திரும்பவுமச் செம்மலரில்
மாலுண்ட துண்டோ மணிதனுமவ்வாறாமோ?

'இன்று மட்டும் இன்று மட்டும்' என்று சொல்லித் திங்கள் பல
சென்றுசென்று மாறஅவள் சிறிதுருவில் மாறுபட்டாள்
மன்றலின்றி மணிவயிற்றில் மைந்தனுமே வந்துவிட்டான்
கண்டுவிட்டாள் அத்தைதன்கை கண்ணீரால் கழுவி நின்றாள்.

ஓடிவந்து எந்தை முன்னே ஒடுங்கி நின்று அச்சமுடன்
மோடியவள் வயிற்றிற்சேய் மூன்று திங்களாச்சுதண்ணா!
கேடினுக்கிங் கேதுசொல்வேன் கிருட்டினனின் லீலையினால்
பாடெனக்கு வந்ததெனப் பதைபதைத்தாள் கையுதறி.

கிருட்டினனென் றாளுடனே கிளர்ந்தெழுந்து நின்றஎந்தை
வெருட்டினார் " அடியேநீ வேசியடி என்சிறிசை
மருட்டிப் பிடித்துவிட்டு மாய்மாலஞ் செய்யுமுன்றன்
உருட்டுப் புரட்டுகளை உலகம் அறியாதோ?

நஞ்சைபுஞ்சை ஒன்றுமின்றி நகைநட்டுத் தானுமின்றி
பிஞ்சுக் குழந்தையைநீ பிடித்துவிட நினைத்துவிட்டாய்
வஞ்சகியுன் னோடுறவு வைப்பதற்கு நாங்களில்லை
கெஞ்சுதலில் லாபமில்லைக் கிட்டவும்நிற் காதே" யென்றார்.

"போடிபோ என்னுடைய பொடியன்இனி அங்குவரான்
தெடிப்பார்த் தார்க்கும் தெரியாமற் கட்டிவிடு
ஓடிவிடு" என்றெழுந்தார் உதைப்பாரோ என்றிருந்தேன்
வாடிநடந் தாளெனையே வளர்ந்தஅத்தை வாட்டமுடன்.

கேட்டேன் அழுதேன் கிளர்ந்தெழுந்த உணர்ச்சியுடன்
ஓட்டம் நடையாக ஓடினேன் அவளிடம்போய்
"மாட்டேன் இனிப்போக மாட்டேன்என் தந்தைஎன்ன
கேட்டாலும் போகேன் கேடுனக்கென் னால்வரவோ?

## தில்லைச்சிவன்

அத்தை "என்றேன் என்னாவி ஆரத் தழுவிநின்றாள்
'மெத்'தெனவந் தென்கரத்தை மெல்லஇழுத் தாள்மனையாள்
இத்தனை நாளாயவட்கு இல்லையென்று நானிருந்த
இந்துணிவு தானிப்போ எங்கிருந்து வந்ததுவோ?

தாயாய் உழைப்பாள் தந்தையென மந்திரிப்பாள்
சேயாய் குழைவாள் சித்திரம்போல் வந்தணைவாள்
நாய்போல் என்நிழலை நத்திப்பின் னால்வருவாள்
ஆயாளாய் ஆரமுதம் அள்ளியள்ளி ஊட்டிடுவாள்.

நல்லநல்ல தின்பண்டம் நான்உணற்கு என்றுஎண்ணி
பிள்ளைகளுக்கே யொழித்துப் பிரியமுடன் வைத்திருப்பாள்
அல்லல் எனக்குற்றிடிலோ அதைத்தனதாய் ஆக்கியவை
ஒல்லையினில் நீக்க உழைத்துள் மகிழ்திடுவாள்

அடிப்பேன் அழுவாள்கை அடித்ததனால் வலித்ததென்றால்
துடித்தோடி வந்திடுவாள் சொஸ்தமுற அடித்தகையைப்
பிடித்துநெஞ்சிற் புதைத்தழித்துப் பெருந்தனத்தால் ஒற்றிட்டு
வெடித்தஇளம் முறுவலிலென் வேதனைகள் சிதறடிப்பாள்.

கடிப்பேனச் செங்கரும்பைக் கைமலரால் கன்னமெலாம்
நொடிப்பாள் அமுதுசிந்தி நோய்தீர்க்கும் மருந்தாவாள்
படித்தகல்வி ஒன்றுமில்லை பாசத்தாள் என்னுள்ளத்தில்
பிடித்தஒரு சிறுஇடத்தைப் பெரிதாக்கி அடிமை கொண்டாள்.

உடம்பை அலட்டாமல் ஊர்வம்பு பேசாமல்
மடங்கள் மதகுகளில் மாற்றாரோ டாடாமல்
விடங்கள் பழகிருட்டில் வீட்டைவிட்டுப் போகாமல்
அடங்கண் முறைகளுடன் அடங்கியிருக்க வைத்தாள்.

கட்டுண்டு கிடக்கக் கடுகளவு மிஷ்டமில்லை
விட்டிடுவேன் அந்த விடயம் புரியவில்லை
பட்டுடலால் மோதிப் பதைபதைக்கச் செய்திடுவாள்
சுட்டுவிழி யாலென் சுதந்திரத்தை அழித்தாளே.

அன்பு மொழியாலும் அணைப்பாலும் மென்னுடலின்
துன்பங் கண்டுள்ளந் துடிக்கும் அருளாலும்
என்புருக்கக் கண்கள் இரண்டுகுக்கும் நீராலும்
பண்போ டெனையடிமைப் படிததிவிட்டாள் எஜமானி.

அந்நாளிற் காதலித்தோம் அவளோ முறைமச்சாள்
சின்நாளில் நாங்கள் திருமணமுஞ் செய்துவிட்டோம்
பின்நாளில் எனக்கோர் பெருந்துணையாய் சேர்ந்திருந்தாள்
இந்நாளோ என்றன் எஜமாட்டி ஆகிவிட்டாள்.

## 87. புலவர்மணி சரவணையூர் தில்லைநாதப் புலவர் அவர்களைப் பாராட்டி வாழ்த்தியவை

தில்லைநா தப்புலவ! திருந்துநற் புலவ ரேறே!
ஒல்லைவா வருகவென்று உவந்துமை வரவேற்கின்றோம்
நல்லைநா வலரின் பண்பும் நவாலியூர்ப் புலவர் வீறும்
தெள்ளிய அறிவுங் கொண்ட திருவினாய் வருக வாழி!

பாண்டியன் சேரன் சோழன் பாரியின் றில்லை யெம்மை
ஆண்டிட இருப்பா ராகில் ஆனைமேல் உம்மை ஏற்றி,
வேண்டியதெல்லாந்தந்து விருந்தளித்துவக்குங் காட்சி
ஈண்டியாங் காண்ப தன்றோ இன்தமிழ்ப் புலவ வாழி!

மற்றவர் மகிழப் பாடி மகிழ்வுகண் டுளங்க ளித்துக்
கற்றவர் வியக்கப் பேசிக் கவிதைகள் நயந்து காட்டி
திக்கெலாம் புகழச்செவ்வேள் திருவடிவழுத்தி வாழ்ந்த
அற்புதக் கவிஞ! நூற்றாண் டிவன்புகழ் ளோடுவாழி.

குறையெனிற் கடிந்துநொந்து குணமெனிற் புகழ்ந்துபோற்றும்
நிறைகுணம் எவர்குமஞ்சி நின்றிடாதெதிர்க்கும் ஆண்மை
மறைபொருள் அறிந்து துய்ப்போர் மகிழ்ந்திடஇனிய சொல்லால்
முறையறிந்து உரைக்கும் ஆற்றல்முனிவனே புலவவாழி!

பொன்னாடைபோர்த்தும் நிற்குப் பொற்கிழி அளித்தும்கீர்த்தி
விண்ணிடைநிலவுமேகத் திரையினை விஞ்சல் ஒக்கும்
நன்னயஉணர்ச்சி தூண்ட நாமிதைத் துணிந்தோம் அற்ப
புன்மையைப் பொறுத்து ஏற்றுப் புலவநீ வாழி ஊழி!

தில்லைச் சிவனுக் கோர்பா திகழ்திரு நல்லைக்கோர்பா
பள்ளம் புலத்து வேற்கோர் பாட்டெனப் பலநூ றாக்கி
உள்ளம் உருகப் பாடி உலப்பிலா ஆனந் தத்தேன்
அள்ளிப் பருகும் தில்லை நாதனே வாழி ஊழி!

(பொற்கிளி அளிப்பின் போது பாடியது.)

## 88. வேந்தனார்

செந்தமிழின் தேன்பொதிவாய் திணவெடுத்த
திண்தோள்கள் அகன்ற மார்பு
சந்ததமும் தமிழ்வாழத் தலைப்பெய்து
பணிபுரியும் பெரிய உள்ளம்
முந்துமவைத் தமிழ்பேச்சில் முன்னெவரும்
இல்லாத முதல்வோய் வேந்த!
வெந்தழலும் தமிழ்ச்சுவையை விரும்பியுணக்
கொடுத்திங்கு வேகின் றாயோ?

"ஐந்தடுக்கு மாளிகையில் அமளி மீது
அரிவையர்கள் அடிவருட ஆடிப் பாடி
இந்திரப்போ கஞ்சிலபேர் துய்க்க, நாட்டில்
ஏழைகளாய் எச்சிலுகாய் ஏங்கும் பல்லோர்
இந்தவுல கிருக்கும்வரை இறைவ னுக்கிங்
கிடமில்லை" என்றுஅறை கூவிநின்ற
சுந்தரநற் கவியரசே! வேந்த! நின்நா
சுடருண்ண அமரருல குய்க்கின் றாயோ?

சொந்தவொரு முயற்சியினால் தமிழைக் கற்றுத்
துலங்குமருட் பெருக்குணத்தால் உலகிற்கெல்லாம்
தந்தகவி "அம்மா" இந் நாட்டின் செல்வத்
தமிழ்ச்சிறுவர் மழலையெலாந் தவழ வைத்தாய்
கொந்தளிக்கும் உணர்ச்சியினாய் புலமை வீறு
கொண்டமகாகவி யின்பத் தமிழ்சொல் மேடை
வந்தபெரு நாவலனே நின்சீர் இந்த
வையமெலாம் பரவிநனி வாழ்க! என்போம்.

வேறு

செந்தமிழின் உயிர்மூச்சு தீம்புலவர்
திறலாய்ந்து பேசுஞ் செந்நா
கந்தனருட் கேங்கிநிதம் கவிபாடும்
அன்புள்ளம், கருணை நெஞ்சு,
சுந்தரநல் லெழிலுருவம், தோன்றியநல்
நாட்டுயர்வில் தோய்ந்த அன்புப்
பந்தமுள நாகேந்திரம் பிள்ளைஎன்ற
பாவலன்க, வேந்தன்பேர் பரவுவோமே!

## 89. பொன். குமாரவேற்பிள்ளை

எண்ணத்தின் பொற்சு ரங்கம்
எய்தினோர் தம்மைத் தன்னுள்
வண்ணத்தால் வயப்படுத்தி
வாழ்வளித் துவகைகொள்ளும்

திண்மைத்தோள் செம்மற் சேய்பொன்
குமாரவேற் பிள்ளைசங்கம்
முன்வைத்த தமிழ்மேற் காதல்
முற்றிய மூதறிஞன்.

தமிழ்மொழி போற்றும் நெஞ்சு
தமிழர்சால் புணர்த்தும் செந்நா
புவிபொருள் கொடுத்தும் நூல்கள்
வாங்கிடும் புலவன் மேதை
கவினுற மண்டை தீவுக்
கந்தகோட் டத்துப் புக்கு
அமிழ்துரை புகல்வான் தம்மை
அண்டினோர் தமக்கெந் நாளும்.

அகப்பொருட் டுறையும் வீரம்
ஆண்மையென் றிவை மலிந்த
புறப்பொருள் பலவுங் கற்றுத்
தமிழர்தம் பொற்கா லத்தை
மறப்புறா வகையில் ஆய்ந்து
மாந்தியும் மற்றோர்குரைத்தும்
சிறப்புடன் வாழ்ந்தோன் எம்பொன்
குமாரவேற் பிள்ளை மன்னே!

ஆண்டொரு முப்பத் தொன்றில்
அமுத சுரபி என்றோர்
மாண்புகழ் இதழ் தொடங்கி
மண்டைதீ வில்இருந்தே
காண்பவர் வியக்க கற்றோர்
காமுற நடத்தி ஈழம்
வேண்டிதழ் முன்னோடியாக
விளங்கினார் பிள்ளையன்றோ!

தமிழ்த்திறம் சொலஆ ளில்லை
தண்டமி ழறிஞர் இந்த
இமிழ்திரை உலகந் தன்னில்
எங்கிருந் தாலும் அன்னோர்

புகழ்விரித் தோதி நின்ற
பொன்குமா ரோடு ஒன்றித்
தகவுற இருந்த மூன்று
தமிழுயிர்ப் பதுவும் போச்சே!

நெடும்பா

## 89. தரும யுத்தம்

நாட்டு வளங்கூறல்

"பூமகள் மார்பிற் கொண்ட புனைமணிப் பதக்கம்" என்றும்
மாமகள் நுதலின் மின்செய்மரகதத் திலகம் என்றும்
நாவலர் பலரும் போற்றும் நாவலந் தீவின் தென்பால்
வாவலைக் கடலின் நாப்பண் வளந்தரும் ஈழ நாடு.

பூமலர் கயங்கள் அன்னப் புள்மலிந் தழகு கூட்ட
தேமது உண்டு வண்டு செவ்வழி மிழற்ற எங்கும்
காமிகுத் தழகு ஜாலக் கவின்பல காட்டக் கண்டோர்
காமமுற் "றாகா ஈதே கற்பக நாடெ"ன் றோய்வார்.

வெண்திரை மோதி வீழும் வீரமா நகரைத் தன்கை
கொண்டுமேல் வருடி இன்பம் கொடுக்குமா வலியாமாறு
தந்தநற் செல்வந் தாங்கி தருக்கிவாழ் ஈழம் பண்டே
வந்தவற் கெல்லாம் ஈய்ந்து வாழ்வளித் துவந்த தென்பர்.

நால்வகை நிலமும் குன்றா நல்வளம் நான்கும் ஈய
நால்மதப் பண்பும் ஒன்றி நனிபயன் விளைக்க மக்கள்
மேலவர் கீழ்என் றின்றி விருந்தளித் துவந்து அட்ட
சீலமும் சிறக்க இன்பாய் சேர்ந்தொளிர் ஈழ நாடு.

மஞ்சுலாம் மலைகள், செந்தேன் மாநதி சுரக்கும் செல்வம்.
விஞ்சுபேர் தொழில்கள் ஆங்கு விளங்கிட உழைக்கும் மக்கள்
கங்குலும் பகலும் தங்கள் கடமையில் வழுவா நிற்கும்
பொங்குபேர் வலியால் வையப் புகழ்கவர் ஈழநாடு.

வனமுள யானை, முத்து வளமுள கடல்கள் 'மங்கை
கனமுலை போலுங் குன்று கணக்கில நீண்ட சாரைக்
கினமென நெளித்து ஓடும் அருவியின் கரைகள், எங்கும்
மணமுறத் தென்றல் ஏவி மதுகரம் அழைக்குஞ் சோலை.

வயலெலாஞ் செந்நெல் செய்யின் வரப்பெலாம் கமுகுந்
தெங்கும்
கயலுலாஞ் சுனைகள் ஆம்பற் கவின்மலர் அழகு காட்டும்
செயலெலாம் அறத்தின் சாயல் தேஜசும் திறமும் விஞ்சும்
புயமெலாம் வீர மங்கை புகலிடமாகக் கொண்டாள்.

மன்னர்கள் தொட்டுக் குன்றா மாதிரு வளர்த்து "ஈழம்
பொன்னகர்" என்று வேற்றார் புகுந்திடப் புதுமை செய்யும்
நல்லிசைக் குளங்கள் சூழ நாடவந்திருப்போர்க் கெல்லாம்
இல்லையென் னாது ஈய்ந்து இன்னல்தீர் த்திசைகொள் ஈழம்.

வானுறு புகழால் வையம் வாழ்த்துமின் தமிழும் கொம்புத்
தேனுறு சுவையின் மிக்க சிங்கள மொழியும் ஈழத்
தாளிரு விழிக னாகத் தமிழர்சிங் களரென் றெல்லேம்
நாளிர வொன்றி இன்ப நனிபயன் துய்க்கும் நாடு.

விண்ணுற ஓங்கி மேகம் வீழ்த்துற வாடப் பொன்னின்
மின்னிறம் பிறக்குந் தூபி மேன் நிலைத் தாகங்கள்
எண்ணில விகாரை கோவில் எழில்மிகு சமாதி பல்க
பொன்னிழற் போதித் தேவன் பூங்கழல் புனையும் நாடு.

சிவன்திருப் பாதந் தாங்கி சேணுயர்ந் தொளிருங் குன்றும்
அவன்திருக் குமரன் ஆடும் ஆருட்கதிர் காமத் தோடு
நலத்திரு கோண ஈசன் நண்ணிடும் பதியும் நன்செய்ப்
புலம்பல பொலிந்த கேதீஸ் வரமுஞ்சேர் புனித ஈழம்.

கைவண்ணத் திறத்தால் வானக் கன்னியர் மலர்கொள் காட்சி
மைவண்ணத் தாக்கிச் சிங்க மலைக்குகை அமைத்து
நாங்கள்
எவ்வண்ணம் வாழ்தோம் என்று எள்ளிடு வோர்கள் நாண
இவ்வண்ணம் என்று காட்டும் எழிலோ வியங்கொள் நாடு.

## நகர்

அறிவினைப் போற்றும் புத்தன் அருளினை வேண்டி ஞான
நெறிபயில் அறவோர் வாழும் நீள்நிலை விகாரை தோறும்
வணபிரித் தோதும் ஓசை வானுறுந், தானங் கொண்டு
அனநடை மாதர் செல்லும் அணிநடை வீதி யெங்கும்.

பூம்புனல் புகுந்து ஆடும் பூவை முன்சுழி புகுந்து
தேம்பிடும் அவளை ஏய்த்துச் சென்றுகால் பறிக்கும் காளை
வீண்புகண் டொல்கி வேய்த்தோள் விளங்குபூந் துகிலை
மென்கை
தாங்கிடும் சரசக் காட்சி சார்ந்தபல் சுனைகள் எங்கும்.

குன்றுகள் நடத்தல் போலுங் கொடிதுயர் வானில் மேகத்
திண்டுகள் நிரையிற் சென்று திணர்த்துதல் போலும் யானைக்
கன்றுகள் கருங்கற் றூணைக் கையினால் தூக்கி நேர்நேர்
சென்றிடுங் காட்சி ஈழத் தெருவெலாங் தேங்கக் காண்போம்.

கண்டியன் கூத்தம் பாட்டும் கனித்தமிழ் இசையுங் கோட்டும்
எண்டிசைப் முழுது மார்க்க யானைபின் நூறு செல்லத்
தொண்டருந் துறவு ளொரும் தொடர்ந்து பின்வரச்சீர் புத்தன்
கொண்ட பல்விழ வயர்ந்து குதூகலம் அடையும் ஈழம்.

## அரசு

ஈழமென் றிலங்கும் இந்த எழில்இடந் தன்னைப் பண்டு
சோழனெல் லாளன் என்றோர் சூரன்நல் லாட்சி செய்தான்
வேளமென் வலியும் வெய்ய வேங்கையின் வீறுங் கொண்டு
நாளும்நல் லறத்தின் ஆட்சி நடத்தினன் உலகம் ஒப்ப.

புத்ததா பகங்கள் செய்தும் புதுக்கிநன் கமைத்தும் நாட்டு
மக்களின் கருத்தை ஆய்ந்து மதித்தவர்க் கினிய செய்து
பக்கம்நல் லறிஞர் சேர்த்து பாலிக்கும் திறத்தில் உள்ள
மக்களின் சபையுங் கூட்டி மன்னர சாட்சி செய்தான்.

வீதிகள் அமைத்தும் புத்த விகாரைகள் எடுத்தும்வாழ
நாதியற் றிருப்போர் கென்று நல்லுண்டிச் சாலை நட்டும்
சாதியிற் பேதம் நீக்கிச் சரிநிகர் சமானமாக
தீதிலதான ஆட்சி செய்தனன் இலங்கை முற்றும்.

கன்றிறந் தழுத ஆதன் கடைமணி வாயில் முட்டி
நின்றதைக் கண்டு ஆங்கண் நிகழ்ந்ததை அறிந்து தன்சேய்
ஒன்றெனத் தெரிந்தும் "தானும் உறுதுயர் அடைவன்" என்றே
கொண்றிட மகனைத் தேர்க்கீழ்க் குறித்தவன் அனைய
கோலான்.

மக்களின் குறைகள் காண மாற்றுரு வெடுத்து நாட்டுப்
பக்கமெல் லாமுஞ் சென்று பலருடன் உறவு பூண்டு
விக்கினம் அறிந்து நீக்கும் வித்தகன் "ஆட்சி" யென்றால்
இத்தகைத் தென்று மற்றோர்க் கெடுத்துக் காட்டாக நின்றான்.

ஆடக அரங்கு தூய அறிவுரை கேட்கும் மேடை
தேடருங் கல்விச் சாலை தேர்வாழ் மனைஅங் காட்டி
நாடக மன்றஞ் சோலை நறும்புன லாடும் பொய்கை
யோடிவை அனைத்தும் மக்கட் குகந்ததென் றோர்ந்து
செய்தான்.

வலியவர் மெலியவர் தம்மை வருத்துதல் இல்லை நாட்டில்
புலிநிகர் வீரர் தாமும் போர்விடுத் துழவு செய்து
நலிவுறும் உலகிற் கெல்லாம் நவமணி அளித்துக் காத்தார்
கலிதவிர்த் திலங்கை இன்பம் கண்டதக் காலந் தன்னில்.

வெள்ளொளி முத்தும் யானைத் தந்தமும் பஞ்சும் பாக்கும்
நெல்மணிப் பொதியும் கொண்டு நிறைந்த பொற்குவை
கொடுத்துச்
செல்மரக் காயர் கூட்டம் சேர்ந்துறை துறைகள் தோறும்
செல்வதும் மீள்வ தாகச் செறிந்தபல் வங்கம் சூழும்.

திறைவரு திருவும் நட்புச் செய்திடத் தருஞ்செம் பொன்னும்
முறைவரு வரியுங் கொண்டு முன்னொரு உவமை யின்றி
மறைதரு நெறியில் நின்று மன்னன் எல்லாளன் மக்கள்
குறைசொலற் கின்றிக் கொற்றக் குடைநிழல் இனிது காத்தான்.

## புரட்சி உரை

இந்நிலை இலங்கை வேந்தன் இருந்திடும் போது, நாட்டின்
பின்னணி ஒருவன் மக்கள் பேதமை கண்டு சொல்வான்
"என்னதான் செய்தும் என்ன? இவன்பிற நாட்டு வந்த
அன்னியன் எம்மை எல்லாம் ஆள்வதோ அடிமை நாமோ?

சிங்கள நாட்டுக் குள்ளோர் சிறுநரிக் கூட்டம் வந்து
மங்கள வாழ்த்தொ டாளும் மன்னராய் ஆவதென்ன!
எங்களை நாங்கள் ஆள்தல் ஏற்றது அன்றி மாற்றான்
'தங்க' மென் றதனால் ஏற்றுத் தலைபணிந் துய்ய லாமோ?

## தில்லைச்சிவன்

ஆண்டிடத் தமிழர் நாமிங் கடிமையோ? பண்டடெம் வீரம்
மாண்டொழிந் ததுவோ? வேங்கை மானினைப் பணிதல்
உண்டோ?
கூண்டினிற் கிளிபோல் எம்மை கொண்டனர் தமிழர் நாங்கள்
வேண்டியதெல்லாம் ஈய்வார் விடுதலை ஈயார் என்றார்.

வீங்குதோள் வீரர் தங்கை வேல்முனை முறிந்தெந் நாளோ
தங்குதோள் உறைவாள் மீசு தடம்புரண் டுடைத்த தெப்போ?
ஈங்கினி அடிமை வாழ்வே ஏற்றதென் றிருந்தீர் நன்றே
மாண்புகழ் போரில் முன்போய் மடிந்தவர்க் கையோ! ஐயோ!!

ஆரியத் தலைவா! விண்ணை ஆழுவாய் நீநாமிங்கே
வீரியம் இளந்தோம் நாய்போல் வீணர்க ளானோம் நின்றன்
பேரினுக் கெம்மால் என்றும் பெருங்கறை இலங்கை மக்கள்
சீரினை அறிதி! மாற்றான் சேவகம் சிரமேற் கோண்டார்.

மன்னனாம் எந்தை இந்த மறத்மிழ் அரசற் கஞ்சி
ஏன்னைவாழ் கென்றான் இ்.து ஏற்குமோ ஆரியற்கு?
பெண்ணையர் அவர்க்கென் கையால் பெண்ணுடை கச்சு
கூந்தல்
இன்னபல் அணிகள் சேர்த்து ஏற்றதென் றனுப்பி வைத்தேன்.

என்னையோர் துட்டன் என்று ஏசுதல் அறிவேன் வையம்
அன்னியன் என்தாய் நாட்டை ஆள்வதைக் கண்டும் வாழ
எண்ணியிங் கடிமை செய்து இருந்திடேன் அடுபோர் கண்டென்
புண்ணுடல் விழினும் பொன்றாப் புகழுடம் போடு வாழ்வேன்.

என்றறை கூவித் தென்பால் எழுந்தனன் கைமுனு வேந்தன்
குன்றனை தோளன் சிங்கக் குலப்புகழ் நிறுவுங் கேளன்
நின்றிடு பகையை ஓட்டி நீள்முடி தரித்து நாட்டை
வென்றிடும் ஆவல் தூண்ட வீரர்கள் பலரைச் சேர்த்தான்.

தாய்த்திரு நாட்டின் பூட்டைத் தகர்த்துடைத் தெறியா தோய்ந்து
பொய்த்துயில் கொள்ளேன் இன்பம் புல்லிடேன் அமுதைச்
செந்தேன்
தோய்தெடுத் தடினும் உண்ணேன் தோழரே! இவைசெய்
வேனால்
நாய்ப்பிறப் பெடுத்துச் சூழும் நரகெல்லாம் அலைவேனாக!

உறுகுனை வேந்தன் பேச்சு உலுக்கிடக் கிளர்ந்த நெஞ்சில்
பெருவலி புரள ஈழப் பெரும்படை திரண்ட தாங்கே
பொருதலுக் கமையுங் காலப் பொழுதினைப் பார்த்துச்
சொல்வோர்
ஒரு சிலர் அல்லப் பல்லோர் "உண்டினி வெற்றி" என்பார்.

நல்லவன் ஆயின் என்ன நம்உயர் இனத்தைத் தன்வாள்
வல்லமை கொண்டு ஆண்டு வந்தவன் தமிழன் என்று
சொல்லும் எம்சரிதம் என்றான் சுழித்த செம்முகங்க ளெல்லாம்
வில்லொளிச் சூலம் ஈட்டி வேலொடு களத்தில் கண்டான்.

## களங்காணல்.

ஓடிவந்தொரு தளபதி கூறினான்
"உறுகுணைப் படை எம்அரண் நொக்கியே
பாடிகொண்டனர்"செய்தியைக்கேட்டதும்
பதைத்தலின்றிஎல் லாளன்பகருவான்
"தேடிவந்தஇச் செம்படை முன்னரே
செய்யவேண்டிய போரினைச்செய்யவே
நாடிவந்தது நல்லது நாமினி
நடத்துவோம் மறப்போர்"எனக்கூறினான்.

அரனைக் காத்திட வேற்படை, புறமதில்
அகழி காத்திட விற்படைசெல்லவும்
புரவி வெம்படை நகர்வலம் காக்கவும்
போதகப் படை பகைவரைத் தாக்கவும்
விரைக என்றபின் "பர்வதம்" என்றதன்
வேளம் ஏறியப் போர்முனை நோக்கினான்
முரசதிர்ந்தது இருதிறப் படைகளும்
முட்டி மோதிட எதிரெதிர் நின்றன.

"கந்துலன் எனும் யானையில் ஏறியே!
காளை காமினி முன்வந்து நின்றனன்
ஐந்து பத்து அகவைக்கு மேலுள
அரசன்எல் லாளன் அவன் எதிர்வந்தனன்
சிந்து பாடியங் கெதிர்வந்து ஆர்த்திடும்
செந்தமிழ்ப் படை கண்டனர் சிங்களவர்
நொந்து சாம்பி வெதும்பும் உளத்தொடு
நொடியிற் களம்விட்டு ஓடிட நின்றனர்.

கண்டு காமினி கலங்கிட எல்லாளன்
கருணை பொங்கும் அருள்விழி நோக்கொடு
பொன்றிப் பல்இளம் வாலிபர் போனபின்
பூமியாள்வதில் புண்ணியம் என்னகாண்
அன்ற சோகன் என்னுமோர் மௌரியன்
அமர் வெறுத்துநற் தர்மத்தைஏற்றதால்
இன்று நீரும்உன் கிளைகளும் புத்தனின
இந்நிழற் பதம் இறைஞ்சுதல் ஓர்மினோ.

புத்தர் நல்லறம் போற்றுமிப் பூமியில்
போரில் பயிலுயிர் போக்குதல் ஏற்றமோ?
ஒத்த பாச உணர்வுள எம்மினம்
ஒருவர் மற்றவர்க் கூறு விளைப்பதோ?
தத்தம் செய்துஇவ் வாட்சியை நின்வசம்
தானமாக்கின் நின்தகுதியும் ஆண்மையும்
மற்றவர்க் கிழிவாய்ப் படும்என்றதால
மன்னசிந்தனை செய்கிறேன் என்னுளே!

ஒன்று சொல்கிறேன் உன்னுடன் நான்தனி
ஒன்றிப் போர்செயின்உயிர்பிறசென்றிடா
இன்று போர்செயின் என்னுயிர்த் தோழர்கள்
எதிர்த்து நின்படை ஒறுத்துயிர் போக்குவர்

சென்று நாளைவா உன்படையோடிங்கு,
சிறிய ஓர்படை கொண்டுனை மோதிநான்
பொன்றின் ஆளுதி!" என்றதும் காமினி
புரிந்திடா தொன்றும் ஏகினான் பாசறை.

### போர்.

முரசதிர்ந்தது நகர்ப் புற வாசலில்
மூன்று நான்குமெய்க் காவலரோ டொரு
இரவிபோல் ஒளி காலத்தன் யானைமேல்
இந்திரன் என எல்லாளன் வந்தனன்
சதுரச் சேனைகள் சூழ்ந்து புடைவரச்
சமர்முனைந் தங்கு வந்தநம் காமினி
எதுவுஞ் செய்திடல் இன்றிஅம் மன்னவன்
எழிலைக் கண்டுபோர் எண்ணம் மறந்தனன்.

காமினி உள்ளம் கண்டஅக் காவலன்
கடுகித் தன்கரி ஒட்டிஅக் கந்துலன்
அருகிற் சென்றுடை வாளை உருவி 'யிங்(கு)
கமர் மலைந்திடவா' வெனக் கூவினான்
பொருதற்கே மனம் பொருந்த மறுத்தமென்
பொருதியே தீர வேண்டுமென் றானதால்
உருவி வாளினைக் கொண்டு மலைத்தனன்
உலகம் ஒப்பில்ஓர் யுத்தத்தைக் கண்டது.

பொருவிற் கந்துலன் பர்வதம் தன்னையோர்
புதரில் வீழ்த்திடக் காமினி வீசுவான்
உதிரம் சோரநல் மன்னன் எல்லாளனின்
உயிர் எடுத்துயர் உம்பரிற் சேர்த்தது

அதிரும் நெஞ்சொடு காமினி யோடிவந்
தரசன் பொன்னுடல் மெய்யொடு தாங்கிக்கண்
பெருக நின்றனன் "மன்னவர் மன்னனே
பெரும நின்புகழ் பெரிதெனக்கூறியே.

## முடி புனைதல்

"என்னரும் உயிர்த் தோழரே இற்றைநாள்,
எந்தன் வாழ்விலோர் துக்கநாள் ஈழமாம்
பொன்னின் மாநகர் தன்னைப் பெறப்பல
போர் புரிந்தும் பெறல்எளி தாகுமா
மன்னன் மற்றுயிர் மாய்ந்திட எண்ணிலன்
மனிதர்க்குள் ஒரு மாதெய்வம் ஆகினான்
தன்னுயிர் தனைப் போக்கிஇந் நாட்டினைத்
தந்தனன் இது தருமம்என் றெண்ணியே.

ஆய சேனைகள் அனைத்தையுங் கொண்டவன்
அமர்புரிந் திடில் ஆடியின் சூறையிற்
போயொ துங்குஞ் சருகென எம்படை
புகுமிடம்அறி யாதுபுலம்புமே
தாயவள் செய்த நற்றவத் தாலுஞ்சீர்
தமிழன் உள்ளொளி யூற்றத்தி னாலுமே
நாயெனக் கிந்த ஆட்சியைச் தந்தனன்
நன்றியைமற வாமுறை செய்குவேன்.

என்று கூறியே காமினி நகரினுள்
எதிர்கொள் வார்களை விலக்கி அமைதியாய்
சென்று அங்குள்ள செந்தமிழ் மக்களைச்
சேர்ந்து துக்கம் தெரிவித்து இன்மொழி
நன்று கூறி அவர்களின் நல்லுரை
நாடிப் பெற்றுநாற் சந்தியில் ஓர்பொது
மன்றில் எல்லாள மன்னனின் பொன்னுடல்
மண்ணுள் வைத்துப்பூ வளையங்கள் சாத்தினான்

நடுகல் வைத்தனன் "அவ்வழிச் செல்லுவோர்
நல்ல எல்லாள மன்னனின் சால்பினைத்
தொழுது சொல்லுக" என்றொரு கட்டளை
தோமரம் அடித் தேபறை செய்தபின்
பழுதில் ஆட்சி புரிந்திட பொன்முடி
பண்பினில் உயர் செந்தமிழிழர்தர
தொழுது வாங்கி அரச பெருங்குரு
சூட்ட ஈழச் சுடர்முடி தாங்கினான்.

(கவியரங்கப்பாடல்)

## 91. என்றுமுள தென்தமிழ்

சேரனின் சிலம்பினாளை திருக்குறட் கவசத் தாளை
சீரணி மார்பிற் சிந்தா மணிதரு ஒளியி னாளைப்
பரமே கலையை கம்பன் பண்ணுமா முடியைச் சூடித்
தாரணி புரக்கும் செய்ய தமிழ்தனை வணங்குகின்றேன்.

கற்றவர் கவிதை ஆய்வோர் காழ்ப்புவப் பில்லோர் நண்பர்
உற்றநற் கலைஞர் மாண்பில் உயர்ந்தவர் முன்இச் சின்னன்
நற்றவத் தமிழின் ஆற்றல் நவிலுமிவ் நாய்ச் செயல்தான்
வெற்றுரைக் குரைப்பென் றாலும் நோக்கதற் காக ஏற்பீர்,

வேறு

செந்தமிழீர் என்னுடைய அன்புத் தோழீர்
தெவிட்டாத தென்றமிழின் ஆற்றல் கூட்ட
வந்தனையும் பெரியோர்க்கென் வணக்கம் கூறி
வானுறுசெந் தமிழினது இசையைப் பாட
எந்தனையும் அழைத்தாரே அவரை வாழ்த்தி
இன்கவிதை செல்லுதற்கு எழுந்தேன் ஐய!
பந்தமுண்டு அதனாலே பாடுகின்றேன்
பயன்எதுவோ அதனை எதிர் பார்த்தேனல்லன்.

விண்ணெட்டும் இமயமிசைக் கொடிகள் நாட்டின்
விற்போறித்த வீரரெலாம் எலிக ளானார்
மண்வெட்டும் கூலிகளாய் உலகம் எங்கும்
மன்றாடி இரந்திதமை ஏற்கும் ஒன்றில்
பண்பட்டுப் பயந்தஞ்சும் வாழ்வு கொண்டோம்
பயனில்லை தமிழ்வாழும் என்று சொல்லல்
புண்பட்டு நெஞ்செல்லாம் பொறாமை தோன்ற
புகழ்கெட்ட தமிழரினால் தமிழா வாழும்.

தீந்தமிழ் என் றானொருவன் தெவிட்டாத
இன்சுவையைத் தருத லாலே
மாந்தர்முதன் மொழிஎன்றார் மற்றயவை
இதந்கிளமை யான தாலே
சார்ந்த மொழி பலகண்டும் சலிக்காது
இளமையொடு புதுமை எய்தி
வாழ்ந்தமொழி தமிழ் என்று வாழ்த்தினான்
ஒருபுலவன் வண்ணத் தாலே.

என்றுமுள தென்தமிழ்என் றியம்பினார்க்
கனுதாபம் இறவாப் பண்பின்
நின்றமொழி என்றிடுவோர் நீட்டிமுடக்
கிடுதலை நிறுத்த வேண்டும்
கொன்றிடுமோர் குறிகொண்டே எம்மைஏய்க்கக்
குளறுகிறார் எனும்நோக்கம் கொள்ளல் வேண்டும்
இன்றெமெது தமிழ் தனக்கு இழிவு தேட
எத்தனையோ பொறிகளெல்லாம் இயற்று கின்றார்.

'பழித்திட்டான் தமிழ்வீரம் பிறன்' என் றிட்டால்
பாய்வேங்கை எனவீறிப் பொருதிப் புன்மை
ஒழித்திட்ட மறவீரம் ஒழிந்த பின்பும்
ஒன்னலரின் கூலிகளாய் நம்மில் பல்லோர்
விளித்தமுளி யோடுகடு விஷத்தைத் தூவி
'விபீஷணம்' செய் கின்றதனைக் கண்டும்ஐய!
ஒழித்துவிட முடியாது தமிழை என்று
உளறுவதில் பயன்என்ன அர்த்தம் என்ன?

'எதிர்ப்பார்கள் பின்இணங்கி வருவார்' என்று
எம்நிலையை அறிந்துவக்கும் ஏதி லாரை
துதிபாடி ஏவல்செய்து பதவிக்காக காகத்
துடிப்பவர்கள் நக்கி உயிர் வாழும் நாட்டில்
விதிப்பயன்என் றிருப்போமால் தமிழா வாழும்?
விறல் ஆண்மை வீரம்மறம் என்று இன்ன
அடுக்குமொழி அகராதி நீங்க மீளா
'அடிமை' என்ற பதம்ஒன்றே அடித்தி ருக்கும்.

அரிவாழ்ந்த குகைதனிலே நரியின் கூட்டம்
அழகார்ந்த பொழில்எல்லாம் புதரின் ஈட்டம்
பரியூர்ந்து அமர்போந்த வீரர் எல்லாம்
படிதாழ்ந்து அடிதாங்கி வாழும் இந்நாள்
முடிதாங்கி அரசோச்சும் மொழிகள் விண்டு
முள்ளோங்கித் தமிழ்கொல்ல முனைதல்கணடோம்
அடிவாங்கி அடிவாங்கி தமிழர் சாக
அழகுதமிழ் வாழும்எனில் என்ன அர்த்தம்?

### வேறு

தாம்வாழும் வீடுகளில் தமிழ்வாழ
இடமளியாத் தமிழர் இன்னும்
ஏன்வாழு கின்றாரோ யாம்அறியோம்
அந்நிலைக்கு இரங்கி நின்று

**தில்லைச்சிவன்**

கூன்பாயும் உளத்தினர்முன் கும்பிட்டுத்
தமிழினிலே எழுதல் பேசல்
தான்நீதி என்றவரை பழிந்துரைக்கும்
கயவர்களால் தமிழா வாழும்?

படையோடு சென்றுதிறை பெற்று மீண்டு
பாராண்ட தமிழர்களின் மரபில் வந்தோர்
கடையோடு சென்றங்கு கலங்கி வாடிக்
கட்டழிதல் கண்டோம்நாம் கசங்கா வெள்ளை
உடையோடு தொழில்என்ற உத்தி யோகம்
உறுவாதை தந்ததையும் உற்று நோக்கி
விடைதேடு இனிவாழ வேண்டும் என்றால்
விறலோடு தமிழ்நாடு வேண்டியாடு.

பாண்டியனார் இங்கில்லை பைந்தமிழ்மேல்
ஆர்வத்தை உற்சா கத்தைத்
தூண்டிவிட இங்கொருவர் துணைணுமில்லை
தொண்டின்றிச் சோம்பலாக
வேண்டுமட்டும் வாயளந்த வீணரன்றி
வீரமிங்கு விழைவா ரில்லை
மாண்டிடினும் போரிற்கு மாளமுளார்
இங்கில்லைத் தமிழா வாழும்?

தன்னாட்சி பெற்றதொரு சிறுநாடும் இன்றி
தமிழ்வாழும் என்றிடுதல் சனக்கர்தம் பேச்சு
விண்ணாடு பெறவரினும் தமிழர்களாம் நாங்கள்
விறலோடு ஒருநாடு எமக்கென்று கொள்வோம்
அந்நாடு பொன்னாடாய் உயர்ந்தோங்க எங்கள்
ஆவியுடல் பொருள் அனைத்தும் அளித்தேத்தி நிற்போம்
என்றுமுள தென்றமிழ்என் றியன்றதொரு வாக்கு
இனிதுநிற்க தமிழுயர நாமுமிங்கு வாழ்வோம்.

ஏழாலைத் தமிழ் விழா.
26.10.1963




## ௧௨. சுயபுராணம்

### போற்றியென் வாழ்முதல் ஆகிய பொருளே

என்னை யாரென்று அறிந்திட வில்லையான்
எவ்வினைக் கிங்கு வந்தனன் என்பதோ
பின்னை எங்குறு வேனெது ஆகுவேன்
பிறப்பு இறப்பெனும் பெருங்கடற் சுழிப்பினுள்
என்ன என்நிலை எனைக் கரை ஏற்றிட
எவருளார்? உளர் ஒருவாரம், அவர்தமக்கு
அன்பன் அல்லன் யான், ஆயினும் அவர்என்னை
ஆக்கினார் காத்தல் அவர்கடன், போற்றுவேன்.

### நூல் அடக்கம்

சின்னவோர் மனிதனின் சின்னச் செயல்களும்
சின்னச் சின்ன ஆசைகள் ஆயவும்
சின்னனான இலக்கிய வடிவ மாய்
செய்து ஓர்பதி வானது 'என்கதை'
பின்னர் என்றனுக் கோர் நினைவாகவும்
பேணலாம்பிர சுரிக்கலாம், எனினுமிச்
சின்ன என்கதை பற்றியூர் சொல்வதை
தெரிந்து கொள்ளும் ஆசையும் சிறிதுள

### ஊர்பாடியது

வயல்எலாஞ் செந்நெல் வளவெலாம் பனைகள்
வளர்புளி இலுப்பை வேம் பினைய
கயலுலாங் குளங்கள் கரையெலாம் புன்செய்
காடெலாம் கள்ளிமுள் ஈச்சை
அயலெலாம் புரக்கும் ஆண்மைசேர் உழவர்
ஆடுமா டுகள்தரும் பொருளின்
பயனெலாம் பசித்துண் பவர்க்களித் துவக்கும்
பண்பினால் உயர்சர வணையூர்.

## தில்லை மேடைக் கோயில் பாடியது

ஆடுமம் பலவன் அடிதொழும் மரபில்
அமைந்தபேர் அடியர்தம் இயல்பில்
கூடுமன் பினராய் சிவம் சக்தியென்று
குறித்தனர் வேம்பொடு அரசை
பீடுறப் பொங்கல் இட்டுநெக் குருகிப்
பித்தராய் பரவினார் பணிந்தார்
தேடுநற் பொருள்கள் தில்லைமே டையான்
தந்ததென்னவே வாழ்ந்தனர் சிறப்பாய்.

## உறவு பாடியது

தீவகத் தலைபோல் திகழ்தலால் மண்டை
தீவெனப் புகழ்பெறுந் தீவான்
பாவகத் தினிய தில்லையம் பலமாம்
படிமையோன்,சரவணைப் பதிசேர்
காவலன் சின்னத் தம்பிவேள் ஒப்பில்
கட்டழ கன்முதன் மகளாம்
பாவணி செய்யள் பாவைபொன் னம்மா
பாரில்என் தந்தைதாய் ஆனார்.

## தோற்றம் பாடியது

ஆண்டிரு பத்து,எட்டுத் தைவரும்
ஐந்து திகதிசேர் அந்நாள்
ஈண்டநல் அறமோ பாவமோ யாதோ?
இருவினைப் பயனைநான் துய்க்க
வேண்டியிப் புவியில் கருவுடற் கழிந்து
வீழ்ந்தவென் அழுங்குரல் கேட்டு
ஆண்டிருந் தவர்கள் ஆணென உலக்கையை
ஆவலால் கூரைமேல் எறிந்தார்.

## வளர்ச்சி பாடியது

உருத்தெரியாத காலமே அருளொடு
உட்புகுந் துயிர் இடங் கொண்டோன்
கருத்ததுவாகப் பிறந்தென் றனுக்கு
காட்டுமுள் இயல்பினால் தாய்ப்பால்
புகுத்திடக் குடிக்கும் வழியைக் காண்பித்தும்
புலர்ஒளி ஆகியுள் பொருள்கள்
பகுத்தறிந் துணைரக் காட்டிமா யையினைப்
பயிற்றினான் பரமனாம் முதல்வன்.

## முடிவிலா நடை

ஆண்டு ஒன்றாகத் தவழ்ந்ததும், சிறிய
அடியெடுத் தெழுவதும் விழுவதுமாக
ஈன்றதாய் செய்த உதவுகை யாலும்
இறைவனின் திருவரு ளாலும்
வேண்டுமென் பாட்டன் சிறியதாய் மாமன்
விருப்பினால் கைபிடித் துதவத்
தூண்டுதல் அதுவாய் அடியினைப் பெயர்த்துத்
தொடங்கிய நடைமுடி வறியேன்.

## பாட்டனாரின் அன்பு

கண்டவென் பாட்டனார் கனிவுடன் தூக்கி
கன்னத்தில் முத்திட்டுக் களிப்படைந்த தன்பாய்
கொண்டுவந்த பழமுண்ணத் தந்தெனைக்
குதூகலத் தோடு வாழ்த்தி மகிழ்ந்தார்.
தந்தை நல்லெழிற் சீருடை அணிகள்
தந்து அணைக்கவும்,தாய்உளம் விண்டு
சுந்தரக்கரும் பொட்டுக் காப் பிட்டு
சுகம்பெறு கெனவாழ்த்தி உச்சி மோந்தாளே!

## 'நாகேசுவரி வித்தியா சாலையில் நான

ஆடல்பாடல் நடித்தல் இவற்றொடு
ஆயநுண்கலை அத்தனைக் கும்உயர்
மேடையாகி மேன்மைச் சிவநெறி
விளக்கிச் செந்தமிழ் வீறுற நம்மவர்
தேடுங் கல்விச் சாலைநா கேஸ்வரி
சேரவென்னைத் தோளிற் சுமந்துசென் (று)
ஓடுமாச்சி அம்மான்ஏ ரம்புவென்
உள்ளத் துள்நின்று உருக்குதல் ஓர்வனே.

## தந்தையார் விண்ணடைதல்

ஆண்டுஆறு அகனவயில் பள்ளிக்கு
அனுப்பி ஏடு துவக்கவும் அங்குளந்
தூண்டு மன்பின ரானவா சிரியர்கள்
துணையாகக் கல்வியைக் கற்று நயந்துபின்
மீண்டு வீடுவந் தாடுதல் ஓடுதல்
வீழ்தல் எழும்புதல் இளைத்தல் இரங்குதல்
ஈண்டு இவ்வாறு இருக்கின்ற ஓர்நாளில்
எந்தை விண்ணடைந் தாரிந் நிலைமையில்;

## தம்பியும் நானும்

தம்பி யோடு நாமிங் கிருவரே
தாயெமைத்தன துயிராகக் காத்தனள்
எம்பிரான் சிவன் எம்முயிர்க் குள்நின்று
இட்டுந் தொட்டும் அழைந்தருள் செய்வதால்

நம்பித்தில்லை மேடையை அடைந்து நாம்
நாளும் பொழுதும் நனிதொழு துய்ந்தனம்
செம்பொன் மேனியப் பித்தன் எமக்கருள்
செய்த வாறெண்ணச் சித்தங் குளிருதே!

## எனது நல்ல ஆசான்

மாணிக்க வாசகர் என்றோர்நல் ஆசான்
மட்டுவில்சேர் நுணாவிற் பதியில் வாழ்வோன்
நானிப் படியாக என்மேல் அன்பு
நனியுள்ளார் தானுற்ற அருளால் என்னை
தேனித்த மொழி கொண்டு உசாவித் தேர்ந்து
தெரிந்தெடுத்து இராப்பகலாய் கல்வி தந்து
ஞனத்தின் விளக்குப் போல் துணையாய் நின்றார்
யானவரை எழுமையிலும் மறத்தல் ஆமோ!

## எனது ஆசிரியர்கள்

தண்டமிழும் சிவநெறியும் தழைக்கவே
லணைச்சைவ இளைஞர் சங்கம்
கண்டமரு தையனார் அதிபர்,அவர்
கடமைச் சோம சுந்தரரும், சிலம்புதூக்கிக்
கொண்டுவந்து வழக்குரைக்கும் கண்ணகியாள்
கூத்தளித்த கந்தையா வோடிலக்கணப்
பண்டிதர்பொன் னையாவும்,சுவையும் மற்றும்
பலருமெனைப் படிப்பிக்க படித்து வந்தேன்.

## வேந்தனாரின் அன்பு

படிக்கின்ற காலத்தில் எனது ஊரில்
பலராலும் பாரட்டப் பெறுவோ ராகத்
துடிப்புடைய கவிஞனாய் வேந்தன் நின்றார்
துணையானார் எனக்குஅவர், என்தாய்வேந்தற்(கு)

அடிக்கடிநல் உபசாரம் சொல்லிப் பொற்றி
அன்போடு "இவனைச்சற் றேபடிப்பி
துடுக்கடக்கு" எனச் சொல்லக் கேட்டு என்னைத்
தொட்டணைத்துப் பாட்டுக்கள் சொல்லித் தந்தார்.

## பேய்ப்புலவன் பட்டம் பெற்றது

கார்இருட்டில் பயந்துரத்த
கடவுள் உள்ளார் காப்பார் எனப்
பார் அதிரக் குரல் எடுத்துப்
பாட்டோடு வீடு வந்தேன்

தூர் எடுத்தென் மனப் பேயைத்
துடைத் தழிக்கும் முயற்சி கண்டு
பேர் அளித்தார் என்பாட்டா
பேய்ப்புலவன் எனச் சிரித்தே.

## மாடு மேய்த்தல்

பள்ளி செல்வதும் வீட்டுக்கு வந்ததும்
பட்டி சேர்த்தஎம் மாடுகள் மேய்த்திட
துள்ளிஓடிக் காட்டிடை செல்வதும்
தூண்டில் போட்டுக் கடலில்மீன் பிடிப்பதும்
கண்ணிவைத்துப் பறவைகள் படுப்பதும்
கடலில் நீர்நிலைக் குளங்களில் நீந்தலும்
பின்னர் மாடுகள் தேடிப் பிடிப்பதும
பிறவுமாகவென் காலங்கள் கழிந்தன.

## அடிபட்ட காதை

புற்று வெட்டி எலிகள் பிடித்திடப்
போனநண்பர்க ளோடுடன் போனதும்
பற்றைக் குள்ளிருந் தேசீறி வந்தவோர்
பாம்பைக் கண்டு பயந்தோடிச் சென்றதும்
சுப்பர் தோப்பிள நீர்குடித் தயல்உள
சோமன் தோட்டத் துரவினுள் போட்டவன்
மப்பில் தூங்க வெள்ளரிப் பிஞ்சினை
மடி நிறைத்தடி பட்டதும் மறப்பனோ!

## கதைகளும் கனவுகளும்

பட்டிவிக்கிர மாதித்தன் கதைமுதல்
பாரதக்கதை மாலைகள் படித்துஞர்
குட்டி ராசனாய் கனவுகள் வளர்த்தொரு
கோட்டை கொத்தள ஆட்சி நடத்தினேன்
பட்ட மகிஷியோ டுடியும் வாடுமுள்
பரத்தைப் பக்கமாய் நாடிநின்றாடலால்
கெட்டுநொந்தர சிழந்ததும் நினைவென
கிடந்த பாட்டில் புரண்டு படுத்துளேன்.

## விநோதரசமஞ்சா

வினைப் பயனாய் சிறுவயதில் எனது கைக்கு
விநோதரச மஞ்சரியென் றொருநூல் மட்டும்
துணைக்குவர முழுவதுமே பாடஞ் செய்து
தூயவொரு வேதம்போல் மீண்டும் மீண்டும்
நினைப்பதுவும் ஓதுவதும் ஆக நூற்கண்
நின்றதனிப் பாடல்கதை கட்டுரைகள்
அனைத்தையும்போல் யானும்பல் ஆக்கஞ் செய்ய
அறிந்துவிட்டேன் அதனால்நான் "விநோதன்" தானே!

## பள்ளித் தோளர்கள்

உடுப்பிழந்தவன் கையென எனக்கென்றும்
உதவும் நண்பன் "தமிழன்" தியாகனும்
அடுத்துநல்எழுத் தாளர் "சுபமணி"
ஆய நண்பனும்,மாலிங்கப் பிள்ளையும்
தொடுக்கும் சண்டைகட் கெனக்குத் துணைவராய்
தோன்றும் அப்புத் துரையோடு மாணிக்கம்
எடுக்கும் மாக்கதைப் பொருளாய என்றனுக்கு
இட்டர் என்னுடன் சாலைமா ணவர்களே.

## நாடகத்தில் நான்

கணபதிப் பிள்ளையும் கந்தசாமிக்
கலைஞனும் நாகேசுவரிக் கலையரங்கில்
குணமுறு நெறியாள் கையாற் 'சுந்தரர்
கோக்கதை நாடகத் தென்னை ஆங்கோர்
கப்பியின் மேல்இடபா ருடராக வேற்றி
காட்சி கொடுத்திடக் கீழிறக்க,
இப்படி இவ்வண்ணம் இறைவன் தொண்டர்
எண்ணவரு வாரென வந்து போனேன்.

## சட்டை ஆசை

என்னோடு ஒத்துவிளை யாடும் அண்ணன்
உறவுமுறை யானபடி கலிங்கம் என்பார்
சின்னாள்முன் கொழும்பில்ஒரு கடையில் நின்று
திரும்பிவந்து எனக்குஒரு சட்டை தந்தார்
அன்னாட் தொட்டெனக் குற்ற சட்டைஆசை
அவரோடு என்னையும் கடையிற் சேர்த்து
பின்னாள்என் பள்ளிக்கு மெய்ப்பையோடு
போகுமொரு மாணவனாய் ஆக்கிற்றம்மா.

## புனைபெயர் வரலாறு

நல்லெழுத்தர் சுப்பிர மணியமென்
நண்பர் "சைவ மாணவன்" சஞ்சிகை
கையெழுத்தில் கொணர்ந் ததற் கொருகதை
கட்டுனக் கிந்த காலத்துக் கேற்றபேர்
வையெனத் தில்லை யம்பலம் சிவசாமி
வாய்த்த "தில்லைச் சிவன்" எனப் புனைபெயர்
செய்து உள்ளம் சிலிர்ப்புற இப்பெயர்
சிறந்து எங்கும் தெரிய நிலைத்ததே.

## இனிக்கும் நினைவுகள்

இளம்வயதில் ஆண்பெண்எனப் பேதமின்றி
இவள்எனக்கு இவர்எனக்கு என்றுகூட்டிக்
களஞ்சேர்த்துக் கைகோத்து ஆடிப்பாடிக்
களித்ததனை கன்னைசேர்த் தோடித் தட்டு
மறித்ததனைக் கோவில்கட்டி விழாவுஞ்செய்து
மகிழ்ந்து நடம் ஆடியதை,வேடமிட்டு
நடித்ததனைக் காதலொடு வீரம்பேசி
நயந்த தெல்லாம் நினைக்கின்றேன் இனிக்குதென்னே!

## விதூஷகன்

அடிக்கழுவான் கடுதாசி யாற்றுடைப்பான்
அதுதான்நா கரிகமென அடித்துச் சொல்வான்
படிக்கவரான் சிங்களத்தில் கொச்சை பேசி
பறையவரா தமிழ் என்பான் "மம்மி இந்தப்
பொடிப்பயலைப் பாருங்கோ" என்று அஞ்சும்
பொலீஸ்காரன் மகன் கொழும்பால் வந்தாற் போதும்
அடிக்கடி ஆங்கில் உடையும் கீச்சுப் பேச்சும்
ஆக நிற்பான் எனக்குவிதூ ஷகனேஆனான்.

## முதன்முதலிற் பார்த்த படம்

சித்திரித்துச் சுவர்ஓரம் ஒட்டிவைத்துச்
சிரிக்கின்ற சினிமாப்பெண் மீதுகாதற்
பித்தாகிப் பத்துச்சதக் குற்றி மூன்று
பெரும் பொருளாய் நேர்ந்து வைத்த முடிச்சுத் தொங்க
பத்துக்கல் தொலை நடந்து பண்ணை தாண்டி
பரந்தமுற்ற வெளியினிலே வரிசை சேர்ந்து
ஒற்றைக்கா லிற்றிவஞ்செய் துள்ளே புக்கு
ஒளித்திரையில் "சதிலீலா" பார்த்தேன் பார்த்தேன்.

## வெள்ளாட்டுப் புத்தி

கன்னியர் காதலைத் தேடியே
காத வழிசென்று அங்கவள்
கண்ணிற் படாமை கண்டேங்கியும்
காணில் மறைந்துஉள் நாணியும்
சின்னாட் கழிந்து பிறிதொரு
சிட்டின் அடியொற்றித் திரிவதும்
இந்நாள் நினைக்கிறேன் என்னிடம்
இருப்பது வெள்ளாட்டுப் புத்தியோ?

## படிப்புப் பாழே

கட்டி வைத்த வெள்ளாட்டுக் கடாவைச் சுற்றி
காவல்இல்லா ஆடுகளெல் லாமிரங்கி
வட்டமிடும் வாறதுபோல் அந்த நாளில்
வளையவந்த வாலையவட்க் கொதுங்கிமாட்டேன்
இட்டமில்லை என்றிடவோ எனக்கு ஒன்று
இருக்கிறது என்றிடவோ அன்றி அ∴து
நட்டமென நாட்கள்பல நடித்ததாலே
நான் பட்ட அறிவுஎன் படிப்புப் பாழே.

## பாட்டாவின் பற்று

துலாவேறி நீர்இறைக்கச் செல்வேன் கூலி
சோற்றோடு சரி, முகத்தைப் பார்த்து மீண்டால்
விளா வேறிப் பழம்பறிக்கக் கேட்பார் செய்து
விளாம்பழம் இரண்டொன்று கூலி கொண்டு
அழாக் குறையாய் வீடுபோய் சேர்ந்தாற்போதும்
ஆரடா உனைப் போகச் சொன்னதென்று
'பளார்' என்று இரண்டுறைக்கும் முதுகில், பாட்டா
பதைபதைப்பார் பின் அழுவார் பற்றைக் காண்பேன்.

## அன்னையின் அகமகிழ்வு

எடுப்பார்கைப் பிள்ளையாய் ஏவல்செய்து
இடுவார்பின் கோவில்நா டகம்கூத்தென்று
விடுப்பார்வத் தாற்சென்று வீடுவந்தால்
விக்கியழும் அன்னைமடி யுட்கிடந்து
"படிப்பேன்நீ அழவேண்டாம்" என்றுதேற்றி
பள்ளியிலே ஒழுங்காகக் கற்றோருள்ளே
எடுப்பாகக் கற்றுச்சோ தனையிற் சித்தி
எய்தினேன் என்னன்னை இதயம்பூத்தாள்.

## சோதனையிற் சித்தியென்ற போது

"சோதனையிற் சித்தி"என்று என்பேர் பார்த்து
சொன்னார்கள் கல்லூரி அதிபர்,சொன்ன
நாதமடங் காமுன்பே நண்ப ரெல்லாம்
நான் நின்ற திசைபார்த்து நகவே செய்தார்
போதமிகும் முகப்பொலிவோ டுள்ளம் விண்டு
பொங்கியெழும் போதொருத்தி என்னைக் கள்ளக்
காதலுறு விழிசுருக்கிக் கௌவி நாணிக்
கால் நிலத்தில் கோலமிட்டு நிற்கக்கண்டேன்.

## தராதரம்

ஆண்டு நாற்பத் தைந்தில் தராதரம்
அடைந்தேன் அற்றைநாள் ஆங்கிலபாடையே
வேண்டுமெத் தொழிற்கும் தமிழ் எனில்
வீண்அன்றோ உத்தி யோகப் பிழைப்புக்கு
ஆண்ட ஆங்கில அரசினர் சீரிது
அரிய தமிழ் கற்றார் பெறுவது சட்டம்பி
வேண்டுமிந்தப் பதவியும் பணத்துக்கு
விலையாய்போனதிவ் விதியினுக் கென்செய்வேன்.

## ஆங்கிலக் கல்வி

இன்னவாறு ஆகவே ஆங்கிலம்
எழுத வாசிக்க அறிந்திடும் எண்ணமுட்
துன்ன யாழ்நகர் சென்றவென் முன்னரே
தொடர்ந்தான் ஏழரை நாட்டான், அறிந்திலேன்
பின்னர் வித்தி யாலயம் என்றருள்
பிறங்கு கல்விக் கழகத்தின் துணைவராம்
அண்ணல்வைர முத்துவின் ஆசிபெற்று
ஆங்கிலம்பயில் ஆசையில் முழ்கினேன்.

## வறுமை வருத்தம்

உணவுடை யுறை யுள்ளன மூன்றற்கும்
ஊற்றம் வற்ற உளம்மெலி வுற்றவென்
கனவும் பொய்த்தது, காலங்கை விட்டது
கனத்த நெஞ்சில் கல்வியின் நாட்டம் போய்
குணமும் கெட்டது, கோலமும் மாறவென்
கொள்கையும் மாறிக் கூட்டங்கள் சேர்வதும்
தினமும் யாழ்நகர்த் தெருக்களில் திரிந்துபல்
திரைப்படங்களில் சிந்தையைப் போக்கினேன்.

## ஊரும் நானும்

கைகளே கருவியாகக் கழனிகள் களமதாகப்
பெய்மழை வெயிலென்றின்றிப் பெருமிடர்க் கோய்வும்இன்றி
செய்தொழில் தெய்வம்என்றே சேவித்து உழைத்துஊரார்
உய்திட, உத்தியோக மோகத்தில் உழல லானேன்.

## உடல் உழைப்பும் உத்தியோகமும்

ஆய்விந்நிலை அடைந்ததிற் கேது வென்
ஆகும் என்று சிலபொழு தெண்ணினேன்
தூய நற்றொழில் பலவுள வாகவும்
துன்பம் அற்றது சொகுசெனக் கல்வியால்
மேயஉத்தி யோக விருப்பமே
மேவுமிந்நிலைக் காரணம் என்பதால்
காயும் நெஞ்சம் தமிழையும் அதனைநான்
கற்க நின்ற துணையையும் காய்ந்ததே.

## தினகரனிற் சிறுகதை

எண்ணினேன் என்நிலையைத் தமிழைக் கற்க
எனக்கு வாய்த்த ஆசிரியரை அவரது
வண்ணமா கவே வாழ நினைத் தின்று
வருந்த நேர்ந்ததை வார்த்தைகள் கோர்த்தொரு
சின்னமாகவே "நிழல்" எனும் சிறுகதை
செய் தனுப்பினேன் தினகரன் ஏட்டிற்கு
சின்ன அக்கதை பணம் ரூபா ஐந்தினைச்
சேர்க்கப் பின்எழுத் தூக்கம் பிறந்ததே.

## பூபாலசிங்கம் புத்தகசாலை

பூபால சிங்கம்என் இனிய நண்பன்
புத்தகக் கடைஎன்றன் பொழுது போக்கு
பாராத சஞ்சிகைபத் திரிகை இல்லை
படித்தவையோ பெரியாரும் அண்ணாவுந்தான்
தீராத காதலித்து தெரியா தன்று
திரா விடத்தின் உரித்தாளர் எனுங் கிறுக்கால்
ஆரா தனைசெய்தேன் திராவிடத்தை
அடுத் தென்றன் நண்பர்கட்கும் அதையே சொன்னேன்.

## தமிழ் நயப்பு

மல்லிகையின் பணிமனையில் ஜீவா மற்றும்
மணிநவலோர் டானியல் எஸ்.பொ.இன்னும்
சொல்லணிசெய் சில்லையூர் செல்வராசன்
சுவைமதுர கவிநாக ராசன் கோபால்
செல்லத் துரைநிருபர் நாவேந்தன் என்.கே
ரகுநாதன் தியாகனொடு நானும் வேறு
நல்லில்பார் சிலருஞ்சேர்ந் தொன்றுகூடி
நாள்தோறும் தமிழ் நயந்து களிக்க லானோம்.

## கல்கியும் அண்ணாவும்

அன்றொருநாள் கல்கியா சிரியர் யாழ்மா
அரங்கினிலே எதனையோ பேச வந்து
மன்றினிலே அண்ணாவின் புகழைப் பேசி
மகிழ்ந்தாரெம் கேழ்விக்கணை இலக்கை நோக்கி
நின்றுமறு பேச்செடுக்க அலமந் தென்று
நின்றகல்கி தாசர்களோ சினந்தார் எம்மை
இன்றுநினைக் கினும் உறைக்கும் அன்று எங்கள்
இனப்பற்றும் இலக்கியத்தின் உணர்வும்,வீறும்.

## கவிஞனான கதை

"பாட்டென்றாற் பண்டிதற்கே உரிய தென்று
பகர்வோரின் வாயடங்கப்பண் டிதராயன்றிக்
கேட்போர்தம் நெஞ்சினிக்கக் கிளருஞ் செஞ்சொல்
கிளுகிளுப்பை ஊட்டும்இன் கவிகள் எந்த
யாப்புமறி யாதியற்றிப் பரவக் கேட்டோர்
"யாதிவனின் கொடை" என்ற அங்கலாய்ப்பே
வாய்ப்பாக வளர்ந்தகவி ஏடு எல்லாம்
வரக்கண்டு அரங்கெல்லாம் வளைத்துக் கொண்டேன்.

## பழம்பிறவித் தொடர்பென்பார்

ஞானகுரு யாழ்பாணச் சாமியார்க்கும்
நவாலியூர்ப் புலவர்க்கும் கவியரங்கம்
தானமைத்து முற்போக்குச் சங்கம் கேட்க
தந்தகவி பலர்புகழந்தார் தமிழ் மறைக்காப்
போஎடுத்த விழாகளில்; சரவணையூர்,
கூட்டுமா நாடுகளில், முத்தமிழ் விழாவில்
பாவெடுத்து விளையாடி நின்றேன், கேட்டோர்
பழம்பிறவித் தொடர்பென்று நயந்து நின்றார்.

## ஏடுகளும் வானொலியும்

பட்டணத்து மச்சினியைப் பாட்டுச்செய்து
பார்புகழும் 'மறுமலர்ச்சி' இதழிற் சேர்த்து
அற்புதமாம் பாட்டென்று பலரும் போற்ற
அரியகவி வாணனாய்த் தலைநிமிர்ந்து
நற்றமிழில் ஓரங்க நாடகங்கள்
நனிசெய்து வானொலி அரங்கிற் பாடி
பத்திரிகை ஏடுகள் பலவுங் கேட்கப்
பாடல்,கதை யாத்தளித்துப் பயன்பெற்றேனே.

## !தமிழன் ஏடு நடாத்தியமை

"பழங்கதைகள் பலவுண்டு பொழுது போக்க
படித்தவர்கள் வகுத்தறியப் பனுவல் உண்டு
நலந்திகழும் சஞ்சிகைகள் நவல்கள் என்று
நாள்தோறும் பல்கிவளர் கின்றதாயின்
இளந்தமிழர் இதய ஒளி உலகிற் காக்கும்"
இலட்சியத்தால் "தமிழன்" இதழ் நடத்திநன்றாய்
வளர்ந்துசில திங்களிலே நின்றபோதும்
மாளாத அதன் புகழால் மகிழ்கின்றேனே.

## கலைச் செல்வி சஞ்சிகை நடாத்தியமை

ஐம்பத் தொன்றினில் நண்பர்கள் இருவரின்
ஆதரவுடன் "கலைச் செல்வி" என்றொரு
சஞ்சிகை திங்கட் கொன்றென யாழ்நகர்
சார்ந்த 'லக்கி' அச்சிற் பதித் தெழில்
விஞ்சக் கண்டுபல் சுவைஞர்கள் சேரவும்
விரும்பும் நல்எழுத் தாளர்தம் படைப்புகள்
தந்து போற்றவும் தமிழொடு தூதர்பால்
சார்ந்து ஆசிகள் பெற்றதும் நினைக்கிறேன்!

## கைமாறிய அரசியல்

ஆங்கிலரின் பிரித்தாளும் சூழ்ச்சி எம்மை
ஆதரிப்பார் போல்நடிக்க பதவி பெற்று
ஈங்கிருந்த தமிழர்களோ! "இந்தியா" தாய்
எனறெண்ணிச் சிங்களத்தை புறத்தே கண்டு
பாங்காக்க கதராடை புனைந்து காந்தி
பக்கதர்களாய் பாரதத்தைப் போற்றக்கண்ட
ஆங்கிலரோ "தமிழர்தமக் காகார்" என்று
அடிமைகளாய் சிங்களர்க்கே விடுத்துச் சென்றார்.

## சிங்களவர் ஆட்சி

சிங்களவர் சுதந்திரத்தின் பின்எம் வாழ்வைச்
சிதைத் "தடிமைக் கேதுகுடி உரிமை ஓடு
இங்கிருப்பின் சிங்களத்தைப் படித்தெம்மோடு
இரண்டறவே கலந்துவிடு இல்லை என்றால்
பொங்குமிந்து சமுத்திரத்தில் வீழ்ந்து செத்துப்
போஎன்று சொல்லாதே சட்டம் போட்டு
எங்களது இருப்பொழித்தார், தலைமைசெய்த
எம்தமிழர் போலியர்கள் கொழும்பில் வாழ்ந்தார்.

## ஈழத்தமிழர் எழுச்சி

இந்தநிலை சிந்தையினிற் புரட்சித்தீயை
இட்டெரிக்க ஆங்காங்கே எழுந்து கூடிக்
கொந்தளிக்கும் இளைஞர்களை ஒன்று கூட்டி
கொள்கைவகுத் துரிமைபெறப் போர்எடுத்து
வந்தார்கள் தந்தைசெல்வா வன்னியசிங்கம்
வல்லபடேல் அன்னடாக்டர் நாகநாதன்
இந்தநல்ல தலைவர்களின் தொண்டில் நானும்
இணைந்தீழ விடுதலையை இறைஞ்சி நின்றேன்.

## இலட்சிய முயற்சி

கூட்டாட்சிப் பாசறைகள் நாடு முற்றும்
கூட்டங்கள் மேடைகளில் கொள்கைப் பேச்சு
பாட்டுக்கள் சுதந்திரனில் மொழிமேற் பக்தி
பண்டுளது இன்றுமஅது மேலும் போதை
ஏற்றவெழுந் தீழமெங்கும் சமஷ்டி என்ற
எம்வேதம் எடுத்தோதி இயன்ற மட்டும்
கூற்றான வாறெமது கொள்கைத் தீர்வில்
குறியாக,இலட்சியத்தில் உறுதிபெற்றேன்.

## செல்வாவின் பாராட்டு

முதன்முதலில் தீவகத்துத் தேர்தலில் நான்
முனைப்பான தமிழரசுக் கட்சித் தொண்டன்
பதனம்மிகு நல்முளை "நவம்" வேட்பாளர்,
பவனிவர அவர்திறமை பற்றிச் சொல்லி
மிதமான எம்கட்சிக் கொள்கை பேசி
மிகநல்ல சான்றுகளை எடுத்துக் காட்ட,
"தரமான பேச்சென்று" தந்தை செல்வா
தமதுரையிற் பாராட்டத் தழைத்து நின்றேன்.

## புளியங்கூடற் பொதுக்கூட்டம்

ஜி.ஜி.பொன்னம் பலம்அறை கூவலாய்
சிறியன் என்றெனை மேடைக்கழைத்ததும்
வாச்ச மேடையில் ஏறியெம் மக்களின்
வாஞ்சை பற்றியான் வாதிக்கத் தொடங்கினேன்
"பேச்சு வேண்டாம் இறங்கென்றார் ஒருசிலர்
"பேசு பேசென" முன்னின்றோர் ஆர்த்தனர்
ஆச்சு அப்பொழு தொருபெரும் பொலிஸ்படை
அரண் அமைத்து எனைப்பேச வைத்தது.

## அந்தநாள் ஆசைகள்

படித்து நால்லதோர் பதவி பெறுவதும்
பார் மதித்திடக் கார்உலாப் போவதும்
துடிப்புள இளங்கவிஞனாய் அரங்குகள்
தோறும் தோன்றிப் புகழ்மிகச் சேர்ப்பதும்
நடிக்கும் இராச குமாரியை நேர்ந்தவோர்
நற்றனமலை நங்கையைக் காதலில்
முடித்து ஆடலும் பாடலுமா யின்பில்
முயங்கு மாசைகள் அந்நாள் இருந்தன.

## பொறாமையின் தரிசனம்

படித்துவிட்டு வேலையின்றிப் பகட்டாக
நாலுபேர் பார்க்க ஊர்குத்
துடிப்போடு சென்றுவிட்டாற் போதுமே
சும்மாமெல் கிறவாய்க்கு அவல்வேறு கிடைத்ததாச்சு
அடிக்கடியிவ் வாள்வாறான் ஆர்என் பார்க்கு
அடடாகேள் அறுதலியின் மகனென் பான்பற்
கடித்திவற்கும் வந்ததன்றோ காலமெனக்
கவன்றிடுவான் பொறாமையையும் கண்டுசிரித் தகன்றதுண்டே.

## எதிர்ப்புரையா என்நிலை

என்றன் மேற்சில பொய்க் குற்றச் சாட்டுகள்
எதிர்த்து நானறி யேனக் கூறினும்
அன்று நம்புவார் அரிது. என் நிலையது
அலட்டில் லாமல் அமைதியாய் இருந்தது
ஒன்றினால் சில நாட்கள் பின் உண்மைகள்
உணர்ந்துற வான பேருமுன் டவ்வகை
அன்றித் தம்முள்நாணி யெனைக்காண
அஞ்சுவார்சிலர் இன்றுமுள் ளார்கொலோ.

## திருமணம்

இந்தநிலை அன்றிருக்க எனது மாமன்
ஏர்சேர்ந்த தாமோதரம் பிள்ளைதன்னோர்
செந்தமிழ்ச் செல்விப்பேர் பெற்று அன்பு
சேர்ந்தகுண வழகியினைத் திருமணத்தால்
தந்துஎனைப் புரந்தாரத் தன்மை கண்டு
சார்புடையோர் மகிழ்ந்தார்கள் எனக்குஅன்று
சொந்தவொரு தொழில்இல்லை, காதல்ஒன்றே
தொழிலாக நாளோட்டித் தொடர்ந்து நின்றேன்.

## கலக்கிய காலம்

பேட்டுக் கிளியைப் பிடித்தினிய
பேச்சுப் பழக்கி உறவென்னும்
கூட்டில் அடைத்துக் கொவ்வையொடு
கொய்யாக் கனியும் கொடுத்தன்பை
ஊட்டி உறவை உறவளர்த்து
உலப்பில்லாத ஊற் றின்பம்
காட்டிக் கண்டு நாளெல்லாம்
களித்தேன் காலங் கலங்கிடவே.

## வேதனையும் சாதனையும்

சீதனமும் ஆதனமும் செழித்தென்ன வாழ்க்கைச்
சிறப்பிற்குத் தொழில்ஒன்று இன்றிஅந்நாள்
காதலினைச் சுவைதினிமை காண்பதற்கு நாளடைந்த
கவலைகளோ அநேகமந்தக் காலஞ் தந்த
சோதனைகள்! வேதனைகள்! சொட்டைகள்!சொல்லவா?
துணைகுவந்த அவள்தந்த சொத்தால் நீக்கிச்
சாதனை செய் தாசிரிய சாலை சென்றேன்
அவைகளொரு சரித மாகும்.

## ஆசிரியப் பயிற்சியும்சேவையும்

சூட்சியினால் ஆசிரியத் தொழில் பெற்றந்நாள்
சுமடைந்த சிலர்தேர்ந்த வழியில் சென்று
ஆட்சியிலே புகுந்தன்பு யேசு மார்க்கத்
தடைந்தவர் பால் ஆசிரியப் பயிற்சிபெற்று
மாட்சிமிகு இந்துபோட் ராச ரத்நம்
மனதுவந்து தந்த இடத் தலைமை ஏற்று
நீட்சியுள இப்பதவி சிறக்கச் சேவை
நீடிப்போ டாண்டுமுப்பத் தைந்துழைத்தேன்.

## கலாசாலை விடுதி வாழ்வு

வேலணையான் சிற்றம்பலம் என்றோர்நல்ல
விடகாரி,புங்கைநா வேந்தன்ஒல்காச்
சீலஞ்சொல் எழுத்தாளர் ரகுநாதன் காரை
சேர்ந்தமகா லிங்கமெனும் நடிகன் றானும்
ஏலவே எனதினிய நண்பர்,ஒன்றாய்
இருந்தனால் கலாசாலை விடுதி வாழ்வு
மாலளித்து மகிழ்வளித்து மற்றுளோர்முன்
மதிப்பளித்து வைத்தமையை மனங்கொள்கின்றேன்.

## தமிழர் தொடுத்த முதற்போர்

காலிமுகத் தலையெறிந்து குமுறியார்க்கும்
கடற்கரையில் பாராளும் மன்றின் முன்னே
வாலிபரோ டிழத்துக் காந்தி செல்வா
வன்னிய சிங்கமமிர் பலரொன்றாகித்
தேனித்த தமிழுக்காய் கிழக்கும் சேர்ந்து
செய்முதன் மொழிஉரிமை போரில் நின்று
மானத்த னானவர லாறு எண்ணி
மகிழ்வுற்ற தைந்து யூன் ஐம்பத்தாறே.

## முதற்போர்க் காட்சி

கடல் அலைகள் காலிமுகத் திடலில் ஆர்க்க
காடையர்கள் கல்லெறிய மக்கள் வெள்ளம்
மடைதிறந்தாற்போற்சூழ, நடு விருந்தோம்,
மாவேறிக் கேடயத்தோ டோடிச் சுற்றித்
தடைபோட்ட பொலிசாரும் இடையில் தாக்க
தண்டமிழர் செங்குருதி தரையிற் றோய
படைகாட்டித் தமிழ் உரிமை பறித்த சட்டம்
பண்டார நாயக்கே பண்ணி வைத்தார்.

## மனைப் போலி

மனைவியொரு மகன்தரற்குச் சென்றுவிட்டாள்
மனையிலென் அறையினிலே தனித்திருந்தேன்
நினைவொன்று "ஒருவனுக்கு ஒருத்தி" என்ப
நீங்காத விலங்காகும், ஆதி மாந்தர்
அணைத்தனர் ஓர் கட்டின்றிக் காவல் இன்றி
அது போல" என் நினைக்க ஒருத்தி வந்தாள்
பணைமுலையாள் நெஞ்சிறுகிப் படபடக்க
பதற்றமொடு 'வா' வென்ன வந்தாள் பின்என்?

## விழிக் கொடை

காற்றினில் ஏறவும் விண்ணினைச் சாடவும்
கல்வி என்ற
கோட்டையைத் தாவவும் கோபுரம் ஏறிப்
பதவி பெற்று
நாட்டினை ஆளவும் நான் நினைத்தோடி
உழைத்ததெல்லாம்
வீட்டினில் எனைஆள விரும்பிய மங்கையின்
விழிக் கொடையே!

## பிள்ளைப் பேறு

பிள்ளைகளை பெறுதல்பெருங் கொடையேஎன்று
பேசுவார்; கேட்டழவோ சிரிக்கவோ முடியாதின்னும்
உள்ளுவனோ பிள்ளைஒன்று பெறற்கு, ஏழு
உருப்படிகள் பிரியாது அணைக்கும் என்கை
தள்ளுவரே அவர்க்கென்ன எனக்கு அன்றோ
தாங்காத மனம் வைத்தான் தலைவன் என்னே
விள்ளுவது பிள்ளைகளால் பெறும்பேறொன்று
வினை, அடுத்து புத்திநைநீத் தொழித்தல் தானே.

## நூல்கள் வெளியீடல்

ஆண்டுபல வாகநாள் படைத்து வைத்த
அரியசில கவிதைகளைத் தொகுத்து நூலாய்
ஆண்டறுபத் தொன்றினிலே 'கனவுக் கன்னி'
அளித்ததுவும் அறுபத்து ஒன்பதின் கண்
வேண்டுமன்பன் 'எக்கவுண்டன்' பத்மநாதன்
விரும்பியதால் தாய்க்கவிதை நூலைச் செய்தும்
மீண்டெண்பத்தைந்தினிலே 'பாலர் பாடல்'
விருந்தாகத் தமிழுக்கு உவந்து வைத்தேன்.

## "தாய்" கவிதை நூல் அரங்கேற்றம் (யாழ்ப்பாணம்)

"தாய்" கவிதை நூல் அரங்கேற்றம் யாழ்மா
நகரினிலே தவிசாளர் பண்டிதர் ரத்நம்
முதற்பிரதி சண்முகலிங்கம் ஏற்றார்
மூதறிஞர் இரசிகமணி கனக செந்தி
நாதனினி குந்தமிழில் என்பாட்டுக்கு
நற்சான்றுப் பொழிவாற்றி நயந்து நின்றார்
சீதமொழிக் கரையோடு புதுமை லோலன்
சிறப்புவெளி யீட்டுரைகள் சிறக்கச் செய்தார்.

## அறிமுக விழா (குருநாகல்)

குருநாகல் சைவமாகா சபையில் டாக்டர்
குணக்குன்றாம் சுப்பிரமணியம் என்ற வள்ளல்
பெருமையுடன் தலைமைசெயச் செஞ்சொற் செல்வன்
பேரன்பன் இராசதுரை,கா.போ.சில்லைப்
பெரும்புலவன் செல்வராஜ் ஜனாப் ராசிக்
பிரிவறியாத் தமிழன்ஆ சிரியன் தியாகன்
அருமை நண்பர் நல்லறிஞ்ஞர் போற்ற நூலை
அறிமுகம் செய்திருந்து மகிழ்ந்தேனே அந்நாள்.

## கனவுக்கன்னி கவிதை நூல் வெளியீடு

ஆண்டறுபத் தொன்றுஎன் 'கனவுக் கன்னி'
ஆயநூல் வெளியீடு ஆத்திசூடிப்
பொன்மடியில் பாரதியார் கழகம் கூட்ட
புகழ்தலைமைக் குமரேச ஐயா தாங்க
விண்மண்டு புகழமிர்தலிங்கம் நூலை
வெளியிட்டு வைத்துரைக்கநா வேந்தன் போற்ற
இம்மண்ணின் மைந்தனென் றென்னை ஏத்தி
இராசையாப் பண்டிதரும் வாழ்த்தினாரே.

## சரவணையில் நடந்த பாராட்டு விழா

சரவணைச் சேவாமன்றத் தலைவராய் மேயசச்சி
தானந்த சிவம் சீர்சட்டத் தரணிதன் தூய நெஞ்சில்
கரவிலான் ஊரின்பேரால் கவிஞனென் றென்னைப் போற்றிக்
கௌரவித் திடவென்றுற்ற காதலால் இங்கோர் நல்ல
பெருவிழா எடுத்தா ராண்டு எழுபதில்,திருவார் செல்வன்
பெருமகன் மாணிக்கம்பொன் ஆடையைப் போர்த்து வாழ்த்த
அருமை நண்பர்கள்,ஊரோர்,ஆனபல் பேர்கள்மாலை
அணிவித்தும் புகழ்ந்தும் தங்கள் ஆவலாற்பா ராட்டினாரே.

### ஊர்த்தொண்டு

"ஊருக்குத் தொண்டு செய்ய வேண்டும்" என்று
உரைப்பார்கள் தொண்டு செய்யப் போனாற் போதும்
பேருக்குப்பெருநாசம், பேய்பிடித்தோர் மெல்லப்
பேசுவார் இவர்க்கு இதில் பெரிய லாபம்" (என்று)
நேருக்கு மதிப்புந்தாழ் மையும்காட்டிப் பின்னால்
நின்றிகழ்வர் இது உலகம், தெரிந்தும் ஊரில்
யாருமென் காலத்தில் தொட்டிராத
நற்பணிகள் பலவியற்றி நனிமகிழ்ந்தேன்.

### காலந்தந்த பணிகள்

சோழ வத்தை சனசமூக நிலையமும்
சோழ வத்தை உபதபால் நிலையமும்
சோழ வத்தை பள்ளம் புலங்களைத்
தொகுத்த கிராம முன்னேற்றச் சங்கமும்
வாழும் மக்கட்கோர் தொண்டென்ற கருத்தின்றி
வாழாவிருக்க மாட்டாவுள் ஏவலால்
சூழும்காலம் தொடக்கத் தொடங்கிப்பேர்
சொல்லச் செய்தவை இன்னும் பலபல.

### யாழ்நூல்நிலையத் தகனம்

குண்டர்களும் சிறீலங்கன் அமைச்சர்களும்
குரங்குகள்போல் வந்து தெற்குஆசிக்
கண்டத்தே மிகப்பெரிய நூல்நிலையம்,யாழ்நகரின்
கலைக்கோயில், எரியூட்டிக் களித்தபோது
விண்டெரியும் தீநாக்கு வானத்தை நக்கிஎழ
வீங்குபுகை கண்மயக்க மின்விளக்கு ஒளியிழந்து
மண்டுமிருள் திசைவிரியக் மயக்கமுற்ற தாவீதுத்
தொண்டர் உயிர் பிரிந்ததெனச் சொலக்கேட்டு துடித்தெனே.

### தமிழ் மறைக்கழகமும் தீவக எழுத்தாளர் சங்கமும்

தமிழ் மறைக்கழகத்தின் செயலராகத்
தமிழ்ப் பா.உ..காப்போவின் தலைமை ஏற்று
அமிழ்ந்தொத்த தமிழின்உயிர்க் குறளைப் போற்றும்
அரியபல மாநாடு கண்டு சான்றோர்
புகழ்கூறத் தீவக எழுத்தாளர் சங்கம்
போற்றுவகை நிறுவிஅதன் தலைமை ஏற்று
மிகநல்ல கதை கவிதை வாசித்தாய்ந்தும்
மேற்சிலதை வெளியிடவும் ஊக்குவித்தேன்.

## ஆத்திசூடி வித்தியாசாலையும் நானும்

ஆத்திசூடி வித்தியாசாலை என்
அம்மான் அப்புத் தம்பிதம் காணியில்
நேர்த்தி யான நினைவாக அமைத்தது,
நிகரிலாக்கட்டைச் சதாசிவ வாத்தியார்
கேட்டுக் கொண்டதால் இந்துப் போட்டாரின்
கிருபையாற்சோழ வத்தை நன்மக்களின்
மீட்புக்கான இப் பள்ளியின் அதிபராய்
மிகுந்த காலம் இருந்தோய்வு பெற்றனே.

## ஓய்வும் சோம்பலும்

காலை எழுதலும் கடற்கரைப் பக்கம்போய்
காணும் பற்றைகள் நாடிக் கழிப்பதும்
வேலையொண்திரை யோடு தொடுவானில்
விண்டு மேல்எழும் செங்கதிர் தொழுவதும்
மேலிற் குளித் தெழில் வீசை திருத்தலும்
மினுக்கி நுதற்கொளி நீறு பொருத்தலும்
வேலையொன்றினில் ஓய்வென விதித்ததால்
விடுத்துச் சோம்பி மடியுட் கிடந்தனே!

## பாராட்டும் நோயும்

ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணுற் றொன்றில்
ஆசிரிய சங்கம்நான் தமிழுக் காற்றும்
சேவையினைப் பாராட்டிப் பட்டுப் போர்க்கும்
செய்தியினைத் தந்தழைத்தார் புங்கை யூர்க்கு
நாயினுக்கோர் தவிசளித்த வாறு எண்ணி
நல்லதென ஈருருளி ஏறிச் சென்றேன்
"ஏய்! இதற்குந் தகுதியோ" என்பான் போன்றே
இடைமறித்தான் ஈசன்இரத்த அழுத்தம் வைத்தே.

## வளமான பத்தாண்டுகள்

(1970-1980)
போட்டது எல்லாம் பொன்னாய்
பொலிந்தவோர் காலம் அந்நாள்
மீட்டுளன் கடன்கள்,செந்நெல்
விளைந்தது உவரில்,காட்டுத்
தோட்டமும் பலித்துப் பல்கால்
தொடர்ந்த நட்டத்தை ஈட்ட
மாட்டோடு வண்டிமோட்டார்
வாகன வசதி பெற்றேன்.

## படைஎடுப்பும் அராலி ஓட்டமும்

குண்டடிக்கும் விமானங்கள்
குத்தி மெத்திச் சுழன்றடிக்க
கண்ட திசை எல்லாம்
காலாட்படை சுட்டு வர
பெண்டு பிள்ளை யோடு சில
பெண்களையும் ஏற்றி மாட்டு
வண்டிலொடு அராலி ஊர்க்கு
வந்து உயிர் தப்பிவிட்டோம்.

## ஒத்திகை

ஆண்டு நாற்பத்தொன்றோ இரண்டு
அந்த நாட்களில் எங்களின் பள்ளியில்
மூண்டுள உலகப் போர்தரும் பயத்தினால்
முழங்கும் ஏ.ஆ.பி.குழல் ஒலி திசைதோறும்
'பப்பப்' பூம்' எனப் படர்கின்ற ஒலியோடு
பற்களுள் தடியும் செவிகளுள் பஞ்சுமாய்
குப்புற விழுந்து குழிகளில் கிடப்போம்
ஒத்திகை நன்றென உரைத்திடும் ஊரே!

## விமானச் சாகச விளையாட்டு

தாழப் பறந்தோர் விமானம் எம்மூர்
தனைமீண்டொருகாற் சுற்றும் "பைலட்"
ஆளெம் மவராம் ஆகாவென்று
ஆர்ப் பரிப்போம் முன்றலில் நின்று
தோளுந் தோளும் முட்டத் துள்ளி
துடைகளைத் தட்டி கைகளை ஆட்ட
மேலும் மேலும் சாகசம் காட்டி
விரைந்து போமே ஐயோ!ஐயோ!

## அகிம்சைக் குண்டு

அப்போது ஆங்கில அரசர் அன்னியர்
ஆண்டார் நாமோ அடிமைகள் எங்களை
யப்பான் குண்டாற் பலியாக்காது
காக்கச் செய்தது கருணை அல்லவோ?
இப்போ வானத் திரைந்தது கேட்டால்
இற்றது வீடு,கோவிலோ டுயிர்கள்
அற்றன புத்தர்தம் அகிம்சைக் குண்டினால்
அழிந்தது நாடுநாம் அனாதையாகினமே.

## தாகமும் தவிப்பும்

முட்டி நிறைந் தொழுகப்பசுங் கிள்ளை நக்க
முப்பொழுதும் ஒழுக்குமா வரசங்காட்டு
கட்டையாண் வடலியினிற் சேர்த்து நல்ல
கற்கண்டு போலினிக்கும் கள்ளை அன்றே
வெட்டிய பச்சோலையிலோர் பிளாவைக்கோலி
வேண்டாம் எனாதூக்கி 'இனியுன் நோய்கள்
எட்டியும் பாராவென்று' சிரித்துச் சிங்கன்
"இன்னுமரை" எனவார்க்கக் குடிப்பதெப்போ?

## முற்றத்து வேப்பமரம்

உச்சிக் கதிர்வெயில் காயும் நேரம்
உயிர்ப்பு அடங்கிக் காற்றுற ங்கும்வேளை
பச்சை உடல் வெயர் கொள்ளும் போது
படுக்கக் குளிர்நிழல் தந்தென் மக்கள்
குற்ற இடிக்க உற வோடு கூடிக்
குந்தி இருந்துகூழ் குடிக்கநின்ற
முற்றத்து வேம்பும் என் வீடும் ஊரும்
முள்ளி படரப்பாம் போடுதாமே.

## அனுபவ உபாயம்

அரிய மானிடப் பிறவியில் நானொரு
அங்கம்,ஆணவம் ஆசை பொறாமையென்
றுரிய மானிடக் குணங்கள் என்னிடத்திலே
உண்டு,நீக்கிடப் பலவாறு முயன்றவை
இரிய விலையென் றிதற்கு இரங்குவேன்
"ஈசனே இரவை நீக்"கெனச் சிந்தையை
வரியக் கட்டிச் 'சிவாய நம' வென
வாழ்த்த நெஞ்சின் வருத்தம்சற் றோயுமே.

## தாமோகுணம்

தம்மாலே தாம்கெட்டார் பலர், அதற்குத்
தக்கசான் றொருவன்யான் ஆவேன் கேளீர்!
எண்ணாமற் கதைத்துப்பின் அதற்கு ஏங்கி
இரங்குவது தமோ குணத் தான தென்று
பின்னாலே சிந்தித்து பயனில் சொற்கள்
பேசேன்என் றாலோ தலைக்கன மென்றாரே
என்னாலே இவையாகா நடப்பதெல்லாம்
இறைசெயலென் றிருப்பதற்கும் இயலவில்லை.

## பழவினைப் பயன்

இராமநா டகத்தில் மிகுசைவ
இராவணன் ஆகி மண்டோதரிதனைச்
சோரமாகக் கவர்ந்து வனத்திலே
சொந்தமாக்கச் சிறையிடு வித்தல்போல்
சாரமற்ற செயல்களில் என்பெயர்
சாரநான்துய்த்த நன்மைகள் தீமைகள்
பாரமாக வருத்துதல் எவர்செயல்?
பழவினைதரும் பரிசெனத் தேறினேன்.

## உளந் தெளிய...

ஆகும் நாள்அதை என்செயல் என்பதும்
அழியின் ஈசன்மேற் பழிகளைச் சொல்வதும்
போகமார்தலும் பொறுமை இழப்பதும்
பொய்ய ரோடுற வாடி நலிந்ததும்
ஆகநானிங்கு அடைந்த துயர்களோ
அனந்தம்அத் தனையையும் விதியென
வேகும் உள்ளம், ஈசனை வந்தித்து
வேண்டி வாசகம் பாடவுள் தெளியுமே.

## கொக்கரிக்கவேண்டும்

ஒருகோழி முட்டையிட்டுக் கொக்கரித்து
ஊரெழுப்பும் "ஓகோ" வென் றூரார் கொள்வர்
ஒரு நூறு முட்டை இட்டும் அடக்கமாக
ஊர்ந்துவரும் ஆமைபோல் என்னூர் வாழ்ந்த
பெருமக்கள் நினைவாக அவர்மெய்க் கீர்த்தி
பேசுமிலக் கியங்கள்மதிக் கிரண்டொன்றாகப்
பெருவாரி வெளியிட்டும் அவற்றைப்பற்றிப்
பேசுவா ரிலையே! கொக்கரிக்க வேண்டும்போலும்.

## சுக்கலான மாற்றக் கடுதாசி

குப்பைக்குள் கிடந்தெடுத்துக் குளிர்நீராட்டிக்
கூழாக்கிக் கடுதாசி ஆக்கி விட்டார்
அப்பழுக்கு இல்லாத வெள்ளைத் தாளாய்
ஆகினாய் எடுப்பார்கை எதோ கீற
இப்படிவம் இவ்வண்ணம் என்று எல்லா
இலாகாவும் உலாவினாய் யாரோகையால்
எப்படியோ எனக்கு இடம் மாற்றம் என்று
எழுதக் கட்டளையாகிச் சுக்கலானாய்
அப்படித்தா னாயினும்நீ எனதுநண்பன்
அடித்தடித்து எழுதக்கைக் கிதம்செய்வாயே

## தன்கைப் பொருள்

என்வீட்டு முற்றத்து மல்லிகைப் பூவில்
இருக்கின்ற நறுந்தாது மணம்அழகு குறைந்தும்
முன்வீட்டு அலரிமணம் நனிபெருக்கிப் பார்க்கும்
மோகத்துக் கெங்கெதுவென் றில்லைக்கண் போலும்
தன்கையின் பொருள்மிகப் பெரிதிருக்கப் பக்கத்
தான்சிறிய பொருள்கண்டு வெ·.குமனம் என்னே!
என்வீடு மனைவி பொருள் எல்லாமே கசக்க
இரவல் எல்லாம் இனிக்குமொரு காலந்தா னென்ன.

## 'கூடல் வேலணை

பட்டாடை சரசரக்கும் பவுடர் நாறும்
பக்கத்தில் ஆளரவம் தெரியும் ஆங்கே
மெத்த இளைத் தவன்போலக் கால்கை நீட்டி
மிகஎளிதாய் புரண்டுதுயில் போற்கிடப்பேன்
சற்றிருந்து தளிர்க்கரங்கள் முதுகைநீவ
சரிந்து முகம் திருப்பிஇத ழால்ஒற்றி
"கொட்டுபனிக் குளிர்உள்ளே வாங்கோ" என்று
குயில் கூவித் துயில் வாங்கும் கூடல் விடே.

## இல்லத்து இறைவி

வல்லோசை அளபெடையாய் வழங்குசுவைக் கனிமொழியாள்
வரையாத கைவண்ணத் துலையிலிடும் வளமையினாள்
கல்விதணந் தகன்றாலும் கற்றாரை உபசரிக்கும்
கருணையினாள் எனைத்தாய்போல் காத்துவக்கும் காதலியாள்
செல்வஞ்சேர் விவசாயம் செய்துஉடற் செழிப்படைந்தாள்
சேய்கள்உயர் கல்விபெறச் செலவழித்துத் தவமிருந்தாள்
அல்லல்களை இதமாக்கி அன்பினைநெஞ் சுரமாக்கி
அடைக்கலந்தந் தெமைப் புரக்கும் அவள்,இல்லாத் தெனக்கிறைவி.

## நண்பனின் நினைவு

நான் பிறந்த மண்ணிலே நீயும் பிறந்தாய்
நான் கிடந்த தொட்டிலிலே கிடந்து வளர்ந்தாய்
நான் படித்த பள்ளியிலென் னோடு படித்தாய்
நான்சுவைத்த வாறவற்றை நீயும் சுவைத்தாய்
வான்கலந்த தியாக ராஜ இனியநண்பனே!
வைய வாழ்வை நீதுறந்த வாறுதேர்கிலேன்
ஊன்மெலிந்த உடலை நீத்து ஓடினாயடா
உனது எச்சத் துயர்வைக் காணக்கொடுத்த தில்லையே!.

## வசுவில் கிடைத்த ஏடு

வெயிலுக்குக் குடையாச்சு விசிறியாச்சு
விரிப்பாச்சு இருப்பதற்கு,வீசுங் கைக்கோர்
ஒயிலாச்சு,ஊர்நடுவே நாலு பேர்க்கு
உற்ற செய்தி படித்துக்காட் டிடவுமாங்கே
இயல்பாகக் கற்றோரும் கையை நீட்ட
இன்போடு சென்றுநன்றி பெற்றுமீளும்
மயலானேன் வசுவில்என் கைக்கு வந்து
மாளாத சஞ்சிகையின் மகிமை கண்டே.

## மாப்பிள்ளை வேட்டை

மோட்டார் சைக்கிள் ஒன்றை முற்றத்தில் எடுத்து விட்டு
மூக்குறுணிப் பிள்ளையாரை முன்அழைத்து என்மகட்கோர்
மாப்பிள்ளையைத் தேடும் மாமனித வேட்டையிலே
மனதாகப் புறப்பட்டேன்,மாதங்கள் ஆண்டுகளாய்
ஆப்பிட்டதில்லை,ஆனான தரகர் எல்லாம்
'ஆகட்டும் பார்ப்பம்' என அமைந்துவிட்டார்,அந்நிலையில்
கூப்பாடு தூரத்தில் கூடி விட்ட திருமணத்தால்
குதூகலித்தேன் என்வாழ்வில் குறிப்பிட்ட ஒருநாளே.

## பதுங்கு குளி மான்மியம்

போர்க்காலம் காகம், கரையப் பொழுது எழ
பொம்பர் வந்து குண்டுமழை பொழியப் பதுங்குகுளி
தூர்க்காத பக்கமாய்த் துடித்தோடி உள்நுழைந்தான்
துணையாகக் கடவுளரை தொழுது அழுதபடி;
பார்த்தான் வெளியே பாதைநடு வேயொளியில்
பாம்பொன்று படம்விரித்து ஆடிநிற்கக் கண்டுடலம்
வேர்த்து விதிர்விதிர்த்து விழுந்து கண்கள் மூடிவிட்டான்
விழித்தான்பின் பாம்பில்லை வெளியில் வந்தான் வீடில்லை.

## யாழ்வருகை

மண்ணைப் பொன்னை மாடாடு வீடென்ற
மதிப்புளபல செல்வங்கள் பறித்ததோ
டின்னும் என்னைப் பிடித்த சனி தொடர்ந்
திழுக்க ஏதிலியாகி நொடிந்துள
எண்ணம் மாறியென் இலட்சியம் பொய்த்துயிர்
இருப்பும் இன்றோ நாளையோ எனவாழ்வின்
வண்ணம்தேரா வகையுழன் றராலியூர்
வளங்களும் விட்டு யாழ்வந்த காலையில்;

## வன்னி வந்தோம்

வெள்ளாட்டு மந்தைக்குள் புலிகள்! காக்க
வேண்டுமென விரைந்தனவாம் ஓநாய்க்கூட்டம்
எல்லாமே எமக்கழிவைத் தரண்கண்டேங்கி
உறவொழிய ஊருராய் ஓடி நொந்தோம்
பொல்லாத கலிகாலம் பொருள் அழிந்து
போனதுடன் போகட்டும் உயிரைக் காத்து
கொள்வோமே என்றோடித் தென்மராட்சி
கூடல்புக்கு அங்கிருந்து வன்னி வந்தோம்.

## கிளாலிக் கரையில் கிடைத்ததுணை

செல்கள் கூவுது, வானும் இருளுது,
சேறு நாறுது, கிளாலிக் கரைஜன
வெள்ளம் புரளுது அவ்வேளையோ ராள்வந்து
"வேண்டும் ட்றாக்டர் எடு துறைக்" கென்றதும்
சொல்லி வைத்தது போலத் துறையிலே
சொகுசு வள்ளத்தில் ஏற்றி அனுப்பினார்
'வெள்' ளெனக் கடற் றுயர்அறிந் துடல்மிக
வெயர்த்தது 'கிடைத்த துணைதனைப்' போற்றினேன்.

## திருவுளப் பாங்கு

முல்லை தீவில் பெரும்படை ஒன்றுடன்
மோதி ஆயிரம் வீரரை வீழ்த்தி மண்
எல்லை மீட்டனர் என்பதால் என்மனத்
தெழுந்ததுள்ளல் உணர்வொன்று நெஞ்சினைக்
கிள்ளினும் இங்கும் இருத்தல் தகாதெனக்
கிளம்பும் என்னைக் கொழும்புக்கு வருகென்றென்
செல்வர் கேட்டதும் முகவரி கிடைத்ததும்
சிறுகூட்டு வாழ்க்கையும் திருவருட் செய்கையே!

## தடுப்புமுகாம்

"த" வென்றால் தடுப்பு முகாம் 'தனி' என்றால்
தலைமறைவு தடையைத் தாண்டிப்
போனாற்றான் 'பொடி' இல்லை,போக்கற்றார்க்கு
இவை ஒன்றும் புதுமை இல்லை
'இம்' மென்று சிறைக்காப்பும் "ஏன்" என்று
அடியுதையும் எவையுமின்றிச்
சும்மாவே வந்துவிட்டேன் சுடுகாடு இனிஎதுவோ
சுதந்திர முள்ளோனே!

## கொழும்பு வாழ்வு

கொழும்பு வந்தேன் உயிர்ப்பாது காப்பென் றெண்ணி
கோவில்களே தஞ்சம் எனக் கூடி நின்று
அழும்பேரோ டழுதேனா? அர்ச்சனைக்கு
ஐம்பதுநூ றளிப்பார்கண் டசந்து போனேன்
தொழும்பொழுதும் "சுற்றிவளைப்" பென்பார்அச்சம்
தொட்டகுறை விட்டகுறை தொடர்வதே போல்
விழுந்தெழுந்து புறாக்கூட்டு வீட்டுட்போஓய்
வேதனைகள் அடைகாப்பேன் தேதிஎண்ணி.

## நீரழிவும் நெஞ்சுநோயும்

வேரினிற் குறிஞ்சா, வயலிலே வரகு
விளைந்தது புன்செயிற் குரக்கன்
நீரிழி வென்ன செய்திடும் என்று
நிமிர்த்தின வேளையில் போரால்
ஊரிடம் பெயர்ந்து யாவையும் துறந்து
ஓடினார் ஒருவரங் கிலாமையைக் கண்டு
சேரிடம தேடி ஓடிமெய் இளைத்து
சேர்ந்தநோய் வருத்தஉள் மெலிந்தேன்.

## அந்தக்காலக் கதைகள்

பொழுது பொக்கொன்றும் இன்மையால் என்மனம்
போனகாலத்தை எண்ணி அழுவதை
எழுதினேனந்தக் காலக் கதைகளாய்
இவற்றை நூலுரு வாக்கவென் வேலணை
உழுவல் அன்பன் வீரசிங்க கம்ஒடு
உயர்திரு பத்ம நாதனும் உதவிட
பழுதிலாப்புது அழகொடு மல்லிகைப்
பந்தலில் ஜீவா பதித்துரு வாக்கினார்.

## நூல் வெளியீடு

ஆண்டு தொண்ணூற்று ஏழுதமிழ்ச்சங்க
அரங்கு கொழும்பில் அந்தக் காலக் கதைநூலை
மாண்புகழொடு வெளியிடத் தன்பெரு
மனங்கொள் வேலணை வீர சிங்கம்மற்று
ஆண்டகைதமிழ்ச் செம்மல் குணரத்நம்
அன்பார்செல்வர் பலர்நின் றுழைத்ததால்
ஈண்டிடம் பெயர்ந் தேதிலி யானதும்
இன்பமாக என்னுள்ளம் இனித்ததே.

## 1990ன் பின்வந்த எனது நூல்கள்

சந்தனப் பொதி கைத்தமிழ் போற்றிவாழ்
தாதர் வேலணைத் தீவுப் புலவர்கள்
சுந்தரவர லாற்றுநூல் "நான்" என்ற
சுயசரிதை சொலுமிந்த நூலையும்
சந்தஞ்சேர்தாழம் பூவெனும் நூலையும்
சார்புணர்த்து நாவலர் வெண்பாவும்
அந்தக்காலக் கதைகளும் தமிழினில்
ஆக்கஉடனான அருள்தனைப் போற்றுவேன்.

## இரசிகப் புரவலன்

சண்முக லிங்கம் எனும்உயர் சான்றோன்
தலைமைசெய் சுருவிலூர்த் தம்பியர் பேரன்
மண்புகழ் ரயர்த்தொழில் அதிபன் பகைவரும்
மதிக்கும் சால்புள மனநலச் சைவன்
விண்ணுளார் அபரக் கிரிகைநூல் செய்த
வித்தகன் என்னுடைக் கவிகளின் ரசிகன்
பொன்னளித் தென்கவி நூல்களைப் போற்றிய
புரவலன் "நான்" தமிழ், பொலியநிற் பவனே.

## தமிழ் மெல்ல வளரும்?

இல்லையே தமிழர்க்கு ஒருநாடு, மொழிகள்
எல்லாமே கலந்து தமிழ்கூழாக்கி ஆச்சு
கல்விபண் பாட்டுக் கட்டுகள் உலகக்
கடலில் கரையுது அகதிகள் ஆனோம்
"வில்லங்கம்" பிறர்க்காக்கிக் கைகட்டிப் பார்த்து
வெல்லுந் தமிழ்என்ற சொல்லோடு நின்றோம்
சோல்லத்தகாத்டா சொல்லியென்னாகும்
சோற்றுக்கும் பதவிக்கும் தமிழ்மெல்ல வளரும்?

## மனைவியின் ஆசை

உப்புக் கழியின் மீனுக்கும் கூழுக்கும்
ஒடியற் பிட்டுக்கும் உமிரிக் கீரைக்கும்
சப்புக் கொட்டினாள் என்மனை, போர்என்ற
சதியால் சூறைச் சருகுக ளாகினோம்
அப்பு ஆச்சி வாழ்ந்து மடிந்தமண்
ஆளும் வக்கின்றிக் கஞ்சிக்கும் றொட்டிக்கும்
தப்புத் தாளம் போடவோ "திரும்" பென்றார்
தர்மம் காக்கும் 'பொறு' என்று வேண்டினேன்.

## என்ன முகத்தோடு ஊருக்குப் போவேன

பொன்றும் உயிர்தானே போகட்டுமே என்றென்
பூமியில் நிமிர்ந்து நின்று
மண்ணுக்கு உரமாக மடிந்தேனா இல்லை
மதிகெட்ட என்னைப் பெற்ற
அன்னையைக் கைப்பற்றிக் கொடிநட் டாரென்ற
அவமானத்தால் நொடிந்தேன்
என்னமுகத்தோடு இனிச்செல்வ தூர்க்கென்று
என்நெஞ்சு பதறுகுதே.

## தீர்வைக் காணேன்

தலைமை பெறும் போரால் நிலவும் கொடுமைகள்
தாங்க முடிய வில்லை
நிலையாயோர் தேசியத் தலைமை இல்லாததால்
நீதி கிடைக்க வில்லை
உலகம் ஒருகைப் பிடிக்குள் அடங்கியும் ஒருவர்க்கும்
உண்மை தெரிய வில்லை
கலகம் விளைத்திடும் மானிடத்தால் தீர்வு
காணவும் முடிவதில்லை.

## இறுதி ஆசை

மண்மீண்டு, புழுதியிலே விழுந்துருண்டு
மனங்குளிர வேப்பமர நிழலில் ஆறி
தெண்ணீரில் குளித்திளநீர் குடித்துக்தேறி
திருப்பொலியூர் ஐயனார் கோவில் சேர்ந்து
கண்சோர ஆனந்தக் கூத்துமாடிக்
கவிபாடித் தமிழ்வாழ்க என்று ஆர்த்து
என்னூரின் சேறாடிப் போற்றிப் புன்னன்
கண்டியிலென் உடல்வேக வேண்டுவேனே.

## மறக்க முடியாத நண்பர்கள்

"அடைப்புக் குறிகள்" முதற்பல கவிகளை
ஆக்கி தமிட்குநூல் சேர்த்தவோர் பண்டிதப்
படைப்பாளி அல்லையூர் ஆறுமுகனோடு
பஞ்சாட் சரம் மண்டை தீவிலும் என்னுடைப்
படிப்புக் காலம் முதற்பல வழியிலும்
பண்பில் ஒத்த உளப்பாடு உடையராய்
நடிப்பற்ற நல்ல நண்பராய் வாழ்ந்ததை
நனவிடைத் தோய்தலால் 'நான்இடை வைக்கின்றேன்'.

## வளர்த்த பத்திரிகைகள்

'மறுமலர்ச்சி' வரதர் சுழி இட்டு
மகிழ்ந்து ஏடு துவக்கி வைத்தார்
தெறுகவி வனப்புச் சுதந்திரனில்
சிறந்துவரச் சிவநாயகம் சீர்மை செய்தார்
உறு சுவைஞர் இராச அரியரத்நம்
உவப்பொடு ஈழநாடு உய்த்து என்பா
பெறுதிறனை நயந்தார்சீர் எண்ணி நெஞ்சம்
பெருமையினால் நிமிர்ந்து நிறைந்ததன்றே.

## மலரவைத்த மல்லிகைப்பந்தல்

தோட்டம் துரவு தொழில் என்று
பல்லாண்டு தொடர்ந் தெழுத்து
நாட்டம் குறைந்து நானிருந்த
கோலத்தில் நாடி என்பால்
ஊட்டங் கொடுத்து "எழுதெழு" தென்று
உசுப்பி உளத்தில் உற்ற
வாட்டந் திருத்தி மல்லிகை பந்தலில்
மலரவைத்துக் காட்டினான் 'ஜீவா'வென் காதலனே.

## இந்தநூல்

என்ஊரின் அமரர்கட்கு
நான்அழுத மெய்க்கீர்த்தி
பன்னூறு, இனிஎனக்கு
யார்அழுவார்? நவஉலகு
'விண்ணானம்' எனத்தவிர்க்கும்
வீண்என்றும் விடும்எனவே
என்ஆவிஅழ வென்கை
எழுதி வைத்த திந்நூலே.

## சமர்ப்பணம்

பள்ளியிலென் மீதன்பு உரிமையுடன்
பாராட்டி விளையாட்டின் போது
தள்ளியடி பிடிபடினும் வெறுக்காது
தலையளித்தா தரித்தார்இன்று
கொள்ளியிலே போனார்கள், அவர்கட்கும்
குலவுநண்பர்,பிறர்,ஊரார்என்று
பல்லோர்தம் நினைவாக இந்தநூலைப்
படைத்தவர்க்கே அன்போடு சமர்ப்பிக்கின்றேன்.

## மீளா அடிமை

என்னை இன்னும் வாழ்வித்து, என்செயல்
எல்லாம் தலைப்பட்டு ஏற்று முடித்தருள்
மன்னு தில்லை மேடையான். அரசொடு
மருவும் வேம்பிட மாம்அரு உருவினன்
பொன்னின் வண்ணத் திருக்கொன்றை எருக்கொடு
பூமத்தை நொச்சிப் புதுமலர்ச் சூழல்சேர்
அண்ணல்,செம்பாதி அம்மையோ டெம்வினை
ஆளும்அப்பன் அவர்க்கென்றும் அடிமை நான்.

## கவிஞரின் நூல்கள்

| | |
|---|---|
| 1. கனவுக்கன்னி | 1961 |
| 2. தாய் | 1969 |
| 3. ஐயனார் அருள் வேட்டலும் திருவூஞ்சலும் | 1972 |
| 4. தில்லை மேடைத் திருப்பாட்டு | 1974 |
| 5. பாப்பாப்பாட்டுக்கள் | 1985 |
| 6. 'நான்' சுயகாவியம் | 1993 |
| 7. வேலணைத்தீவுப் புலவர்கள் வரலாறு | 1996 |
| 8. தாழம்பூ | 1996 |
| 9. அந்தக் காலக் கதைகள் | 1997 |
| 10. நாவலர் வெண்பா பொழிப்புடன் | 1997 |
| 11. பூஞ்சிட்டு பாப்பாப்பாட்டு | 1998 |
| 12. தில்லைச் சிவன் கவிதைகள் | 1998 |

Admiral Graphics Colombo - 06